# உதயன்



www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 27 கதிர் 357 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 02 சனிக்கிழமை (17/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00


## 16 வருடங்கள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம்,நவ.17

கொலை, கொள்ளையில் ஈடுபட்டவருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் 16 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

தனிமையில் இருந்த மூதாட்டியைக் கொலை செய்துவிட்டு அவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்த குற்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் தீர்ப்புக்காக நேற்று வெள்ளிக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

பண்டத்தரிப்பில் தனிமையில் வசித்து வந்த பூலோகம் பூமணி (வயது-84) என்பவரே கொலைசெய்யப்பட்டார். அவரிடம் இருந்த தங்க நகைகள் உட்பட ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

2008 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டில் பண்டத்தரிப்பு தாளையடியைச் சேர்ந்த ஈஸ்வரன் பிரகாஸ் என்பவர் மறுநாள் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேக நபர் சார்பில்

பார்க்க பக்கம் 4

# நாட்டில் அபிவிருத்தி வேண்டும் என்றால் தமிழருடன் அதிகாரங்களைப் பகிருங்கள்

### நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, நவ.17

இனப்பிரச்சினையைத் தீர்க்க அதிகாரங்களைப் பகிர வேண்டும். இல்லாவிட்டால் அரசு எந்த முயற்சிகளை செய்தாலும் இந்த நாட்டை முன்னேற்றவோ, அபிவிருத்தி செய்யவோ முடியாது. தாமதிக்காது அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும். - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார் ஐ.தே.க வின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல. அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த வரவு- செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள வற் வரி மூலம் அரசு 500 கோடி ரூபாவை இலாபமாக எதிர்பார்த்துள்ளது.

இன்று தொழில்வாய்ப்பில்லாததால் வடக்கு, கிழக்கு, தெற்கு இளைஞர்கள் தொழில் பெறுவதற்காகப் படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்கின்றனர். முதலில் வடக்கு, கிழக்கு இளைஞர்கள் மட்டும்தான் அங்கு சென்றனர்.

பார்க்க பக்கம் 4

# போரால் வடக்கில் 65,000 பேருக்கு மனநலம் பாதிப்பு

### சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, நவம்பர் 17

வடக்கு - கிழக்கில் 30 வருடங்களாகத் தொடர்ந்த போர் காரணமாக 65 ஆயிரம் பேர் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிற அதிர்ச்சித் தகவலை சுகாதார அமைச்சு உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

இவர்களுள் 62 ஆயிரத்து 674 பேர் ஏற்கெனவே சிகிச்சை பெற்றுள்ளனர், 2 ஆயிரத்து 556 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்று பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது பிரதி அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

போர் நடவடிக்கைகளின்போது வட மாகாணத்தில் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனைபேர்? இவர்களுக்கு எங்கே சிகிச்சை அளிக்கப்

பார்க்க பக்கம் 4

## இந்திய உறவுகள் ஆரோக்கியம்

கொழும்பு,நவ.17

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் ஆரோக்கியமானதாகவே இருக்கின்றது என்று வெளிவிவ்கார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். இதனால் சீனாவுடனான உறவுகளில் பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் நேற்று அவர் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று வரவு-செலவுத் திட்ட உரை மீதான இரண்டாவது வாசிப்பின் ஆறாவது நாள் விவாதத்

பார்க்க பக்கம் 4

## பதற்றத்தில் கண்டி மாவட்டம்; 200 மாணவர் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, நவ.17

கண்டி, நுகவெல ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த 200 மாணவர்களுக்குத் திடீரென உபாதை காரணமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உடல் அரிப்பு, மயக்கம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட இந்த மாணவர்கள், கட்டுகஸ்தோட்ட மற்றும் தித்தபஜ்ஜல வைத்தியசாலைகளில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாலாங்கொடை வெலிகேபொல ஆரம்ப பாடசாலை, கம்பளை, பன்வில

பார்க்க பக்கம் 4

# ஐ.நாவின் புதிய அறிக்கையால் இலங்கைக்கு கடும் நெருக்கடி

### விசாரணைகளின்போது சாட்சியாகவும் மாறும்

ஜெனிவா, நவ.17

ஐக்கிய நாடுகள் சபை இனிவரும் காலங்களில் இலங்கை தொடர்பிலான விடயங்கள் ஆராயப்படும் போது சபையின் உள்ளக விசாரணை அறிக்கை பயன்படுத்திக்கொள்ளப்படும் என ஐ.நா. அறிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு இறுதிக் கட்ட போரின்போது ஐக்கிய நாடுகள் சபை பொது மக்களைப் பாதுகாக்கும் கடமையை உரிய முறையில் மேற்கொள்ளத் தவறியதாகக் குற்றம் சுமத்தி உள்ளக அறிக்கை குற்றம்சுமத்துகிறது.

இந்த அறிக்கைத் தகவல்களைப் பயன்படுத்தி இலங்கை தொடர்பான விடயங்களில் காத்திரமான பங்களிப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளக மீளாய்வு அறிக்கை போர் வலயங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கடமைகளை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும்

பார்க்க பக்கம் 4

### அறிக்கையில் சில பகுதிகளை அழித்தமை சரியானதே: ஐ.நா.

நியூயோர்க்,நவ.17

இலங்கையில் இறுதிப் போரின் போது ஐ.நாவின் செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு அறிக்கையில் சில பகுதிகள் கறுப்பு மையினால் தணிக்கை செய்யப்பட்டமை சரியானதே என ஐ.நா. அதிகாரிகள் நிலைப்படுத்தியுள்ளனர்.

ஐ.நா. அதிகாரிகள் சிலரின் பெயர்கள் வெளியாகாமல் இருக்கவும், முக்கிய இரகசிய

பார்க்க பக்கம் 4

## வாயு கசிவால் இருவர் சாவு; 9 பேர் பாதிப்பு

கொழும்பு, நவ.17

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட வாயு கசிவு காரணமாக இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், 9 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு வைத்

பார்க்க பக்கம் 4

## ஜெனிவாவில் இலங்கையை இந்தியா மீண்டும் எதிர்க்கும்

புதுடில்லி, நவ.17

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் மற்றொரு தீர்மானம் கொண்டு வந்தால் இந்தியா அதனையும் ஆதரிக்கும் என இந்திய மத்திய இணையமைச்சர் நாராயணசுவாமி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களி

பார்க்க பக்கம் 4

## வன்னியில் நேற்றுமுன்தினம் தேசிய மர நடுகை

முல்லைத்தீவு,நவ.17

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் 'தேசத்தின் நிழல்' தேசிய மரநடுகை நிகழ்வுகள் வன்னிப் பிரதேசத்தில் பரவலாக நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

பாடசாலைகள், அரச நிறுவனங்கள், பொது இடங்களில் முற்பகல் 9.39 மணி சுபநேரத்தில் இந்த நிகழ்வு பரவலாக முன்னெடுக்கப்பட்டது.

''பசுமை உலகத்திற்கு பங்குதாரராவோம்'' எனும் தொனிப்பொருளில்பாடசாலை மட்டத்தில் மரநடுகை நிகழ்வுகள் இடம்பெற்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் பிரதேச செயலக ரீதியாக இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சிமாவட்டத்தில்மர நடுகையின் ஆரம்ப நிகழ்வு பூநகரி, நல்லூர் கிராமத்தில் காலை 9.39 மணிக்கு நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் அன்றைய தினம் 60 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பளை மத்திய கல்லூரி, கிளி.முருகானந்தாக் கல்லூரி, யோகபுரம் மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினரும் மாவட்ட சுற்றாடல் திணைக்கள அதிகாரிகளும் கோட்டக் கல்வி

பார்க்க பக்கம் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரைக் காக்க தவறிய ஐ.நா. 2013 ஜெனிவாவில் விவாதம்

## சர்வதேச ரீதியில் எழுந்திருக்கும் விமர்சனங்களை எதிர்கொள்ள செயலர் பான் கீ-மூன் அதிரடி

கொழும்பு, நவ.17

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் மீதான ஐ.நா. பொதுச் செயலாளரின் உள்ளக விசாரணைக் குழுவின் அறிக்கை எதிர்வரும் மார்ச்சில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இறுதிப் போரில் ஐ.நா. நடந்து கொண்ட விதம் குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இதனாலேயே அது பற்றி மனித உரிமைகள் சபையில் விவாதிக்க ஐ.நா. முடிவு செய்துள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றத் தவறியது குறித்த விவரங்களை ஐ.நாவின் உள்ளக விசாரணைக் குழு வெளிப்படுத்தியிருக்கிறது. அதன் அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் பான் கீ-மூன் கடந்த புதன்கிழமை வெளியிட்டார்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் பொதுமக்களின் உயிரிழப்புக்களைத் தடுக்க ஐ.நா. உரிய கவனம் செலுத்தவில்லை என சர்வதேச ரீதியில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. எனவே எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இதனை முன்வைத்து விவாதிக்க ஐ.நா. சபை தீர்மானித்துள்ளது.

போர்க் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகங்கள் சுதந்திரமாகச் செயற்படாமல் போனமைக்கான காரணங்கள், அந்தச் சூழலுக்கான பின்னணி என்பன பற்றி இந்தக் கூட்டத் தொடரில் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளுக்குத் தன்னிலை விளக்கமளிக்க ஐ.நா. செயலர் உத்தேசித்திருக்கிறார் என்றும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.17

வெளிமாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்களுக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கைத் தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் ஹெமுனு விஜயரட்ண பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். அனைத்து வெளிமாவட்டத் தனியார் பஸ் உரிமையாளர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-14)

## இந்திய வீட்டுக்கு பயனாளி தெரிவு

வலி. வடக்கு, நவ. 17

வலி வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் இந்தியன் வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே/221 இளவாலை வடக்கு, ஜே/223 வித்தகபுரம், ஜே/225 கொல்லங்கலட்டி, ஜே/226 நகுலேஸ்வரம், ஜே/228 தெல்லிப்பழை ஜே/231 மாவிட்டபுரம், ஜே/ 232 மாவிட்டபுரம் தெற்கு, ஜே/243 குரும்பசிட்டி ஆகிய இடங்களில் வாழும் மக்களுக்கு இந்தப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறிப்பிட்ட படிவங்களை இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமதுபிரிவில் உடனடியாக பதிவு செய்து பெற்றுக்கொள்ள முடியும் என கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.(ம-86)



யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஆளுநர்கள் மாநாட்டின்போது...

## ஷிராணி மீது தெரிவுக்குழு விசாரணை



குற்றப் பிரேரணை தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் விசாரணைக்கு வருமாறு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 23ஆம் திகதி விசாரணை நடக்கும்.

பிரதம நீதியரசருக்கு எதிராக 14 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பைச் சேர்ந்த 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப் பிரேரணை மீதே விசாரணை நடத்தப்படவுள்ளது.

இந்த குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள 11 பேரடங்கிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தலைமை வகிக்கின்றார். (உ-சி)

## மணல் கடத்தியோருக்கு ரூ.80 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம்,நவ.17

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற இருவருக்கு நீதிமன்றத்தால் 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

மண் கும்பானில் இருந்து வேலணை நோக்கி இரண்டு உழவு இயந்திரங்களில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றவர்களே ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர். இருவரும் மண்கும்பான் மற்றும் வேலணையைச் சேர்ந்தவர்கள்.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா 40 ஆயிரம் ரூபா வீதம் 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மணலும் பறிமுதல் செய்யப்பட்டது.

உழவு இயந்திரங்களின் உரிமைக் கோரிக்கைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-4)

ஆளுநர்கள் மாநாட்டின்

## ஒலி அமைப்புக்கு மட்டும் 100 லட்சம் ரூபா செலவு

யாழ்ப்பாணம், நவ.17

ஆளுநர் மாநாட்டுக்காக யாழ்ப்பாணம் வந்த ஏனைய மாகாண ஆளுநர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் சுற்றுலா சென்றனர். இதற்காக விமானப் படையினரின் உலங்கு வானூர்திகளை வடமாகாண சபை வாடகைக்கு அமர்த்தியுள்ளது. இதற்காக பல லட்சம் ரூபாக்கள் வரையில் வடமாகாண சபை விமானப்படைக்குச் செலுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக ஆளுநர்களின் மாநாடு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த மாநாட்டுக்காக 9 மாகாண ஆளுநர்கள் அவர்களது குடும்பங்கள் மற்றும் ஆளுநர்களது செயலாளர்களும் அவர்களது குடும்பங்களும் யாழ். மாவட்டத்துக்கு வந்திருந்தன.

இவர்கள் அனைவரும் வடமாகாண சபையின் நிதிச் செலவில் ஒழுங்குசெய்யப்பட்ட தனியார் விடுதியில் தங்கவைக்கப்பட்டனர்.

நேற்று 6 ஆளுநர்களும் அவர்களது குடும்பங்களும் நயினாதீவு மற்றும் நெடுந்தீவுக்குச் சுற்றுலா சென்றனர். அதன் பின்னர் முல்லைத்தீவிற்கும் சுற்றுலா சென்றனர். இதற்கு விமானப்படை ஹெலியே பயன்படுத்தப்பட்டது. அதற்காகப் பல லட்சம் ரூபாவை வடமாகாண சபை வாடகையாகச் செலுத்தியது.

மேலும் ஆளுநர் மாநாட்டுக்கான ஒலியமைப்புக்கும், பதாகைகளுக்கு மாத்திரம் தென்னிலங்கையிலுள்ள நிறுவனத்துக்கு 100 லட்சம் ரூபா பணத்தை வடமாகாண சபை தனது நிதியிலிருந்து வழங்கியுள்ளது.

இதனைவிட ஆளுநர்களின் மாநாட்டுக்காக வடமாகாண சபையின் சகல திணைக்களங்களினதும் வாகனங்கள் பெறப்பட்டுள்ளன. வடமாகாண சபையின் சகல வாகனங்களும் 3 வாரங்களுக்கு முன்னர் ஆளுநர் அலுவலகத்தால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதில் நல்ல நிலையிலிருந்த வாகனங்கள் மாத்திரம் ஆளுநர் மாநாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட வாகனங்கள், வாகனச் சாரதிகள் யாழ். நகரிலுள்ள பிறிதொரு விடுதியில் தங்கவைக்கப்பட்டனர். குறித்த விடுதிக்கும் பல லட்சம் ரூபா வரையில் வடமாகாண சபை பணத்தை வாரி இறைத்துள்ளது.

இதேவேளை நேற்றைய தினம் மாகாண ஆளுநர்களின் மாநாடு மூடிய அறைக்குள் 3 மணி நேரமே இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதில் ஆராயப்பட்ட விடயங்கள், எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் எந்தவொரு உருப்படியான விடயமும் எந்தவொரு ஊடகத்துக்கும் தரப்படவில்லை. (உ-5)

## நேற்றும் 7 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம்,நவ.17

டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை மட்டும் 7பேர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பட்டுள்ளனர். என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாதத்தில் மட்டும் இவ்வாறு 44 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்த வருடம் நேற்று வரையான காலப் பகுதியில் 435 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாத்திரம் சுழிபுரம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், உரும்பிராய், குருநகர், நாவாந்துறை மற்றும் பாசையூர் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த-4)

## ஐ.நாவின் புதிய அறிக்கையை கவனத்தில் எடுத்தது கனடா

### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

இலங்கைப் போர் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக விசாரணை அறிக்கையை வரவேற்றுள்ளது கனடா. கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயட், இந்த அறிக்கை இலங்கை மக்களால் இதுவரை நிரலிடப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய விவரங்களை வெளிக்கொணர்ந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு, மனித உரிமைகள் மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களையும், போரில் தப்பி எஞ்சியிருப்பவர்களையும் காக்க எந்தவொரு பொருத்தமான நடவடிக்கையையும் எடுக்கவில்லையென்பதை அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

"எமது பிரதமரும், நானும், மனிதவுரிமைகளை மதித்தல், இன ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதல் என்பவற்றில் இலங்கை முன்னேற்றம் காணவேண்டும் என்பதைச் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் கூறி வருகின்றோம். இலங்கை அரசு மக்களின் நலன்களை முன்னிலைப் படுத்தவேண்டுமெனக் கனடா கேட்டுக்கொள்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரின் அறிக்கையையும் நாம் கவனத்தில் எடுத்துள்ளோம்" - என்றார் ஜோன்பயட். (உ-சி)

## மக்களைப் பலிகொடுத்தாவது புலிகளை அழிக்க துணிந்த அரசு

பொதுமக்களைப் பலிகொடுத்தாவது தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பது என்ற முடிவில் இலங்கை அரசு உறுதியாக இருந்தது என்று ஐக்கிய நாடுகளின் மனித நேயப் பணிகளுக்கான முன்னாள் தலைவர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் பற்றிய விமர்சனங்கள் குவிந்து வரும் நிலையில் ஜோன் ஹோம்ஸ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.


"இலங்கையில் இறுதிக்கட்ட போரின் போது என்ன நடந்தது என்பதைப் பகிரங்கப்படுத்தியிருந்தாலோ அல்லது அங்கு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைத் தெரிவித்திருந்தாலோ மோதல்களை நிறுத்தியிருக்க முடியும் என்பதை ஏற்க முடியாது.

இறுதிப் போரில் எத்தனைபேர் கொல்லப்பட்டனர் என்பது குறித்து எவருக்கும் உறுதியான தகவல் தெரியாது. இதனால் ஐ.நா. மீது மட்டுமேமுழுக் குற்றத்தையும் சுமத்துவது ஏற்புடையது அல்ல.

என்ன விலையைக் கொடுத்தாவது அல்லது பொது மக்களைப் பலிகொடுத்தாவது தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பது என்ற முடிவில் இலங்கை அரசு உறுதியாக இருந்துள்ளது.

இந்தத் திட்டத்தை எந்த ஒரு நாடும் தடுத்துவிடக் கூடாது என்பதிலும் மிகக் கவனமாக இலங்கை அரசு செயற்பட்டது. உண்மையில் அப்போது மிகவும் சங்கடமான ஒரு நிலையில்தான் ஐ.நா. இருந்தது" - என்றும் அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடைப்பெடுக்கும் நிலையில் காணப்படும் துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்தின் அணைக்கட்டைப் பாதுகாக்கும் பொருட்டு மண்மூடைகள் அடுக்கப்படுகின்றன. (க-18)

### போக்குவரத்து வசதி இல்லாததால்
## துணுக்காய் வலய மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்குமாறு கோரிக்கை

அக்கராயன், நவ. 17

துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வசதிகள் இல்லாததால் இங்கு கல்வி கற்றுவரும் பாடசாலை மாணவர்கள் தினமும் ஐந்து தொடக்கம் ஏழு கிலோ மீற்றர் தூரத்தை நடந்து அல்லது கண்ணில் தென்படும் ஏதாவது வாகனத்தில் ஏறிப் பயணிக்க வேண்டிய அவல நிலையில் காணப்படுகின்றனர்.

உதாரணமாக தென்னியங்குளத்தைச் சேர்ந்த இடைநிலை வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் ஏழு கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள கோட்டைகட்டிய குளம் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர். இவர்களுள் அநேகர் கால்நடையாகவோ அல்லது ஏதாவது வாகனங்களில் தொற்றியோ செல்வதைக் காணமுடிகின்றது.

எனவே இத்தகைய மாணவர்களை இனங்கண்டு சைக்கிள்கள் வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

போக்குவரத்து இடர்களை எதிர்கொள்ளும் மாணவர்கள் சிலர் ஆண்டுதோறும் பாடசாலையை விட்டு விலகிச்செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## முல்லைத்தீவில் தையல் பயிற்சி நிலையம்

கிளிநொச்சி, நவ.17

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்யும் வகையில் ஐ.ஓ.எம்.நிறுவனத்தால் புதிதாக அமைக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையம் கடந்த வார இறுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர் ஐ.மாதவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தையல் பயிற்சி மண்டபத்தை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் திறந்து வைத்துள்ளார்.

நிகழ்வில் ஐ.ஓ.எம். நிறுவனத்தைச் சேர்ந்த பிரிட்டன் பிரதிநிதி மெல்கம், முல்லைத்தீவு மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் திலீபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னர் பெண்களைத் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தின் ஊடாக ஏற்கனவே ஏராளமான பெண்கள் பயன்பெற்றுள்ளதுடன் இதனை மேலும் விரிவுபடுத்தும் வகையில் குறித்த தையல் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## அதிபர்கள் இல்லாத பாடசாலைகள்

அக்கராயன்,நவ.17

பூநகரிக் கல்விக் கோட்டத்திலுள்ள நான்கு பாடசாலைகள் அதிபர்கள் இல்லாமல் இயங்கி வருகின்றன என்று கூறப்படுகிறது.

துணுக்காய்த்தீவு மகா வித்தியாலயம், ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம், கரியாலை நாகபடுவான் இல.02 பாடசாலை, இல.03 பாடசாலை என்பனவே பல மாதங்களாக அதிபர்கள் நியமிக்கப்படாத நிலையில் இயங்கி வருகின்றன.

இந்தப் பாடசாலைகளுக்கு உடனடியாக அதிபர்களை நியமிக்குமாறு பெற்றோர்கள், வலயக் கல்வி அலுவலகத்தினரிடம் கோரிக்கை விடுகின்றனர். (க-18)

# விடிவு காலத்தை எதிர்கொள்ளும் ஒதுக்கப்பட்ட மன்னார் கழுதைகள்

### உச்சப் பயனைப் பெறுவது குறித்து ஆலோசனைகள்



மன்னார், நவ.17

வேண்டத் தகாத மிருகமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மன்னார்க் கழுதைகளுக்கு விடிவு காலம் பிறந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

மன்னார் நகர சபை இங்கு சுமார் 200 வருடங்களாக் வாழ்ந்து வரும் சுமார் 500 க்கும் மேற்பட்ட கழுதைகளின் உச்ச பயனைப் பெறுமுகமாக கடந்த 5 மாதங்களாக ஆலோசனைகளை நடத்தி வந்தது.

மேலும் ஆஸ்திரேலிய 'டயஸ்போரா லங்கா' வின் உதவி கோரப்பட்டபோது அவர்கள் பல வெளிநாட்டு மிருக வளர்ப்புச் சங்கங்களுடனும், கால்நடை பாதுகாப்பு வைத்தியர்களுடனும் கலந்துரையாடியதன் பேரில் அநாதரவான மன்னார் கழுதைகளுக்கு ஒரு விடிவு காலம் ஏற்பட்டுள்ளதாக மன்னார் டயஸ்போரா லங்கா அமைப்பின் பிரதிநிதியான சின்கிலேயர் பீற்றர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த 7,8,9 ஆம் திகதிகளில் இந்தியாவிலிருந்து மூன்று ஆலோசகர்கள் மன்னாருக்கு வருகை தந்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இக்குழுவின் தலைவராக புதுடில்லியைச் சேர்ந்த வினோத் கருணா 'செயற்பட்டார். இவருடன் செல்வி இராம் பர்வின், சென்னையைச் சோர்ந்த மருத்துவர் ரமேஸ், ஆஸ்திரேலிய டயஸ்போரா லங்காவின் தலைவர் ஜெரமி லியனகே ஆகியோரும் இங்கு வருகை தந்தனர்.

இவர்கள் மேற்படி தினங்களில் மன்னார் அரச அதிபர், மன்னார் நகர சபைத் தலைவர், செயலாளர், நகர சபை ஊழியர்கள், மன்னார் கால்நடை வைத்தியர், பொதுசுகாதார பரிசோதகர்கள், கழுதை வளர்ப்பு இளைஞர் குழுத் தலைவர் மயூரன், மாவட்ட சுற்றுச் சூழல் அதிகாரி போன்றவர்களைச் சந்தித்ததுடன் கிராமிய மட்ட அமைப்புக்களான சாந்திபுரம் மாதர் சங்கம், எழுத்தூர் சலவைத் தொழிலாளர் சங்கம், மன்னார் பழைய ரயில் நிலையத்திலுள்ள பொதுமக்கள், மன்னார் மாற்றாற்றல் புனர் வாழ்வு அமைப்பு உத்தியோகத்தர்கள், மன்னார் வர்த்தகர்கள், ஏனைய பொதுமக்கள் போன்றவர்களிடம் கேள்விக் கொத்து மூலமாகவும், கழுதைகளின் பிரயோசனங்கள் பற்றி பயிற்சியளித்ததன் மூலமாகவும் பல ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த ஆய்வின் மூலம் மன்னார் மக்களில் ஒரு சிலர் கழுதைகளின் பிரயோசனத்தை அறிந்து கொண்டதுடன் இவற்றைப் பராமரிப்பதன் மூலம் அவைகளின் உச்ச பயனைப் பெறமுடியுமென நம்பிக்கை தெரிவித்தனர்.

மேலும் கழுதைகளை செல்லப் பிராணிகளாக மாற்ற முடியுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதன் வாய்க்குக் கடிவாளம் இடுவதன் மூலமாக மாடு, குதிரைகள் போன்று பல வேலைகளுக்கு அவற்றைப் பயன்படுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மன்னாரில் 50 வருடங்களுக்கு முன்னர் பொதிகள் சுமக்கும் வேலைகளை கழுதைகள் மேற்கொண்டிருந்தன.

இதேவேளை ஐக்கிய இராச்சியத்திலிருந்து கழுதைகள் புனர்வாழ்வு நிபுணர்கள் ஐந்து பேர் அடுத்த மாதம் மன்னாருக்கு வருகை தரவுள்ளனர்.

இதனால் வேண்டப்படாத மிருகமாக ஒதுக்கி விடப்பட்ட மன்னார் கழுதைகளுக்கு ஒரு விடிவு காலம் பிறக்குமென மன்னார் மக்கள் எதிர்பார்ப்பதையும் அவதானிக்க முடிகின்றது. (க-12)

## மின்சாரம் தாக்கி யுவதி சாவு

வவுனியா, நவ.17

வவுனியா கணேசபுரம் பகுதியில் யுவதி ஒருவர் மின்சாரம் தாக்கியதில் சாவடைந்தார்.

கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 34 வயதான ஞானேந்திரன் டெல்சி என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

கடந்த சனிக்கிழமை இரவு சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற முற்பட்ட வேளையில் மின் வயர் இணைப்பில் மின்சாரம் பாய்ந்ததால் பாதிக்கப்பட்ட இந்த யுவதி வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிப்பதற்கு முன்னரே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை யடுத்து அங்கு சென்ற மின்சார சபையினர் குறித்த யுவதி சட்டவிரோதமாக மின்சாரம் எடுக்க முற்பட்டதை உறுதிப்படுத்தினர்.

---

சிலர் இவ்வாறு சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெறுகின்றனர்.

---

வவுனியாவில் இன்னமும் மின்சாரம் வழங்கப்படாத கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் சிலர் இவ்வாறு சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இவ் வருடத்துக்குள் மின்சாரம் வழங்கப்படுவதாகக் கூறிய அதிகாரிகள் இன்னும் அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுக்காமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-402)

## முத்துஐயன்கட்டு–யாழ்ப்பாணம் தனியார் பஸ்சேவை ஒழுங்கில்லையென பயணிகள் முறைப்பாடு

### இடைநடுவில் இறக்கிவிடும் சம்பவங்களால் அவதி

முல்லைத்தீவு,நவ.17

முத்துஐயன்கட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான சேவையிலீடுபடும் தனியார் பஸ்கள் ஒழுங்கான வகையில் தமது சேவைகளை வழங்குவதில்லையென பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பஸ் உரிமையாளர்கள் தமக்கு வழங்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் செயற்படாது தமது வசதிக்கேற்றவாறு சேவைகளை மேற்கொள்வதாகவும் பயணிகளால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திடீரென முன்னறிவித்தல் வழங்கப்படாது சில வேளைகளில் இந்த பஸ் சேவை நிறுத்தப்படுவதால் பயணிகள் வேறு வாகனங்களுக்குப் பணம் கொடுத்து ஒட்டுசுட்டான் சென்று அங்கிருந்து நெடுங்கேணி ஊடாகப் புளியங்குளத்தையடைந்து வவுனியாவிலிருந்து வரும் பஸ்களில் யாழ்ப்பாணம் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளதோடு அதிக நேரம் எடுப்பதாகவும் கூறப்படுகிறது.

சிலவேளைகளில் குறிக்கப்பட்ட இடத்திலிருந்து புறப்படாது இடைநடுவிலிருந்து பஸ் சேவை ஆரம்பிக்கப்படுவதாகவும், யாழ்ப்பாணம் செல்வதற்கென பஸ்களில் ஏறும் பிரயாணிகளை இடைநடுவில் இறக்கி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இடைநடுவில் பயணிகளை இறக்கிவிட்ட சம்பவம் கடந்த 12 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் இடம்பெற்றதாகப் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு தெரிவித்தனர்.

இவ்வாறான செயற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட தனியார் பஸ் சங்கம் நடவடிக்கை எடுத்து நிலைமையைச் சீர் செய்ய வேண்டும் என்று மக்கள் கோருகின்றனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புலன்ஸும் போனது

யாழ்ப்பாணம்,நவ.17

ஆளுநர்களின் மாநாட்டுக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் (மந்திகை வைத்திய சாலை) அம்புலன்ஸ் வடமாகாண ஆளுநரால் பெறப்பட்டதால் இரு தினங்களாக வடமராட்சி பிரதேசத்தின் 3 வைத்தியசாலைகளுக்கு ஒரு அம்புலன்ஸே சேவையில் ஈடுபட்டது.

ஆளுநர்களின் மாநாட்டில் அவசர உதவி தேவைப்பட்டால் வழங்குவதற்காகவென யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அம்புலன்ஸ் கடந்த புதன்கிழமை பெறப்பட்டுள்ளது. இந்த அம்புலன்ஸ் 'ரில்கோ' விடுதியில் கொண்டுவந்து விடப்பட்டது.

பருத்தித்துறை வைத்திய சாலையில் இரண்டு அம்புலன்ஸ்கள் இருந்தன. இதில் ஒரு அம்புலன்ஸ் ஆளுநர் மாநாட்டுக்கு எடுக்கப்பட்ட நிலையில் மற்றைய அம்புலன்ஸ் பழுதடைந்து கராஜில் விடப்பட்டிருந்தது.

கராஜில் விடப்பட்டுள்ள அம்புலன்ஸ் நீண்டகாலமாகவே பழுதடைந்த நிலையிலேயே உள்ளது. இதனைத் திருத்துவதற்கு மாகாண சுகாதார அமைச்சு பணம் ஒதுக்கியிருக்கவில்லை.

பருத்தித்துறை வைத்திய சாலையில் இரண்டு அம்புலன்ஸ்களும் இல்லாததால், கரவெட்டி வைத்தியசாலையின் அம்புலன்ஸ் பருத்தித்துறை வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் திடீரென அந்த அம்புலன்ஸும் பழுதடைந்தது.

இந்த நிலையில் வல்வெட்டித்துறை வைத்தியசாலையின் அம்புலன்ஸே, பருத்தித்துறை, கரவெட்டி வைத்தியசாலைகளுக்கும் சேர்த்து இரு நாள்களாகச் சேவையில் ஈடுபட்டது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரனைத் தொடர்புகொண்டு 'உதயன்' கேட்டபோது:

பருத்தித்துறை வைத்திய சாலையின் இரண்டு அம்புலன்ஸ்களும் திருத்தப்பட்டு மீண்டும் பாவனையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ஆளுநர் மாநாட்டு வளாகத்தில் ஒரு அம்புலன்ஸ் உள்ளதே, அந்த அம்புலன்ஸ் எந்த வைத்தியசாலையில் இருந்து பெறப்பட்டது என மீண்டும் கேட்டதற்கு:

''ஒரு மெடிக்கல் ரீம் அங்கு போயுள்ளது. நான் கூட்டத்தில் இருக்கிறேன்'' என்று சொல்லி தொலைபேசி அழைப்பைத் துண்டித்தார்.

ஆளுநர் மாநாடு நடைபெற்ற இடம் யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து 5 நிமிடப் பயணத் தூரத்திலேயே அமைந்துள்ளது. அந்த 5 நிமிடங்களுக்கே இத்தனை முன்னேற்பாடுகளும்.(உ-5-4)

## தீக்காயங்களுக்குள்ளான பெண் சாவு

யாழ்ப்பாணம், நவ. 17.

தீக்காயங்களுக்கு இலக்கான நிலையில் கடந்த திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

கரவெட்டி சித்திவிநாயகர் கோயிலடியிலுள்ள வீடொன்றில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ராஜேந்திரம் பத்மினி (வயது-34) என்பவரே தீக்காயங்களுக்கு இலக்கானார்.

இவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். நான்கு நாள்களின் பின்னர் இவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-16)

## ஓரினச் சேர்க்கையாளர் செலுத்தினர் அபராதம்

கொழும்பு, நவ. 17

பொது இடத்தில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இரு ஆண்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இவர்கள் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டபோது கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பு கோட்டை நீதிமன்றில் பொலிஸார் இவர்களை முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் இருவரும் தலா 1,500 ரூபா அபராதத் தொகையைச் செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

இரு ஆண்களும் சுமார் 40 முதல் 50 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-16)

## வாயு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வாயு சேமிப்புப் பணியில் ஈடுபட்ட போதே இந்தவிபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை வாயுக்கசிவு எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பில் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-சி)

## பதற்றத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தன்ன வித்தியாலய மற்றும் கம்பளை ஜினராஜ கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களும் கடந்த இரு தினங்களாக உபாதை காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. சுகாதார அமைச்சு இது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

## வன்னியில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அதிகாரிகளும் கலந்துகொண்டு சம்பிரதாய நிகழ்வுகளுடன் மரங்களை நட்டுவைத்தனர்.

''தேசத்தின் நிழல்'' மரநடுகை நிகழ்வுகள் நாடுபூராகவும் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-400)

## அறிக்கையில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஆவணங்கள் பகிரங்கப்படாமல் இருக்கவுமே அவ்வாறு செயற்பட்டதாக ஐ.நா. அதிகாரி சுசான் மல்கோரா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஆலோசனைக் குழுக் கூட்டங்கள், அங்கு நடைபெற்ற விவாதங்கள் மற்றும் சங்கேத மொழித் தகவல்கள் ஆகியன இவ்வாறு மறைக்கப்பட்டவற்றில் மிக முக்கியமானவை. ''இவை முக்கிய இரகசிய விடயங்கள். அவை நீக்கப்பட்டால் அறிக்கையின் உண்மைத் தன்மை மாறிவிடாது'' என்றும் சுசான் கூறினார்.

விசாரணைக் குழுவுக்கு இவை அனைத்தும் கிடைக்கப் பெற்றிருந்தன. அந்தத் தகவல்கள் பகிரங்கமாவதை ஐ.நா செயலர் விரும்பவில்லை என்றார் சுசான்.

''சில இடங்களில் சில அலுவலர்களைப் பற்றியும் அறிக்கையில் குறிக்கப்பட்டிருந்தது அவர்களுக்கு அதனால் சிக்கல் ஏற்படலாம். தனிப்பட்டமுறையில் அவர்களின் பாதுகாப்பு பாதிக்கப்படலாம்'' என்று சுசான் மேலும் கூறினார்.

அறிக்கையில் சில பகுதிகள் அழிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக உள்ளக மீளாய்வுக்குழுவின் தலைவர் சாள்ஸ் பெற்றி கூறுகையில், ''அறிக்கையின் உண்மைத் தன்மையில் அல்லது அதன் இறுதிவடிவத்தில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை'' என்றார்.

வெள்ளைக் கொடி விவகாரம் பற்றிக் கேட்கப்பட்டபோது, ''விடுதலைப்புலிகள் சரணடைவை இலங்கை அரசை ஏற்றுக் கொள்ளுமாறு செய்வதற்கு ஐ.நா. தரப்பில் நேர்மையான முறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டன; ஆனால் அது பயன் தரவில்லை'' என்றார் பெற்றி. (ம)

## ஐ.நாவின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளக மீளாய்வு அறிக்கையில் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படும் என மேலும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஜெனிவாவில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

டம் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடர் கடந்த மார்ச் மாதம் நடந்த போது, இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்திருந்தது.

எனினும், அந்தப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருந்த முக்கியமான சில விடயங்களை மாற்றியமைக்குமாறு இந்தியா வலியுறுத்தியதால் அமெரிக்கா அதை மாற்றியமைத்தமை குறிப்பிடத்தக்கது. (உ-சி)

## இந்தியா...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தில் உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கு பேசும் போது இந்தியா இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது, இதனால் முதலீட்டாளர்கள் இங்கு வரத் தயங்குகின்றனர் என்று குற்றஞ்சாட்டினர். ஆனால் அது தவறு.

அண்மைக்காலத்தில் இந்தியாவின் பிரதான அமைச்சர்கள் ஆறு பேர் இங்கு இராஜதந்திரப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர். உறவுகள் சீரில்லை என்றால் இந்திய அமைச்சர்கள் எப்படி இங்கு நட்புறவுடன் வருவார்.

இந்திய முதலீட்டாளர்களும் வர்த்தக சம்மேளனத் தலைவரும் இங்கு வந்தனர். அவர்கள் இங்கு பெரும் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளனர். விசேடமாக ஆடை உற்பத்தித்துறையில் அபிவிருத்திகளை ஏற்படுத்த உறுதியளித்துள்ளனர்.

புதிதாகப் பதவியேற்றுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் பேச்சுக்களை நடத்தும் சந்தர்ப்பம் கிடைத்தது. இரு நாடுகளுக்கும் இடையில் அவ்வப்போது சிறு சிறு பிணக்குகள் ஏற்பட்ட போதும் உறவுகளில் பாதிப்புகள் ஏற்படவில்லை.

இரு நாடுகளுக்கும் இடையில் காலம் காலமாக புவியியல், வரலாற்று, பொருளாதார ரீதியான உறவுகள் உண்டு என்பதை மறந்து விடக்கூடாது.

சீனாவைப்பற்றியும் இங்கு குறிப்பிட்டார்கள். நாட்டில் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மேம்பாட்டுக்கு சீனா பெரும் பங்கினை வழங்கியுள்ளது.

அதேபோன்று வளைகுடாவில் உள்ள அரபு நாடுகள் இங்கு பெருமளவிலான முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளன. முன் எப்போதும் இல்லாத வகையில் போக்குவரத்துப் பாதைகள் உட்பட பெரும் உட்கட்டமைப்புகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதால் இங்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை ஆரம்பிக்க முன்வருகின்றனர்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்பட்டபோது வளைகுடாவில் உள்ள கட்டார், சவூதி அரேபியா போன்ற நான்கு நாடுகள் இலங்கைக்கு ஆதரவளித்தன. அத்தோடு நின்றுவிடாமல் எமக்காக தீவிரமாகப் பிரசாரமும் செய்தன என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று தசாப்பதங்களின் பின் சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நமது அரசின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் உலக நாடுகளைப் பெரிதும் கவர்ந்துள்ளன என்றார். (த)

## 16 வருட...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சட்டத்தரணிகள் எவரும் முன்னிலையாகவில்லை. அதனால் எதிரி சார்பில் வாதாட அரச செலவில் சட்டத்தரணி மேனகா நியமிக்கப்பட்டார்.

வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியங்களை முன்னர் அரச சட்டவாதியான வி.திருக்குமரன் நெறிப்படுத்தியிருந்தார்.

பின்னர் வழக்கு எதிரி தரப்பில் விளக்கத்துக்காக எடுக்கப்பட்டது. எதிரி சாட்சிக்கூண்டுக்குள் வந்து சாட்சியமளித்திருந்தார். தான் கொலை செய்யவில்லை என்றும் கொள்ளையடிக்கவில்லையென்றும் அவர் தனது சாட்சியத்தில் கூறியிருந்தார். அவரை அரச சட்டவாதி செல்வி நளினி கந்தசாமி குறுக்கு விசாரணை செய்திருந்தார்.

கொலை செய்யப்பட்ட மூதாட்டியின் பிள்ளைகள் திருமணமாகி வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டதனால், மூதாட்டி தனித்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

தொடர் விளக்கத்தின் பின்னர் கடந்தவாரம் தொகுப்புரை இடம்பெற்று வழக்குத் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கின் தீர்ப்பை ஆணையாளர் அறிவித்தார்.

''கொலைக் குற்றச்சாட்டில் எதிரி தண்டனைச் சட்டக்கோவையின் 297 ஆவது பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றத்தைப் புரிந்துள்ளார் என மன்று கருதுவதால் அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு 8 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

''கொள்ளையடித்த குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளமையால் அந்தக் குற்றத்துக்கும் 8 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்படுகிறது. இரண்டு தண்டனைகளையும் எதிரி ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும்'' என்று மேல் நீதிமன்ற ஆணையாளர் தனது தீர்ப்பில் உத்தரவிட்டார். (த-4)

## நாட்டில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இப்போது தெற்கு இளைஞர்களும் செல்கின்றனர்.

தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் எனச் சொல்லப்பட்டுள்ளபோதிலும் ஒரு தொழிற்சாலை கூட அமைக்கப்படவில்லை.

எமது நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகள் வரவேண்டும். நீங்கள் கடந்த நவம்பர் மாதம் தொழில் முயற்சிகளைக் கையேற்கும் சட்டமூலத்தைக் கொண்டுவந்தீர்கள். அப்படிச் செய்தால் எப்படி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருவர்?

போர் முடிந்து 4ஆவது வருடத்தில் காலடி எடுத்துவைத்தும் நாம் எதிர்பார்த்த பலனை இன்னும் அடையவில்லை. இந்த நிலையில், 100 நாடுகள் 210 பிரேரணைகளை இலங்கைக்கு எதிராக ஐ.நா. சபையில் சமர்ப்பித்துள்ளன. இந்த நிலையில் எப்படி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருவர்?

போர் முடிந்த கையோடு நீங்கள் அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுத்திருந்தால் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்திருக்கும். வெளிநாட்டு முதலீட்டாளர்களும் வந்திருப்பர். நாம் அதிகாரப் பகிர்வுக்குச் சென்றால்தான் நாடு அபிவிருத்தியடையும். இந்தியாவில் இந்த நிலைமை இருப்பதால் அந்த நாட்டின் மாநிலங்கள் அபிவிருத்தியில் போட்டியிடுகின்றன.

இலங்கையில் அரசியல் உறுதிப்பாடு தேவை. இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு தேவை. அப்படி இல்லாமல் நீங்கள் என்ன செய்தாலும் நாட்டை முன்னேற்ற முடியாது. அரசு தாமதிக்காது அரசியல் தீர்வை வழங்கவேண்டும்.

எமது இளைஞர்கள் தொழில் கேட்கிறார்கள். பந்தயக் கார்களைக் கேட்கவில்லை. இதனால்தான் படகுகளில் ஏறி ஆஸ்திரேலியா சென்று கடலில் செத்து மடிகின்றார்கள். இங்கு இருப்பதைவிட செத்து மடிவது மேல் என அந்த இளைஞர்கள் துணிந்துவிட்டனர்.

1,500 இளைஞர்கள் இவ்வாறு காணாமல் போயுள்ளனர். பெற்றோர் இதைக் கூறுவதற்குப் பயத்தில் உள்ளனர். இளைஞர்களுக்குத் தொழில் வழங்கினால் ஏன் அவர்கள் நாட்டை விட்டு ஓடுகின்றனர்? - என்றார். (உ-சி)

## போரால்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

படுகின்றது? இவர்களையும் விசேட தேவையுடையவர்களாகக் கருதி நிவாரணங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என விநாயகமூர்த்தி கேள்வி எழுப்பினார்.

''யாழ். போதனா வைத்திய சாலையில் 1,271 பேரும், மன்னார் வைத்தியசாலையில் 407 பேரும், வவுனியாவில் 878 பேரும் உள்நோயாளர்களாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

''ஏற்கனவே, யாழ். போதனா வைத்தியசாலையில் 25 ஆயிரத்து 976 பேரும், ஏனைய பிரதேச வைத்தியசாலைகளில் 18 ஆயிரத்து 361 பேரும், மன்னாரில் 4 ஆயிரத்து 981 பேரும், வவுனியாவில் 9 ஆயிரத்து 355 பேரும், கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 514 பேரும், முல்லைத்தீவில் ஆயிரத்து 287 பேரும் என 62 ஆயிரத்து 474 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு அரச மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றது'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்களின் ஆபத்பாந்தவராக ஐ.நா.வை ஏற்க முடியாதே...!

வன்னி மண்ணில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின்போது, இலங்கை அரசாங்கம் அதில் வென்றுவிட வேண்டுமென்று எமது அண்டை நாடான இந்தியா மற்றும் அமெரிக்கா உட்பட அனைத்துலக நாடுகள் விரும்பின. அதற்கான பலவகை உதவிகளை அவை நல்கின.

போர் நடைபெற்ற காலத்தில் தமது உதவிகள் குறித்த தகவல்கள் கசிந்துவிடக் கூடாது என்பதில் அவை மிகமிகக் கவனமாக இருந்தன. அவை மறைத்தும் மழுப்பியும் வந்த, இரகசியமாக வழங்கப்பட்ட உதவிகள் எல்லாம் தற்போது விலாவாரியாக வெளிச்சத்துக்கு வந்துவிட்டன.

அனைத்துலக மக்கள் மன்றம் என்று கொள்ளப்படும் ஐக்கிய நாடுகள் சபையும் அதன் உயர்மட்ட அதிகாரிகளும் போரில் சிக்குண்ட பொது மக்களைப் பாதுகாப்பதில் தமக்குரிய பணிகள், பொறுப்புகளில் இருந்து தவறிவிட்டனர், "சேம் சைட் கோல்களை" போட்டு அடித்து வந்தனர் என்ற மூடுமந்திரமும் இப்போது வெளிக்கிளம்பிவிட்டது!

அதாவது, போரின் இறுதிக்கட்டத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுகிறார்கள் என்பதனை நன்றாக அறிந்திருந்தும், அதனைத் தடுப்பதற்கான அதிகாரமும் வலுவும் தனது கைவசம் இருந்தபோதிலும், ஐ.நா.சபை அவற்றைப் பயன்படுத்தவில்லை என்பது நிதர்சனமாகிவிட்டது.

இன்னொரு வளமாக நோக்கினால், பெரும் எண்ணிக்கையான நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களின் உயிர்கள் பறிக்கப்படுவதற்கு, உலகப் பெருமன்றம் என்று வர்ணிக்கப்படும் ஐ.நா. சபை ஒருவகையில் உதவியும் ஒத்தாசையும் வழங்கியிருக்கிறது.

சார்ள்ஸ் பெற்றி தலைமையிலான ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக விசாரணைக் குழுவின் அறிக்கை, இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கு அதன் உயர் அதிகாரிகள் தவறிவிட்டனர் என்று தெரிவித்திருப்பதை, செயலாளர் நாயகம் பான் கீ-மூன் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

ஐ.நா. உள்ளக விசாரணைக்குழுவின் அறிக்கை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படுவதற்கு முன்னர் பி.பி.ஸி. உலக சேவை அதன் உள்ளடக்கத்தில் உள்ள பொட்டுக்கேடுகளை வெளிப்படுத்திவிட்டது. அதனாலேயே, ஐ.நா. செயலாளர் நாயகம், தமது பக்கத்தின் தவறு களை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டுள்ளார். இல்லையேல் ஐ.நா.வின் உள்ளகத் தட்டிக்கழித்தல்களை மறைத்திருக்கக்கூடும்.

* வன்னிப்போரின்போது ஏற்பட்ட உயிர்ச்சேதங்களின் விவரங்களை ஐ.நா.மன்றம் வெளியிடத் தவறியமை.

* போர் வலயத்துக்குள் சிக்குண்ட மக்களை பாதுகாப்பதற்கு ஐ.நா.வின் உயர் அதிகாரிகள் தலையிடாமல் - முயற்சி செய்யாமல் - இருந்தமை.

* பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் குறித்த தகவல்களை வெளிப்படுத்தாமல் தவிர்த்துக்கொண்டமை.

இவையே, ஐ.நா. சபையின் செயற்பாடுகள் குறித்து அதன் உள்ளக விசாரணைக்குழு வெளிப்படுத்தியுள்ள பிரதான குற்றச் சாட்டுகள் ஆகும்.

இலங்கை அரசுக்குப் பயந்தே, மேற்கண்ட தகவல்களை உத்தியோகபூர்வமாக வெளியிடாது ஐ.நா. உயர்மட்ட அதிகாரிகள், மிகக்குறிப்பாகச் செயலாளர் நாயகம் தவிர்த்துக்கொண்டார் என்று உள்ளக விசாரணைக்குழு அழுத்தித் தொட்டுக்காட்டுகிறது.

ஐ.நா. அதிகாரிகளை வன்னியிலிருந்து வெளியேற வேண்டா மென பொதுமக்கள் ஐ.நா. அலுவலகத்தைமுற்றுகையிட்டு கோரிக்கை விடுத்தபோது, மனித நேயத்தைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு ஐ.நா. அதிகாரிகள் வன்னியிலிருந்து வெளியேறி னார்கள். ஆகவே சுமார் நாற்பதாயிரம் தமிழ்ப் பொதுமக்கள் உயிரி ழந்த தற்கான முழுப்பொறுப்பையும் செயலாளர் நாயகம் பான் கீ-மூனும் ஐ.நா.வும் ஏற்றாக வேண்டும்.

உங்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கமுடியாது என்று வன்னியிலிருந்த ஐ.நா. அதிகாரிகளிடம் இலங்கை அரசு கூறியபோது, வன்னியில் தங்கியிருந்த பொதுமக்களின் பாதுகாப்புக் குறித்து ஐ.நா. அவ்வேளை சிந்தித்திருக்க வேண்டும். தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என்றால் பொதுமக்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் இருக்கமாட்டாது என்று தெரிந்தும், ஐ.நா. வெளியேறியது மிகவும் பாரதூரமான விடயம். ஆகவே ஐ.நா. தலைமை, அதன் முகவர் அமைப்புகள், பாதுகாப்புச் சபை, மனித உரிமைகள் சபை ஆகியவை தமது பொறுப்பை நிறைவேற்றத் தவறி விட்டன என்பதே உண்மையும் யதார்த்தமும் ஆகும்.

இத்தனைக்கும் பிறகு, தாம் இழைத்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்யும் வகையிலேயே, பெற்றிக் குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஐ.நா.வின் மூத்த அதிகாரிகள் மட்டத்திலான மற்றொரு குழுவை நியமிக்கப் போவதாகப் பான் கீ-மூன் தெரிவித் துள்ளார்.

ஆனால் அனைத்துலக மட்டத்திலான சுயாதீனமான விசாரணைக் குழு ஒன்றின் ஊடாக ஐக்கிய நாடுகள் சபையின் தட்டிக்கழித்தல் களைக் கண்டறிவதற்கு வகை செய்யப்பட வேண்டுமென்ற குரல்கள் எழுந்துள்ளன.

ஐ.நா. சபையின் உயரதிகாரிகள் இழைத்த மாபெரும் தவறுகளை விசாரித்து, உள்ளாடும் கள்ளாடுமாக இருந்து செயற்பட்டவர்களை இனங்காண வேண்டும்; தண்டிக்க வேண்டும் என்ற குரல்கள் பலமாக எழுந்துள்ளன.

இலங்கையில் நடத்தப்பட்ட இனக்கொலையைத் தடுக்கத் தவறிய, ஐ.நா.வின் செயலாளர் நாயகம் உட்பட அதன் உயர் அதிகாரிகளை விசாரணை செய்ய வேண்டும். அத்தோடு நிற்காமல், இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அனைத்துலக நாடுகள் விசாரணைக்குழுவை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்துள்ளன.

இவற்றுக்கு மத்தியில், ஐ.நா. உள்ளக விசாரணைக்குழுவின் அறிக்கையிலிருந்து சில முக்கியமான தகவல்கள் கறுப்பு மையினால் அழிக்கப்பட்டிருப்பது ஐ.நா. சபையின் மீதுள்ள அனைத்துலகத்தின் மதிப்பையும் மகத்துவத்தையும் கீழ்மட்டத்துக்குத் தாழ்த்திவிட்டது.

அதுவும், போரில் சிக்குண்டுபோன மக்களைப் பாதுகாப்பதில் ஐ.நா.வின் உயர்மட்ட அதிகாரிகள் எவரும் தலையிடவில்லை; பரந்தளவில், மிக மோசமாக நடத்தப்பட்ட படுகொலைகள் குறித்த விவரமான தகவல்கள் வெளியிடப்படவில்லை என்பவை தொடர் பான பதிவுகளே அழிக்கப்பட்டிருக்கின்றன.

இவை, உலகத்தின் மிக உயர்ந்த சபை எனக்கருதப்படும் ஐ.நா.வின் நம்பகத்தன்மையை மிகப்பெரும் கேள்விக்குரிய தாக்குகிறது.

ஈழத்தமிழ் மக்களைக் காப்பாற்றாமல் தவறு இழைத்து விட்டோம் என்று கழிவிரக்கம் காட்டும் பான் கீ-மூனும் அவரது சகபாடிகளும், உலகமன்றத்தின் முகத்தில் கரி பூசிவிட்டார்கள். அதனால் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைத்துவங்களை உலக மக்களின் ஆபத்பாந்தவர்கள் என்று இனியும் கருதினால் அதனை விட மிகப்பெரிய தவறு எதுவும் இருக்காது...!

# வடக்கில் 7 லட்சம் இந்துக்கள்

## புள்ளிவிவரத் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.17

வடமாகாணத்தில் 7 லட்சம் இந் துக்களும், 2 லட்சம் கிறிஸ்தவர்களும், 34 ஆயிரம் இஸ்லாமியர்களும் தற்போது வசிக்கின்றனர் என்று புள்ளி விவர திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் 4 லட்சத்து 83 ஆயிரத்து தொளாயிரம் இந்துக் களும், மன்னார் மாவட்டத்தில் 23 ஆயிரத்து 464 இந்துக்களும், வவு னியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 286 இந்துக்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 69 ஆயி ரத்து 628 இந்துக்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 93 ஆயிரத்து 84 இந் துக்களுமாக வடமாகாணத்தில் 7 லட் சத்து 89 ஆயிரத்து 362 இந்துக்கள் வாழ்கின்றனர்.

றோமன் கத்தோலிக்க மதத்தை யாழ்.மாவட்டத்தில் 75 ஆயிரத்து 33 கிறிஸ்தவர்களும், மன்னார் மாவட் டத்தில் 52 ஆயிரத்து 230 கிறிஸ்தவர் களும், வவுனியா மாவட்டத்தில் 14 ஆயிரத்து 857 கிறிஸ்தவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 ஆயி ரத்து 756 கிறிஸ்தவர்களும், கிளி நொச்சி மாவட்டத்தில் 11 ஆயிரத்து 973 கிறிஸ்தவர்களுமாக ஒரு லட் சத்து 62 ஆயிரத்து 849 கிறிஸ்த வர்கள் பின்பற்றுகின்றனர்.

ஏனைய கிறிஸ்தவ மதத்தை யாழ்.மாவட்டத்தில் 19 ஆயிரத்து 113 பேரும், மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 702 பேரும், வவுனியா மாவட்டத்தில் 7 ஆயிரத்து 963 பேரும், முல்லைத்தீவு மாவட்டத் தில் 3 ஆயிரத்து 233 பேரும், கிளி நொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 145 பேரும் பின்பற்றுகின்றனர்.

இஸ்லாமியர்களாக யாழ்.மாவட் டத்தில் 2 ஆயிரத்து 455 பேரும், மன்னார் மாவட்டத்தில் 16 ஆயிரத்து 553 பேரும், வவுனியா மாவட்டத் தில் 12 ஆயிரத்து 341 பேரும், முல் லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 13 பேரும், கிளிநொச்சி மாவட் டத்தில் 678 பேரும் பின்பற்றுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் பௌத்த மதத்தை 2 ஆயிரத்து 533 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 66 பேரும், வவுனியா மாவட்டத் தில் 16 ஆயிரத்து 688 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8ஆயி ரத்து 155 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 945 பேருமாக வடக் கில் 30 ஆயிரத்து 387 பேர் பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்றனர். -என்றுள்ளது.

(ம-5)

## சாவகச்சேரி நகரசபை முதல் நிலையில்

தென்மராட்சி,நவ.17

மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் உள்ளூராட்சி சபைகளுக்கு இடையில் நடத்தப் பட்ட 2011 ஆம் ஆண்டுக்குரிய முகாமைத்துவப் போட்டிகளில் நகரசபைகளுக்கான போட்டியில் சாவகச்சேரி நகரசபை மாவட்ட ரீதியில் முதலிடத்தையும் மாகாண நிலையில் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.

கடந்த புதன்கிழமை யாழ்ப் பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வெற்றிபெற்ற உள்ளூராட்சி சபை களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டு கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாவட்ட நிலைக் கான கேடயத்தையும் சான்றிதழை யும் நகரசபை தலைவர் இ.தேவச காயம்பிள்ளையும் மாகாண நிலைக் கான கேடயத்தையும் சான்றிதழை யும் செயலாளர் சு.புத்திசிகாமணி யும் பெற்றுக் கொண்டனர்.

மாவட்ட நிலையில் இரண்டா மிடத்தை வல்வெட்டித்துறை நகரசபையும் மூன்றாமிடத்தை பருத்தித்துறை நகரசபையும், மாகாண நிலையில் முதலிடத்தை வவுனியா நகரசபையும் மூன்றா மிடத்தை மன்னார் நகரசபையும் பெற்றுக்கொண்டன.

பிரதேச சபைகளுக்கான போட்டியில் நல்லூர் பிரதேசசபை மாவட்ட, மாகாண நிலைகளில் முதலிடம் பெற்றதாகவும் தெரிவிக் கப்பட்டது. (ம-9)

## கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்குவதற்குத் தீர்மானம்

தென்மராட்சி,நவ.17

யாழ்.மாவட்டப் பாடசாலை களில் கடமை நிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றுவோரை நிரந்தர அதிபர்களாக நியமிக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதன் பிரகாரம் பாடசாலை களில் கடமை நிறைவேற்று அதிபர் களாக கடமையாற்றும் 16 ஆசிரியர் களை நிரந்தர அதிபர்களாக நிய மிப்பதற்காக நேர்முகப் பரீட்சை எதிர் வரும் 23 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை நடத்தவுள்ளது.

பின்வரும் பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றுவோரை பங்குபற்று மாறும் தனித்தனியாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கைதடி நுணாவில் அ.த.க.பாட சாலை - ஆ.தங்கவேல், கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம் - இ.இரவீந்திரன், நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை- திருமதி எஸ்.நகுலேஸ்வரன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை- திரு மதி சி.கந்தசாமி, சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம் - திருமதி எஸ்.தயாபரன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி- க.அருந்தவபாலன், மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை கே.கந்தசாமி, போக்கட்டி அ.த.க பாடசாலை - கே.எழியழகன், வரணி ம.வி- எம் குமாரகுலசிங்கம், வரணி வடக்கு அதகபாடசாலை- ஏ.விமலேந் திரன், கைதடி சேது காவலர் வித்தி - ஆர்.திருஞானசிவம், மந்துவில் றோ.க.த.க.பாடசாலை- எஸ்.பவணேந் திரன், கரம்பை அ.மி.த.க.பாட சாலை - ந.வசந்தரூபன், சரசாலை சரஸ்வதி வித்தி- திருமதி ஜெ.தேவேஸ் வரன், எழுதுட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தி - வீ.சடாச்சரம்.

(ம-9)

## தென்மராட்சி புலமைப்பரிசில் மாணவர் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் பாராட்டு

தென்மராட்சி,நவ.17

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வு நாளை ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவ கச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற வுள்ளது. சித்திபெற்ற மாணவர் களுடன் வகுப்பாசிரியர், அதிபர் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் நிகழ் வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கழகத் தலைவர் லயன் ச.மனோ கரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தி னராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் ரஞ் சித் பெர்னாண்டோவும் கௌரவ விருந் தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்த சீலன், சாவகச்சேரி நகரசபை தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை, தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகி யோரும் சிறப்பு விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட பிரதி செயலாளர் லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் பிரதிப் பொரு ளாளர் லயன் கே.எம்.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வர் என லயன்ஸ் மாவட்ட ஊடகப்பிரிவுத் தலைவர் லயன் எஸ்.கே.நவரத்தினம் தெரிவித்தார். (ம-9)

## மீண்டும் தலைவராக தவரட்ணம் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.17

வடமாகாண கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவராக மீண்டும் சி.தவரட்ணம் தெரிவு செய்யப்பட் டுள்ளார். வடமாகாண கடற்றொழி லாளர் சங்கத்தின் கலந்துரையாடல் அண்மையில் வவுனியாவில் இடம் பெற்றது. இந்தக் கலந்துரையாடலி லேயே புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

சங்கத்தின் உபவிதி தயாரிக்கப் பட்டு பொதுச்சபை பரிசீலனைக்கு விடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. அத்துடன் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இந்த நிர்வாகம் 3 வருடங்களுக்கு செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைவராக-சி.தவரட்ணம், செயலாளராக-க.சூரியகுமாரன், பொருளாளராக- கிரகரி அன்ரனி யும் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட் டத்துக்கு தலா 2 பிரதிநிதிகள் வீதமும் வவுனியா மாவட்ட நன்னீர் மீன்பிடிக்கு ஒரு பிரதிநிதி வீதமும் அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

(ம-5)

## மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மிதிவெடிகள்

காரைநகர், ஊரி அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கு அருகில் வெள்ளத்தால் இரண்டு மிதிவெடிகள் ஒதுங்கின. அவை இனங்காணப்பட்டு இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டு அவை அகற்றப்பட்டுள்ளன.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தொடர்ச்சியாக குடாநாட்டில் மழை பெய்தது. இதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வெடி பொருள் களும் சில இடங்களில் அடித்துச் செல்லப்பட்டன. அத்துடன் மண்ணில் புதையுண்டிருந்த மிதிவெடிகளும் வெளியே தென்படத் தொடங்கியுள்ளன. காரைநகர், ஊரி அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கு அருகில் வெள்ளத்தால் கரையொதுங்கிய 2 மிதிவெடிகளை பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் இனங்கண்டுள்ளனர்.

இதனை அடுத்து கல்வித் திணைக்கள இடர் முகாமைத்துவ பிரிவுக்கு இது தொடர்பான தகவல் வழங்கப்பட்டது. பின்னர் யாழ்.மாவட்ட செயலக இடர் முகாமைத்துவ பிரிவுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இதனை அடுத்து கடற்படையினருக்கு தெரியப்படுத்தப்பட்டு குறித்த மிதிவெடிகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மழை காலங்களில் வெள்ளம் காரணமாக இவ்வாறான வெடிபொருள்கள் மிதந்துவரக் கூடிய அபாயம் காணப்படுவதால், இவற்றை இனங்கண்டால் உடனடியாகவே இடர் முகாமைத்துவ பிரிவுக்கு தகவல் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த உரிமைக்காகப் போராடும்போது இருக்கும் உரிமையும் போகிறது

## அருட்திரு. தமிழ் நேசன் அடிகள்

இந்த நாட்டில் தமிழர்கள் இன்று இக்கட்டான ஒரு சூழலை எதிர்கொள்கின்றனர். தமது அரசியல் உரிமைகளையும் ஏனைய வாழ்வியல் உரிமைகளையும் படிப்படியாகப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இன்று திட்டமிட்டு மழுங்கடிக்கப் பட்டுவிட்டன. இழந்த உரிமைகளுக்காகப் போராடும்போது இருக்கின்ற உரிமைகளும் பறிக்கப்படுகின்ற நிலையே இன்று இருக்கின்றன.

இவ்வாறு தெரிவித்தார் மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குநரான அருட்திரு தமிழ் நேசன் அடிகளார்.



மன்னார் நகரில் அண்மையில் நடைபெற்ற ஊடகக் கற்றைநெறியை நிறைவு செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆயுதங்கள் மௌனிக்கப் பட்ட பின்னர் தமது உரிமைகளைவென்றெடுக்க அகிம்சை வழியில் போராட நினைத்த தமிழ் மக்கள் இன்று நம்பிக்கை இழந்த நிலையில் உள்ளனர்.

இழந்த உரிமைகளுக்காக போராடும்போது இருக்கின்ற உரிமைகளும் பறிக்கப்படுகின்ற ஓர் இக்கட்டான வரலாற்றுச் சூழ்நிலையே இன்று நிலவுகின்றது. இந்தியாவின் சுதந்திரத்தைப்பற்றி எழுதப்பட்ட நிலை இன்று ஈழத்தமிழர்களுக்கும் எவ்வளவு பொருத்தமாக உள்ளது! என்பதை பட்டு வேட்டி பற்றிய கனவில் இருந்தபோது கட்டியிருந்த கோவணமும் களவாடப்பட்டது என்ற கவிதை விரகள்தான் இன்று எமக்கும் ஞாபகத்திற்கு வருகின்றது.

இந்த நிலையில் இன்றைய இளம் தலைமுறையினர் ஊடகக் கல்வியைக் கற்றுக்கொள்வதும், ஊடகங்கள் ஊடாக தொடர்ந்து தமது உரிமைகளுக்காக குரல் கொடுப்பதும் காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இந்த யுகம் 'ஊடக யுகம்' என்று அழைக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இன்று ஊடகங்களே உலகை ஆட்சி செய்கின்றன. கப்பல் வைத்திருந்தவன் 19ஆம் நூற்றாண்டை வெற்றிகொண்டான். விமானம் வைத்திருந்தவன் 20ஆம் நூற்றாண்டை வெற்றிகொண்டான். ஊடக வளமுள்ளவன் இந்த 21ஆம் நூற்றாண்டை வெற்றிகொள்கிறான் என்று சொல்லப்படுகின்றது.

இந்நிலையில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க நாம் ஊடகங்களை சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதற்கு ஊடகக் கல்வி அவசியமாகும்- என்றார்.

பெரிய குஞ்சுக்குளம் பங்குத்தந்தை அருட்திரு. லக்ஸ்ரன் டி சில்வா அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வின்போது பெரிய குஞ்சுக்குளம் இளைஞர் ஒன்றியத்தின் முயற்சியில் உருவான ''இளவல்' என்ற நூல் வெளியீடும் இடம்பெற்றது. (ஐ)

## உதவி அரச அதிபரின் ஒப்பம் இன்மையால்

# இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர் திரும்பி வந்த விண்ணப்ப படிவங்கள்

### சேதமடைந்த வீடுகள் புனரமைக்க முடியாத அவலம்

முல்லைத்தீவு, நவ.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரின்போது சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்காக விண்ணப்பிக் கப்பட்ட படிவங்கள் இரண்டு வருடங்கள் கழித்து செல்லுபடியற்றவை எனத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

உதவி அரச அதிபரின் கையொப்பம் இன்மையே இதற்குக் காரணம் எனத் திருப்பி அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மற்றும் புனர்நிர்மாண அமைச்சின் கீழ் இயங்கும் ஆள்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகார சபை, போரின் போது பகுதியளவில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான விண்ணப்பங்களைக் கோரியிருந்தது.

**ஏதாவது ஒரு தகவல் பிழையென கருதப்படினும் விண்ணப்பங்கள் மீளவும் நிராகரிக்கப்படும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இதன்படி கரைதுறைப்பற்று செயலகத்திலிருந்து கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பொது மக்களும் அரச ஊழியர்களும் விண்ணப்பித்திருந்தனர்.

இந்த விண்ணப்பப் படிவங்களில் அப்போது பதவியில் இருந்த உதவி அரச அதிபர் 08.10.2012 என்ற திகதி இடப்பட்டு தனது இறப்பர் முத்திரையை மட்டும் பதித்து, அதில் தனது கையொப்பத்தை இடாது விட்டுள்ளார்.

இதனால் அந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டு அந்த விண்ணப்பப் படிவங்கள் தற்போது திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. அந்த விண்ணப்பங்களுடன் கடிதம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

அதில் குறித்த விண்ணப்பதாரிகள் புதிய விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

முழுப்பெயர், தே.அடையாள அட்டை இலக்கம், அதன் பிரதி என்பவற்றுடன் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கான சரியான தகவல்களுடன் தத்தமது கிராம சேவகரது கையொப்பம், பதவியை உறுதிப்படுத்தும் முத்திரை என்பவற்றுடன் முக்கியமாக உதவி அரச அதிபரின் கையொப்பம், உறுதிப்படுத்தும் பதவி முத்திரை என்பன அதில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஏதாவது ஒரு தகவல் பிழையென கருதப்படினும் விண்ணப்பங்கள் மீளவும் நிராகரிக்கப்படும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொறுப்பு வாய்ந்த அரச அதிபரின் அவதானம் இன்மையால் தமது விண்ணப்பங்கள் இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில் நிராகரிக்கப்பட்டுள்ளன எனவும் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்களும் அரச உத்தியோகத்தர்களும் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ)

# மன்னாரில் குற்றச்செயல்களைத் தடுக்க ஓட்டோ சாரதிகளுக்கு சீருடை வழங்குக

### சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்டு சேவையில் ஈடுபடும் ஓட்டோச் சாரதிகளுக்கு சீருடைகளை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரில் அண்மைக்காலமாக ஒருசில ஓட்டோ சாரதிகள்மீது தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களைத் தவிர்க்கவும் தவறாக நடக்கமுற்படும் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் ஏற்ற வகையில் அவர்களுக்கு சீருடை வழங்கப்பட வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கருத்து முன்வைத்துள்ளனர்.

மன்னார் நகரின் மத்திய பகுதியில் தரித்து நின்று சேவையில் ஈடுபட்டுவரும் ஓட்டோக்களின் சில சாரதிகள்,இளம் பெண்கள் மீதான சேட்டைகள், மற்றும் தொந்தரவு செய்தல் போன்ற விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டு வருவதாக முறைப்பாடுகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால் இந்த குற்றச்சாட்டுக்களை சங்கத்தினர் தொடர்ந்து மறுத்துவருகின்றனர்.

இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை அடையாளம் காணும் வகையிலும், மன்னார் ஓட்டோச் சங்கத்தின் பதிவில் உள்ளவர்களை அடையாளம் காணும் வகையிலும் அவர்களுக்கான பிரத்தியேக சீருடை வழங்கப்படவேண்டும்.

சாரதிகளுக்கு இலக்கங்கள் பொறிக்கப்பட்ட சீருடை வழங்க மன்னார் நகர சபையும்,மன்னார் ஓட்டோச் சங்கமும் உடன் நடவடிக்கை எடுக்க வேணடும் என மன்னார் மக்களும், சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.(ஐ)

# மாணவர்களுக்கு கௌரவம்

நெளுக்குளம், நவ. 17

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி அதிபர் வே.இந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (க-402)



நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்த வவுனியா நகர சபைக்கு உட்பட்ட பண்டாரிக்குளம் பிரதான வீதி நகரசபையால் புனரமைப்பு செய்யப்படுவதனை வவுனியா நகரசபையின் பிரதித் தலைவர் எம்.எம்.ரதன் பார்வையிடுகிறார். (க-400)

# வன்னேரிக்குளம் உவராதல் விவகாரம் கவனிப்பின்றிக் கைவிடப்பட்டுள்ளதா?

### தமது கிராமத்தைப் பாதுகாக்கக் கோருகின்றனர் அந்த மக்கள்

அக்கராயன், நவ. 17

பலதட்வைகள் கோரிக்கை விடுக்கப்பட்டும் கூட்டங்களில் எடுத்துக்கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப் படாததால் நிலம் உவராதலின் வேகம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

இதனால் எதிர்காலத்தில் மக்கள் வாழ முடியாது இடம் பெயரும் சூழலே ஏற்படுமென வன்னேரிக்குளம் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பூநகரி நிலப்படுக்கையூடாக ஏற்கனவே குஞ்சுக்குளம் பகுதியில் 450 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப் பகுதி உவரடைந்துள்ள நிலையில் அது மெல்ல மெல்ல வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம் ஆகிய பகுதிகளுக்கும் பரவி வருகிறது.

நிலம் உவராதல் தொடர்பில் மக்களும் சூழலியலாளர்களும் பலமுறை இத்துறை சார் அதிகாரிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறிப்பாக குஞ்சுக்குளத்திலிருந்து ஆனைவிழுந்தான் குளம் வரையான மூன்றரைக் கிலோ மீற்றர் நீளத்துக்கு தடுப்பணை அமைப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் ஆனைவிழுந்தான் மேற்குப் பகுதியூடாக நிலம் உவராதல் அதிகரித்திருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே உவராதல் பிரச்சினையைத் தடுப்பதற்கென தடுப்பணை அமைத்தல், வன்னேரிக்குளம், தேவன்குளம், பல்லவராயன்கட்டுக்குளம் என்பவற்றை இணைத்தல் போன்ற இரண்டு முன்மொழிவுகள் கூறப்பட்டன. இதற்கான எந்த முயற்சிகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலை தொடருமானால் கரைச்சி பிரதேச சபையிலுள்ள இரண்டு கிராம சேவகர் பிரிவுகள் இல்லாது போகும் நிலை உருவாகும் என சூழலியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கிராமங்களை அழிவிலிருந்து பாதுகாக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ-18)

# ஓரிடத்திலாவது நிறுத்துங்கள்

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பணியில் ஈடுபடும் பஸ்கள் இடைப் பிரதேசங்களில் நிறுத்தப்படாமையால் தாம் போக்குவரத்து நெருக்கடியை எதிர்நோக்குவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர். முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பணியில் ஈடுபடும் பஸ்கள் நீண்டநேரம் பயணிக்கவேண்டியுள்ளன.

இதன்போது இடைப்பிரதேசங்களில் பஸ் நிறுத்தப்படாமயால் குழந்தைகள் முதல் முதியவர் வரை தண்ணீர் பருகவோ அன்றி அவசர கடமைகளை முடிக்கவோ இயலாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். பயணிகளின் சிரமங்களைக்கவனத்தில்கொண்டு சிறிதுநேரம் ஓரிடத்திலாவது பஸ்ஸை நிறுத்தி தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ளுமாறு மக்கள் கேட்டுள்ளனர். (ஐ-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் தேசிய மரநடுகை

தென்மராட்சி,நவ.17

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தையும் அவரின் இரண்டாவது பதவிக் காலத்தையும் முன்னிட்டும் ஏற்பாடு செய்யப்பட்ட 'தேசத்துக்கு நிழல்' தேசிய மரநடுகைத் திட்டம் நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேசத்தின் அரச, கூட்டுறவு வங்கிகள், தனியார் நிறுவனங்கள் போன்ற வற்றில் அனுஷ்டிக்கப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டன.

சாவகச்சேரி நகர சபையினர் நகரசபை வளாகம், பொது நூலகங்கள், புனித லிகோரியார் தேவாலயம், பொதுச்சந்தை, கல்வயல் ஐயனார் கோவில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை உட்பட பல இடங்களில் 58 மரக்கன்றுகளை நட்டனர்.

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தில் தேசிய, மாகாண, வலயக் கொடிகள் ஏற்றப்பட்டு சுப நேரத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. அத்துடன் வலயத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

தென்மராட்சி பிரதேச செயலக வளாகம் கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ஆகிய அலுவலகங்கள், சமுர்த்தி வங்கிகள் போன்றவற்றிலும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

பிரதேசத்தில் இயங்கும் கூட்டுறவு அலுவலகங்கள், அரச தனியார் வங்கிகள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிலும் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ம-9)

# தென்மராட்சி தெற்கு விவசாயிகள் இம்முறையும் நட்டமடையும் நிலைமை

தென்மராட்சி,நவ.17

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு பிரிவில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கையில் இவ்வருடம் பயன் பெறமுடியாத நிலை ஏற்படலாமென நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த வருடம் தனங்களப்பு பிரதேசத்தில் நெற் செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட 600 ஹெக்டெயர் வயல் பரப்பில் பயிர்கள் கட்டாக்காலி கால்நடைகளால் அழிக்கப்பட்டன. இதனால் அனைத்து நெற் செய்கையாளர்களும் பயன்பெறமுடியாத நிலை ஏற்பட்டது.

**நெற்செய்கை ஆரம்பிக்க முன்னர் பிரதேச சபையும், அவை பயிர்களாகியதும் விவசாயத் திணைக்களமும் பாதுகாப்பு வழங்குவதாக உறுதியளித்தனர்.**

பயிர்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லாததால் இவ்வருடம் நெற் செய்கை மேற்கொள்வதில்லை என்று நெற் செய்கையாளர்கள் முடிவு செய்திருந்தனர்.

இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியவை கொடுத்த வாக்குறுதிகளை நம்பி ஆயிரத்துக்கு மேற்பட்ட நெற் செய்கையாளர்கள் காலபோக நெற்செய்கைப் பணிகள் ஆரம்பித்தனர்.

நெற்செய்கை ஆரம்பிக்க முன்னர் பிரதேச சபையும், அவை பயிர்களாகியதும் விவசாயத் திணைக்களமும் பாதுகாப்பு வழங்குவதாக உறுதியளித்தனர்.

இந்தவருடம் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்கள், தினமும் கட்டாக்காலி கால்நடைகளால் அழிக்கப்பட்டு வருகின்றன.

விவசாயத் திணைக்களத்தினர் எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இதுவரை மேற்கொள்ளாததால் இவ்வருடம் பயன் பெற முடியாத நிலை ஏற்படலாம் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ம-9)

## சீராக இயங்காத கால்நடை நிலையம்

வடமராட்சி, நவ. 17

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கெனத் தனியான அரசினர் கால்நடை வைத்திய நிலையம் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டுள்ளது. எனினும் இன்னமும் சீராக இயங்க ஆரம்பிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த வைத்தியசாலை திறக்கப்பட்டதும் தென் பகுதியைச் சேர்ந்த கால்நடை வைத்திய அதிகாரி ஒருவர் கடமையைப் பொறுப்பேற்று சில தினங்கள் பணியாற்றியதும் சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்று விட்டார். அதன்பின்னர் அவரோ வேறு வைத்திய அதிகாரியோ கடமைக்கு வரவில்லை. இதனால் வைத்தியர் எவருமின்றிக் கால்நடை வைத்தியசாலை பெயரளவில் பணிகள் எதுவுமின்றி உள்ளது என்று கூறப்பட்டது. (ம-8)

## வடமராட்சி விவசாயிகளுக்கு மானிய உரம்

வடமராட்சிப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு இரண்டாம், மூன்றாம் கட்ட மானிய உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அம்பன் கமநல சேவை நிலையம் வடமராட்சி கிழக்குப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கும், புலோலி கமநல சேவை நிலையம், வடமராட்சி வடக்குப் பிரதேச நெற் செய்கையாளர்களுக்கும் கரவெட்டி கமநலசேவை நிலையம் வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு மானிய உரங்களை வழங்கி வருகின்றன.

மானிய உரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயிகள் நெற்பயிர்களுக்கு உரத்தை இடும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (ம-8)

## நடைபாதைகளில் இருந்து சிகிச்சை



யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவு விடுதிகள் நோயாளர்கள் அதிகரிப்பால் நிரம்பி வழிகின்றன. இதனால் இந்த விடுதிகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்கள் இப்போது விடுதிகளின் நடைபாதைகளில் இருந்தே சிகிச்சை பெறவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

தினமும் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் இந்த விடுதிகளில் அனுமதிக்கப்படுகின்றனர். ஆயினும் அவர்களுக்கான கட்டில் வசதிகள் இல்லை. இதனால் இவர்கள் நடைபாதைகளில் பாய்களைப் போட்டுத் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டியுள்ளது.

இந்த நிலை காரணமாக விடுதிகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதுடன் நோயாளர்களைப் பார்வையிட வருவோரும் இந் நெருக்கடி காரணமாக அல்லற்படுகின்றனர். (த-17)

# வீதி புனரமைப்பு தொடர்பில் பொதுமக்களின் தீர்மானம் அவசியம்

## வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

வீதிப் புனரமைப்புத் தொடர்பில் அந்தந்தக் கிராமங்களின் சனசமூக நிலையங்கள் ஊடாக பொதுமக்கள் தீர்மானம் எடுத்து அது தொடர்பான விவரங்களை பிரதேச சபையிடம் ஒப்படைத்தால் அடுத்த கட்ட நடவடிக்கைகளை பிரதேச சபை மேற்கொள்வதற்குச் சாதகமாக அமையும் என வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வீதிப் புனரமைப்புப் பணிகளை பிரதேச சபை தனியாக முடிவெடுத்து மேற்கொள்ள முடியாது. இதனால் பிரதேசப் பாகுபாடு காட்டப்படுவதாக குற்றஞ்சாட்டப்படும்.

எனினும் ஒவ்வொரு கிராமங்களதும் சனசமூக நிலையங்கள் மக்களுடன் அதிக தொடர்புபட்டிருப்பதால் பொது மக்கள் தாமாக ஒன்று கூடி தமக்கு முக்கிய தேவையாகவும், அதிக பயன் [illegible] வீதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து குறித்த வீதிகளை புனரமைப்புச் செய்ய வேண்டிய விவரத்தை பிரதேச சபைக்குத் தெரியப்படுத்த வேண்டும். இது பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் வீதித்திருத்தப் பணிகளின் செயற்றிட்டங்களுக்கு இலகுவாக இருக்கும்.

மக்களால் முன்வைக்கப்பட்ட வீதிகளது திருத்தப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளைச் சனசமூக நிலையங்கள் ஒத்துழைப்பு வழங்கி மேற்கொள்ள வேண்டும்.- எனவும் தெரிவித்தார். (ம-14)

## சங்கானை ஆஸ்பத்திரி வீதிகள் அடுத்த ஆண்டு நிதியில் திருத்தம்

யாழ்ப்பாணம், நவ. 17

சங்கானை பிரதேச வைத்தியசாலையின் சுற்றுப்புறச் சூழலின் பிரதான வீதிகள் வலி.மேற்கு பிரதேச சபையின் நிதியிலிருந்து புனரமைப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் வெகு விரைவில் மேற்கொள்ளப்படும்.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சங்கானைப் பிரதேச வைத்தியசாலையின் சுற்றுப்புறச் சூழல் வீதிகள் பெரும் எண்ணிக்கையான பொது மக்களால் பயன்படுத்தப்படுகின்றன.

அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம் ஆகிய உப அலுவலகங்கள் குறித்த வீதியின் புனரமைப்புத் தொடர்பாக கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த நிலையில் சங்கானை பிரதேச வைத்தியசாலையின் சுற்றுப்புறச் சூழலின் வீதிகளை அடுத்த வருட நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. - என்று தெரிவித்தார். (ம-14)

## பொலிஸாரின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு; வழக்கு விசாரணைக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

பொலிஸ் சமிக்ஞைகளை மீறி வாகனத்தை நிறுத்தாது சென்றார் என்ற குற்றச்சாட்டில் வாகன உரிமையாளர் ஒருவருக்கு எதிராக கோப்பாய் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

எனினும், வாகனம் தரிக்க அனுமதியற்ற இடத்தில் வாகனம் நிறுத்தியதால்தான் பொலிஸார் தன்னுடன் முரண்பட்டதாகவும் அதுபற்றி 119 அவசரசேவை இலக்கம் மூலமாக பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததாகவும் குறித்த வாகன உரிமையாளர் கூறியுள்ளார். அத்துடன் பொலிஸார் சுமத்திய குற்றச்சாட்டை மறுத்ததால் விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் திருநெல்வேலிச் சந்தியில் பலாலி வீதியில் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.

வாகனம் தரிக்க அனுமதியற்ற இடத்தில் குறித்த சந்தேக நபர் தனது வாகனத்தை நிறுத்திவிட்டு திருநெல்வேலிச் சந்தையிலிருந்து மரக்கறி மூடைகளைத் தனது வாகனத்தில் ஏற்றிவிட்டு புறப்பட முற்பட்டார்.

அந்த நேரம் அங்கு கடமையிலிருந்த பொலிஸார் சந்தேக நபருடன் முரண்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

சந்தேக நபர் அந்த இடத்திலிருந்து புறப்பட்டபோது பொலிஸ் வாகனம் அந்த இடத்தில் நிறுத்தப்பட்டது.

அது தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டை சந்தேக நபர் 119 எனும் அவசர பொலிஸ் பிரிவுக்கு அழைப்பை ஏற்படுத்தி முறையிட்டுள்ளார்.

அதன்பின்னர் சந்தேக நபருக்கு எதிராக, பொலிஸ் சமிக்ஞையை மீறி வாகனத்தைச் செலுத்தினார் என்று முறைப்பாடு பதிவாகியது.

அதனைச் சந்தேக நபர் மறுப்பதால் விளக்கத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-4)

## பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் ஒக்ரோபரில் 121 மகப்பேறுகள்

### இரு மடங்காக அதிகரிப்பு

வடமராட்சி,நவ.17

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 121 மகப்பேறுகள் நிகழ்ந்துள்ளன.

இவற்றில் 12 மகப்பேறுகள் சத்திர சிகிச்சைகள் மூலம் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையான 9 மாத காலப் பகுதியில் மாதம் ஒன்றுக்குச் சராசரியாக 54 மகப் பேறுகளே நிகழ்ந்துள்ளன. ஆனால் கடந்த மாதம் மகப்பேறு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களில் மகப்பேற்று வைத்திய நிபுணரின் சேவை கிடைக்காமையால் பல கர்ப்பிணித் தாய்மார்கள் மகப்பேற்றுக்காக யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்தியசாலைகளை நாடிச் சென்றனர்.

இதுவே இந்த வைத்தியசாலையில் மகப்பேற்று எண்ணிக்கை குறைவுடையக் காரணம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

**மகப்பேற்றுக்காக விடுதிகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.**

தற்போது மகப்பேற்று வைத்திய நிபுணராக மருத்துவர் எஸ்.சியாமளன் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து கர்ப்பிணிகளுக்கான கிளினிக்குகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் பிற வைத்தியசாலைகளுக்குச் செல்லாமல் சிகிச்சைக்காக இந்த வைத்தியசாலைக்கு வருகின்றனர்.

மகப்பேற்றுக்காக விடுதிகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாகவே கடந்த மாதம் மகப்பேற்று எண்ணிக்கை இங்கு அதிகரித்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014இற்கான நாடாளுமன்றத் தேர்தலை ராகுல் தலைமையில் சந்திக்கிறது காங்.

டில்லி, நவ.17

நாடாளுமன்றத் தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ராகுல் காந்தி நியமிக்கப்பட்டுள்ளார்.



காங்கிரஸ் கட்சியில் ராகுல் காந்திக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படக் கூடும் என்று கூறப்பட்டு வந்த நிலையில்2014 நாடாளுமன்றத் தேர்தலை ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் எதிர்கொள்ள முடிவு செய்திருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவுக்கு பொதுச்செயலராக இருக்கும் ராகுல் காந்தி தலைமையேற்கிறார். அந்தக் குழுவில் அகமது பட்டேல், ஜனார்தன் திரிவேதி, திக் விஜய் சிங், மதுசூதன் மிஸ்த்ரி, ஜெய்ராம் ரமேஷ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

தேர்தலுக்கு முன் கூட்டணி தொடர்பாக முடிவு எடுக்க அமைக்கப்பட்டுள்ள துணைக்குழுவும் இதில் அடங்கும். இதற்கு கட்சியின் மூத்த தலைவரும் பாதுகாப்பு அமைச்சருமான ஏ.கே. அந்தோனி தலைமை வகிக்கிறார்.

அந்தோனி தலைமையிலேயே தேர்தல் அறிக்கையும் அரசின் திட்டங்கள் தொடர்பான துணைக்குழுவும் அறிவிக்கப்பட்டுள்ளன. 3ஆவது துணைக்குழுவானது திக் விஜய் சிங் தலைமையில் தகவல் தொடர்பு மற்றும் பிரசாரம் ஆகியவற்றை கவனித்துக் கொள்ளும்.

கூட்டணி தொடர்பான துணைக் குழுவில் வீரப்ப மொய்லி, முகுல் வாஸ்னிக், சுரேஷ் பச்சௌரி, ஜிதேந்திர சிங், மோகன் பிரகாஷ் ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளனர்.

தேர்தல் அறிக்கை தயாரிப்பு மற்றும் அரசு திட்டங்கள் தொடர்பாக ஏ.கே. அந்தோனி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள துணைக்குழுவில் ப.சிதம்பரம், சுஷில் குமார் ஷிண்டே, ஆனந்த் சர்மா, சல்மான் குர்ஷித், சந்தீப் தீட்சித், அஜீத் ஜோகி, ரேணுகா சௌத்ரி, பி.எல். புனியா ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். மோகன் கோபால் என் பவர் நிபுணராக சிறப்பு அழைப்பாளர் என்ற அந்தஸ் தில் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளார்.

திக்விஜய் சிங் தலைமையிலான தகவல் தொடர்பு, பிரசாரம் தொடர்பான துணைக் குழுவில் அம்பிகா சோனி, மணீஷ் திவாரி, ஜோதிர் ஆதித்ய சிந்தியா, ராஜீவ் சுக்லா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (வ)



இந்திய நாடாளுமன்றத்துக்குச் சென்ற மியன்மார் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி, அங்கிருந்த விருந்தினர் வருகை பதிவேட்டில் கையெழுத்திட்ட பின் மக்களவை சபாநாயகர் மீரா குமாருடன் கலந்துரையாடினார்.

## பாகிஸ்தானிலிருந்து இந்திய மீனவர்கள் விடுதலை

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட குஜராத் மீனவர்கள் 15 பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பாகிஸ்தானின் கராச்சி சிறையில் அடைக்கப்பட்டிருந்தநிலையில் கடந்த ஞாயிறன்று விடுதலை செய்யப்பட்டனர் என்று தகவல்கள் வெளியாகின.

அவர்கள்9 மாத சிறைவாசத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்டு நேற்று முன்தினம் குஜராத் திரும்பினர். (வ)

## துபாயில் இந்தியருக்கு விருது

மும்பை, நவ.17

மும்பை புறநகர் பகுதியில் குழந்தைகளுக்கு குறைந்த செலவில் கல்வி கற்பித்ததற்காக இந்தியருக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள விருது வழங்கப்பட்டுள்ளது.

துபாயில் நடைபெற்ற உலகக் கல்விக்கான புதிய கண்டுபிடிப்பு மாநாட்டில் 100 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து ஆயிரத்து 200 பேர் கலந்து கொண்டனர்.

இதில் மும்பை புறநகர் பகுதியில் குழந்தைகளுக்கு குறைந்த செலவில் கல்வி கற்பித்ததற்காக மாதவ் சவான் என்ற முன்னாள் வேதியியல் பேராசிரியர் மேற்படி விருதைப் பெற்றுக் கொண்டார்.

விருதுபெற்ற பின்னர் சவான் கூறுகையில், கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் எனது நாட்டில் நூற்றுக் கணக்கான குழந்தைகளின் வாழ்வில் மாறுதல் தேவை என்பதை உணர்ந் தேன்.

பல தனிநபர்களும், அமைப்புகளும் பல நலத் திட்டங்களைச் செய்து வருகின்றனர். இதில் எனது பங்களிப்பை நான் செய்துள்ளேன்-என்றார். (வ)

# ஈழத்தமிழர் விடயத்தை விவாதிக்க அனைத்துக் கட்சி கூட்டம் அவசியம்

## தமிழக அரசுக்கு ஜி.கே. மணி கோரிக்கை

சென்னை, நவ.17

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து விவாதிக்க அனைத்துக்கட்சி கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று தமிழக அரசுக்கு, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே. மணி கோரிக்கை விடுத்துள்ளார்.



பிரிட்டன்தமிழர் பேரவை சார்பில் கடந்த 7-9 ஆம் திகதி வரை லண்டனில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்ற பா.ம.க. தலைவர் ஜி.கே. மணி நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை சென்னைக்குத் திரும்பினார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில்அவரைபா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ், முன்னாள் மத்திய இணை அமைச்சர் ஏ.கே. மூர்த்தி உள்ளிட்டோர் வரவேற்றனர். அதன்பின்னர், செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தாவது:-

லண்டனில் நடைபெற்ற மாநாட்டில் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை குறித்து சுதந்திரமான விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தனித்தனியாகப் போராடாமல் ஒன்று பட்டுப் போராட வேண்டும் என்றும், தமிழகத்தில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்றும் மாநாட்டில் பங்கேற்ற உலகத் தமிழர்களும், பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வேண்டுகோள் விடுத்தனர்.

எனவே, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து விவாதிக்கவும், இந்தப் பிரச்சினைக்காக மத்திய அரசை வலியுறுத்தவும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதல்வர் ஜெயலலிதா கூட்ட வேண்டும். இலங்கையில் நடைபெற்ற போரில் இலட்சக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய் யப்பட்டுள்ளனர். 50 ஆயிரத்துக்கும் அதிகமானோரைக் காணவில்லை. செஞ்சிலுவைச் சங்கம் செயற்பட அனுமதிக்கப்படவில்லை. ஐ.நா. அதிகாரிகள் வெளியேறினர். ஒட்டுமொத்தமாக மனித உரிமைகள் அங்கு மீறப்பட்டுள்ளன.

தற்போது ஈழத் தமிழர்கள் பகுதிகளில் சிங்கள குடியேற்றம் நடந்து கொண்டிருக்கிறது. இதனைத் தடுத்து நிறுத்தவும், எஞ்சியுள்ள தமிழர்களைப் பாதுகாக்கவும், இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தவும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி, இந்திய அரசை வலியுறுத்த வேண்டும்-என்றார். (வ)

## உலகப் புகழ் பெற்ற தால் ஏரி அருகே துப்பாக்கிச்சூடு

ஒருவர் சாவு: 4 பேர் காயம்



உலகப் புகழ் பெற்ற சுற்றுலாத் தலமான காஷ்மீரின் தால் ஏரி அருகே தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். 4 பேர் காயமடைந்தனர்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம், ஸ்ரீநகரில் உள்ள தால் ஏரி அருகே அரசு சார்பில் நடத்தப்படும் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் அத்துமீறி நுழைந்த தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதில் விடுதியில் உள்ள மதுபானப் பிரிவில் பணியாற்றும் முஷ்டாக் அஹமது என்பவர் உயிரிழந்தார்.

மேலும் 4 தொழிலாளர்கள் காயமடைந்தனர் என்று பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (வ)

## பால் தாக்கரே உடல் நிலையில் முன்னேற்றம்

சிவசேனா தலைவர் பால் தாக்கரேவின் உடல்நிலை தேறி வருவதாகவும், சிகிச்சைக்கு ஏற்ப முன்னேற்றம் தெரிவதாகவும் அவரது மகன் உத்தவ் தாக்கரே தெரிவித்தார்.



மும்பை பாந்த்ரா பகுதியில் உள்ள பால்தாக்கரேவின் இல்லத்தில் மருத்துவர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

பால் தாக்கரேயின் உடல் நிலை குறித்து அறிய சிவ சேனா கட்சித் தொண்டர்கள் ஏராளமானோர் அவரது இல்லத்தின் முன்னால் நாளாந்தம் திரண்டு வருகின்றனர்.

மும்பை மாநகரத்தின் வழக்கமான இயல்பு வாழ்க்கை நேற்று முன்தினம் முடங்கிப் போயிருந்தது. அனைத்துக் கடைகளும் மூடப்பட்டு போக்குவரத்தும் நிறுத்தப் பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று இரவு முதல் அவரது உடல் நிலை தேறி வருவதாக வருவதால் நேற்று வழக்கமான பரபரப்பான இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியது மும்பை மாநகரம். (வ)

# தமிழகத்துக்கு 4.8 டி.எம்.சி. தண்ணீர் விடுமாறு கர்நாடகத்துக்கு உத்தரவு

## காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

டில்லி, நவ.17

தமிழ்நாட்டுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை 4.8 டி.எம்.சி. நீர் வழங்க கர்நாடகத்துக்கு காவிரி கண்காணிப்புக் குழு உத்தரவிட்டுள்ளது.

காவிரி கண்காணிப்புக் குழுக்கூட்டம் மத்திய நீர் வளத்துறை செயலரான துருவ் விஜய்சிங் தலைமையில் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் பங்கேற்ற தமிழக அரசின் தலைமைச் செயலர் தேவேந்திரநாத் சாரங்கி, தமிழகத்துக்கு நேற்று தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை 8 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும். தமிழகத்தில் சம்பா பயிர்களின் பாசனத்துக்காக கர்நாடகம் வழங்க வேண்டிய 52.5 டி.எம்.சி. தண்ணீரையும் உடனடியாக வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆனால் கர்நாடக அரசின் தலைமைச் செயலர் எஸ்.வி. ரங்கநாத் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரை தமிழகத்துக்கு வழங்க வேண்டிய தண்ணீரின் அளவை கர் நாடகம் வழங்கி விட்டது- என்றார்.

இரு மாநில வாதத்தைக் கேட்ட கண்காணிப்புக் குழுவின் தலைவர் துருவ் விஜய் சிங் பிறப்பித்த உத்தரவில் வறட்சிக்கால நீர்ப் பங்கீட்டு முறைப்படி நேற்று முன்தினம் தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தமிழகத்துக்கு 4.8 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும் - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேலுக்கு அமெ. ஆதரவு



காஸா மீதான இஸ்ரேல் தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆதரவு தெரிவித்துள்ளார்.

காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது கண்டிக்கத் தக்கது. ''இஸ்ரேல் இராணுவம் தற்காத்துக் கொள்ளும் வகையில், காஸா மீது தாக்குதல் நடத்துவதற்கு நாமும் ஆதரவளிக்கின்றோம். அதேநேரம் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை தவிர்க்க வேண்டும் என்றும் வெள்ளை மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## நிலநடுக்கம்

### சிலி

தென் அமெரிக்க நாடான சிலியின் வடக்கு பகுதியில் நேற்றுமுன்தினம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவில் 6.1 ஆகப்பதிவான இந்த நிலநடுக்கத்தால் அடகாமா பாலைவனப் பகுதியில் இருந்த வீடுகள் குலுங்கின.

காக்குயும்போ நகருக்கு வடக்கே 88 கிலோ மீற்றர் தூரத்தில், 61 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த சேத விவரங்கள் தெரியவரவில்லை. இதன் அதிர்வுகள் தலைநகர் சாண்டியாகோவிலும் உணரப் பட்டுள்ளது.

### மெக்சிக்கோ



லத்தீன் அமெரிக்க நாடான மெக்சிக்கோவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

மெக்சிக்கோ சிட்டியின் தென் மேற்கில் கெரேரோ மாகாணத்தில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், இது ரிச்டர் அளவில் 6 ஆகப் பதிவானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கட்டடங்கள் குலுங்கின. எனினும் சேத விவரங்கள் குறித்த தகவல்கள் தெரியவரவில்லை.

# அதிர்கிறது காஸா

## 19 பேர் சாவு; 100 மேற்பட்டோர் காயம்



இஸ்ரேலின் தெற்குப் பகுதியில், காஸா எல்லையில் தயார் நிலையில் இருக்கும் இஸ்ரேல் படையினர்.

பலஸ்தீனம், காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதல்கள் தீவிரமாகியுள்ளன. இஸ்ரேல் நடத்தும் வான்தாக்குதல்கள் மற்றும் ரொக்கெட் தாக்குதல்களால் காஸாவின்வான்பகுதி புகைமண்டலமாகக் காட்சியளிக்கிறது.

இதுவரை இஸ்ரேல் நடத்திய வான்வெளித் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 6 சிறுவர்களும் அடங்குவர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

நேற்று இஸ்ரேலியே ரொக்கெட் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியா வீட்டுக்கு மின்சாரம் வழங்கும் தளம் ஒன்றும் தாக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலின் வடபகுதியில் ரொக்கெட் தாக்குதலை நடத்தியிந்தனர். இதில் 3 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாகக் கடந்த வியாழக்கிழமை இஸ்ரேல் காஸா மீது ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியது. அதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் பரஸ்பரம் ரொக்கெட் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். இதனால் காஸா பகுதியில் பதற்றநிலை நீடிக்கிறது.

நேற்றும் காஸாப் பகுதியில் இருந்து இஸ்ரேலை நோக்கி ரொக்கட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் தெற்கு இஸ்ரேல் பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்பு தாக்கப்பட்டுள்ளது. இதில் 3 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து இஸ்ரேல் தெரிவிக்கையில்:

''காஸாவில் இருந்து நடத்தப்படுகின்ற ரொக்கெற் தாக்குதல்கள் உடனே நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் ஹமாஸ் அமைப்பினர் நடத்தும் ரொக்கெட் தாக்குதல்களுக்கு ஒரு விலையைக் கொடுக்க நேரிடும். அவசர நிலை ஏற்படுமாயின் மேலும் 30 ஆயிரம் படையினர் தயார் நிலையில் உள்ளனர். ஹமாஸின் தாக்குதல்கள் தொடருமாயின் இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியாவைக் குறிவைக்கும்'' என்று தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பின் இராணுவத்தளபதி அஹ்மட் ஜபாரி இஸ்ரேலிய வான் தாக்குதலில் கொல்லப்பட்டார். இதையடுத்து தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன.

## நிறுத்துங்கள் வன்முறைகளை

### ஐ.நா.வேண்டுகோள்



இஸ்ரேல்- பலஸ்தீனம் இடையே நிலவும் பதற்றத்தைத் தவிர்த்து, அமைதியைப் பேண வேண்டும் என்று ஐ.நா.பொதுச் செயலர் வலியுறுத்தியுள்ளார்.

ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதற்கு பான் கீ-மூன் கண்டனம் தெரிவித்துள்ளார். அதேநேரம், பதிலுக்கு இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதால் அப்பாவி மக்களே பாதிப்படைகின்றனர். இதனால் இருதரப்பும் வன்முறையைத் தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## சிரியா கடும் கண்டனம்



காஸா பகுதி மீது இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலுக்குச் சிரிய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

''இத்தகைய தாக்குதலை நிறுத்திக் கொள்ள வேண்டும். தாக்குதலை நிறுத்துவதற்குச் சர்வதேச சமுதாயம் இஸ்ரேலை வலியுறுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளது சிரியா.



## பூமிக்கு திரும்புகிறது சுனிதா குழு

வொஷிங்டன்,நவ.17

அமெரிக்காவின் நாசா விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் தலைமையிலான குழு பூமிக்குத் திரும்புகிறது. நாளை 18ஆம் திகதி சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்திலிருந்து இவர்கள் பூமிக்கு திரும்புகின்றனர்.

சுனிதா வில்லியம்ஸ் குழுவினர் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்துக்குச் சென்றனர். சுனிதா தலைமையிலான இக்குழுவில்அவருடன்அகிஹோசிடே (ஜப்பான்), யூரி மலென்சென்கோ (ரஷ்யா) ஆகிய விண்வெளி வீரர்களும் அடங்குவர்.

இவர்கள் சர்வதேச விண்வெளி ஆய்வுகூடக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு அவர்களின் பணிகள் முடிவடைந்ததையடுத்தே பூமிக்குத் திரும்புகின்றனர்.

சுனிதா வில்லியம்ஸ் தலைமையிலான குழுவினர் நாளை சர்வதேச விண்வெளி ஆய்வுக் கூடத்திலிருந்து சோயுஷ் விண்கலம் மூலம் புறப்படுகின்றனர்.

இவர்கள் மறுநாள் திங்கட்கிழமை கஜகஸ்தானில் உள்ள விண்வெளித் தளத்தை வந்தடைவார்கள்.

## ஒபாமாவின் வருகையால் 450 கைதிகள் விடுதலை

### மியன்மார் அரசு அறிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதி அடுத்தவாரம் மியன்மாருக்குப் பயணம் மேற்கொள்கின்றார். இந்தப் பயணத்தை முன்னிட்டு சுமார் 450 கைதிகளை விடுதலைசெய்யப்படுவர் என்று மியன்மார் அறிவித்துள்ளது.

நல்லெண்ண அடிப்படையிலும், இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கிலும் கைதிகள் விடுதலை செய்யப்படுவதாக மியன்மார் உள்விவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. விடுவிக்கப்படவுள்ள கைதிகளில் அரசியல் கைதிகளும் அடங்கலாம் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

பொருளாதார சலுகைகள் வழங்கப்பட வேண்டுமெனில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென அமெரிக்கா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இராணுவ ஜுண்டா ஆட்சி நிலவிய காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை துஷ்பிரயோகங்கள் காரணமாக மியன்மாருக்கு எதிராக மேற்குலக நாடுகள் தடைகளை விதித்திருந்தன.

எனினும், தற்போது மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புக்கள் காரணமாக மியன்மாருக்கு எதிராக தடைகளை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தளர்த்தி வருகின்றன.

## தேடப்படும் சர்வதேச தீவிரவாதிகளின் பெயர்களை வெளியிட்டது அமெரிக்கா

சர்வதேச அளவில் தேடப்படும் தீவிரவாதிகளின் பட்டியலை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

அமெரிக்கப் புலனாய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள புதிய பட்டியலில், அமெரிக்காவின் அலபாமாவில் வசித்த தீவிரவாதி ஓமர் ஷபீக் ஹமாமி என்பவரின் பெயர் சேர்க்கப் பட்டுள்ளது.

இவர் சோமாலியாவில் பதுங்கியிருந்து அல்ஷபாப் என்ற இயக்கத்தை இயக்கி வருகிறார் என்றும், தீவிரவாதிகளுக்கு பல வகையில் உதவியாகச் செயற்படுகிறார் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மேலும் பிலிப்பைன்ஸில் அமெரிக்கர் ஒருவரை கடந்த 1993ஆம் ஆண்டு கடத்திய குற்றத்துக்காக, பிலிப்பைன்ஸை சேர்ந்த ஒருவரையும் தீவிரவாதிகளின் பட்டியலில் சேர்த்துள்ளது. இவர் உள்ளூர் தீவிரவாத இயக்கத்துக்குத் தலைவராகச் செயற்பட்டு வருகிறார் என்றும் கூறியுள்ளது.

ஆப்கனைச் சேர்ந்த ஷேக் அமினுல்லா என்பவர் பாகிஸ்தானின் அல்குவைதா தீவிரவாதிகளுடன் சேர்ந்து சதி திட்டத்தில் ஈடுபடுவதாக இவர் பெயரும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இவருடன் சேர்த்து புதிய பட்டியலில் 32 தீவிரவாதிகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

## சீன ஜனாதிபதியின் மனைவி புகழ்பெற்ற பாடகி



சீனாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ள ஜி ஜின்பிங்கின் மனைவி புகழ் பெற்ற பாடகி பெங் லி யூவான் ஆவார்.

பெங் லி யூவான் (வயது 49) ஜின்பிங்கின் இரண்டாவது மனைவியாவார். இவர் புகழ் பெற்ற சீனப் பாடகி. இவர்களது மகள் மிங் சி தற்போது அமெரிக்காவில் படிக்கிறார். பெங் லி யூவான் திருமணத்துக்கு பிறகு பாடுவதை நிறுத்தி விட்டார். ஜின்பிங் சியாமென் நகர துணை மேயராக இருந்தபோது லி யூவானை திருமணம் செய்து கொண்டார்.

## இளைஞரைக் கடத்திய சகோதரிகள் பாலியல் ரீதியில் துன்புறுத்தல்

### படம் பிடித்தும் ரசித்தனர்

இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று துப்பாக்கி முனையில் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளனர் இரு பெண்கள். இந்தச் சம்பவம் பிரிட்டனில் நடந்துள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த யாஸ்மீன் (வயது 19) மற்றும் நோட்டீசு (வயது 20) இருவரும் சகோதரிகள். இவர்கள் இருவரும் கற்றல் குறைபாடு (dyslexia) உள்ள 22 வயது இளைஞரைத் தமது வீட்டுக்குக் கடத்திச் சென்றுள்ளனர்.

அங்கு வைத்து இளைஞரைத் துப்பாக்கி முனையில் மிரட்டிப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளனர். சுமார் ஒன்றரை மணி நேரம் பாலியல் ரீதியில் துன்புறுத்தப் பட்டுள்ளார் அந்த இளைஞர்.

அத்துடன் அங்கு நடந்தவற்றைத் தமது கைத் தொலைபேசியில் பதிவு செய்துள்ளனர் சகோதரிகள் இருவரும். பதிவு செய்தவற்றை தமது நண்பிகளிடம் காட்டி மகிழ்ந்துள்ளனர் யாஸ்மின் மற்றும் நோட்டீசு. இதனால் மனவேதனை அடைந்த இளைஞர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். சகோதரிகள் இருவரையும் கைது செய்த பொலிஸார் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி யாஸ்மீனுக்கு 7 வருடங்களும், நோட்டீசுக்கு 5 வருடங்களும் சிறை தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## ஊழலை ஒழிப்பதே முதல் பணி புதிய சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்

''ஊழலுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் படும். அதுவே எனக்குள்ள முதற்கடமை'' என்று தெரிவித்துள்ளார் சீனாவின் அடுத்த ஜனாதிபதி ஜி ஜின்பிங்.

சீனாவின் புதிய ஜனாதிபதியாக ஜி ஜின்பிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சீன ஜனாதிபதியாக அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பதவியேற்க இருக்கும் ஜி ஜின்பிங் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தினார்.

அங்கு அவர் தெரிவிக்கையில்;

''சீன கம்யூனிஸ்ட் கட்சி முக்கிய பிரச்சினைகளை சந்தித்து வருகிறது. குறிப்பாக ஊழல், அதிகரித்து வரும் விவாகரத்து போன்ற பிரச்சினைகள்.

இவை மூத்த அரசு அதிகாரிகள் துணையுடன் சட்டப்படி சரி செய்யப் படும். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கு கட்சியில் உள்ள அனைவரும் மிகுந்த கவனத்துடன் செயல்படுவர்.

கட்சியில் உள்ளவர்கள் கட்சியில் உள்ள பிரச்சினைகளைச் சரிசெய்யக் கடுமையான விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுக்கத்துடன் நடந்து கொள்ளவேண்டும். மக்களுடன் தொடர்புகள் மேம்படுத்தப்படும்.

சீனாவுக்கே உரித்தான சோசலிசத்தை முன்னோக்கி எடுத்துச் செல்லத் தலைமைக்கு துணையாக இருக்கிறோம் என்பதைச் சீன கம்யூனிஸ்ட் கட்சியினர் உறுதிப்படுத்த வேண்டும்'' என்று ஜி ஜின் பிங் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோமாவிலும் மூளை இயங்கும்

கோமா நிலையில் இருக்கும்போதும், மயங்கிய நிலையில் உடல் செயலற்று இருக்கும் போதும் மூளை சிந்தித்து செயற்படும் திறனை இழந்து விடும் என்றே இது வரை கருதப்பட்டு வந்தது.

ஆனால் அந்த நிலையிலும் மூளை சிந்தித்து செயல்படுவதாக மருத்துவ விஞ்ஞானி ஒருவர் கண்டறிந்துள்ளார். கனடா நாட்டைச் சேர்ந்த ஸ்காட்ரட்லி என்பவர் விபத்தில் சிக்கி 12 ஆண்டுகளாக கோமா நிலையில் இருந்தார். அவர் அவ்வப்போது கண் திறந்தும், கைகளை அசைத்தும் ஏதோ சொல்ல முயற்சிப்பதாக அவரை கவனித்து வந்த உறவினர்கள் தெரிவித்தனர்.

இதுபற்றி அறிந்த இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல நரம்பியல் நிபுணர் அட்ரியன் ஓவன் அவரை ஆய்வு செய்தார். ஸ்காட்ரட்லியிடம் அவர் சில கேள்விகளைக் கேட்டு அதை நவீன ஸ்கேன் மூலம் பரிசோதித்தார். அதில் அவர் கேட்கும், கேள்விகளுக்கு ஸ்காட்ரட்லி பதில் அளிப்பது ஸ்கேனில் பதிவாகி இருந்தது.

உங்களுக்கு உடல் வலிக்கிறதா? தற்போது கொடுக்கும் சாப்பாடு பிடிக்கிறதா? போன்ற கேள்விக்கு மூளை சிந்தித்து பதில் அளித்தது. மேலும் தன்னை சுற்றி நடக்கும் விஷயங்களையும், சூழ்நிலைகளையும் மூளை புரிந்து கொண்டது. கோமா நிலையில் இருந்தாலும் மூளை தனது அனைத்து பணிகளையும் செய்வதாக அட்ரியன் கூறுகிறார்.



உக்ரைனின் பிரதமர் மிக்கோலா அசாரோவ் வியட்நாம் நாட்டின் ஹனோய் நகரில் இரண்டு நாள் சுற்று பயணம் மேற்கொண்டுள்ளார். 2ஆம் நாளான நேற்று ஹனோய் ஜனாதிபதி அரண்மனையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வின்போது இராணுவ வீரர்களின் அணிவகுப்பை பார்வையிடுகிறார் உக்ரைன் பிரதமர்.

## யுரேனியம் செறிவூட்டலை ஈரான் அதிகரிக்கலாம்

### ராஜதந்திரிகள் கருத்து

ஈரான் நிலக்கீழ் அணு செயற்பாடுகளை விரைவில் விஸ்தரிக்கக்கூடும் என்று ராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈரானின் சர்ச்சைக்குரிய அணுத்திட்டத்துக்கான தீர்வை அமைதியான முறையில் தீர்க்கும் முயற்சிகளுக்கு இந்த செயற்பாடு பின்னடைவை ஏற்படுத்தலாம் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இன்னும் சில வாரங்களில் யுரேனிய செறிவூட்டலை ஈரான் அதிகரிக்கலாம் என்று இராஜதந்திரியொருவர் தெரிவித்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் தெரிவித்தது.

இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள ஈரான் தொடர்பான தனது அறிக்கையில் இந்த விடயத்தை ஐக்கிய நாடுகள் சபை உள்ளடக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஒபாமாவின் படத்துடன் கம்போடியாவில் போராட்டம்

### 8 பேர் பொலிஸாரால் கைது

தென்கிழக்கு ஆசிய நாடுகள் மாநாடு கம்போடியா நாட்டில் நடைபெறுகின்றது. இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஒபாமா பங்கேற்க உள்ளார்.

அதையடுத்து கம்போடியாவின் புனோம்பென் விமான நிலையத்தை விரிவுபடுத்த கம்போடிய அரசு திட்டமிட்டுள்ளது. விமான நிலையத்துக்கு அருகே சுமார் 400 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களை உடனடியாக அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று கம்போடிய அரசு உத்தரவிட்டுள்ளது.

அந்த இடத்தில் இருந்து வெளியேறமாட்டோம் என்று அங்கு வசிக்கும் மக்கள் போராடி வருகின்றனர்.

இந்தநிலையில் நேற்று அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தங்கள் வீட்டின் தகரக் கூரைகளில் ஒபாமாவின் புகைப்படங்களை ஒட்டி, சில வாசகங்களையும் அவர்கள் எழுதி வைத்தனர். இந்தத் தகவலை அறிந்ததும் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் 8 பேரை கைது செய்தனர். படங்களை அகற்றும்படியும் உத்தரவிட்டனர்.

அங்கு வசிப்பவர்களில் ஒருவர் இதுகுறித்து தெரிவிக்கையில்,

''எங்கள் வசிப்பிடங்களை விட்டு உரிய இழப்பீடு கூட வழங்கப்படாமல் நாங்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுகிறோம். நாங்கள் ஒபாமாவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அவரது கவனத்தை ஈர்த்து, அவர் மூலமாக உதவி பெறவே ஒபாமாவின் படங்களை ஒட்டினோம்'' என்றார்.

## வெள்ளை மாளிகையில் தீபாவளி கொண்டாட்டம்

### துணை ஜனாதிபதி பிடன் பங்கேற்றார்



அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடைபெற்ற தீபாவளி நிகழ்வுகளில் அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜோ பிடன் பங்கேற்றார்.

வெள்ளை மாளிகையில் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுவதை முன்னாள் அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தொடங்கி வைத்தார். ஆனால், அவர் ஒரு முறை கூட இப்பண்டிகைக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

பராக் ஒபாமா ஜனாதிபதியாகப் பதவியேற்றபின் 2009 ஆம் ஆண்டு வெள்ளை மாளிகையில் குத்துவிளக்கேற்றி தீபாவளியைக் கொண்டாடினார்.

இம்முறை அமெரிக்கத் துணை ஜனாதிபதி தீபாவளி நிகழ்வுகளில் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித் தார்.

இந்த நிகழ்வுகளில் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் நிருபமா ராவ், வெள்ளை மாளிகையின் முன்னாள் தலைமை கணினி பொறியியலாளர் ஆனீஷ் சோப்ரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## வோல்மார்ட் அங்காடிக்கு 1.2 மில்லியன் அபராதம்

### பணிப்பெண்ணை துன்புறுத்தியமைக்காக

பணிப்பெண்ணை துன்புறுத்திய வழக்கில் வோல்மார்ட் பல்பொருள் அங்காடி இழப்பீடு வழங்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கனடாவில் உள்ள வோல்மார்ட் பல்பொருள் அங்காடியில் மெரிடித் பூச்சர் என்ற பெண் வேலை பார்த்து வந்தார். இங்கு முகாமையாளராகப் பணிபுரிந்த ஜேசன் பின்னோக் என்பவர், மெரிடித்தை பலமுறை கொடுமைப் படுத்தி உள்ளார். இது குறித்து பலமுறை நிர்வாகத்திடம் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால், பூச்சர் நீதிமன்றத்தை நாடினார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, வோல்மார்ட் அங்காடி மெரிடித்துக்கு 1.2 மில்லியன் டொலர் இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும், இவரிடம் கொடுமையாக நடந்து கொண்ட பின்னோக் 250,000 டொலர் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இந்த நிலையில் இத்தீர்ப்பை எதிர்த்து வோல்மார்ட் மேல்முறையீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

**புதிய பாடல்களுக்கான இசையமைப்பு,ஒலிப்பதிவு**

இசையமைப்பாளர் ஸ்ரீகுகனின் இனிய இசையில் ஆலய பக்தி கீதங்கள் புதிதாக இசையமைத்து,ஒலிப்பதிவு செய்து தரப்படும்.
ஏனைய குரல் ஒலிப்பதிவு தேவைகளுக்கும்.....
ஸப்தஸ்வரம் ஒலிப்பதிவு கலையகம்
விநாயகர் வீதி,கல்வியங்காடு.
தொ.பே.:077 698 0573
(25395)(5-6-7)

**பெயர் மாற்றமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்**

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி சங்கம் நோயாளர் நலன்புரிசங்கம் என பெயர் மாற்றப்பட்டு, புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறவுள்ளது
இடம்: தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை
காலம்: 30-11.2012 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 3.00 மணி
ஆர்வம் உள்ள அனைத்து பொது மக்களையும் கலந்துகொள்ளும் படி வேண்டிக்கொள்கின்றோம்.
தொடர்புகளுக்கு: 0776589699, 0776257969
- செயலாளர்.
(சி/1852)(2-6-7)

**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்**

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை(18.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு வித்தியா சாலை மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர்,
பழைய மாணவர் சங்கம்
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை
(25404)(5-6-7)

**துயர் பகிர்கின்றோம்**

வேலணைப் பிரதேச மத்தியஸ்த சபைத் தவிசாளர் S.K.சண்முகலிங்கம் அதிபர் அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி சின்னப்பிள்ளை குமாரசாமி
அவர்கள் சிவபதம் அடைந்த செய்தியறிந்து மிகவும் கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
மத்தியஸ்த சபை, வேலணை.

**மணமகள் தேவை**

*79 இல் பிறந்த, செவ்வாய் பாவம் இல்லாமல், 63பாவம் உடைய, அமெரிக்காவில் கணக்காளராக பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
*80 இல் பிறந்த, செவ்வாய் பாவம் இல்லாமல், 11 ½ பாவம் உடைய, கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 77 இல் பிறந்த, செவ்வாய் பாவம் இல்லாமல், 45½ பாவம் உடைய, லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள்தேவை.
*80 இல் பிறந்த , 4 இல் செவ்வாய், 21 பாவம் உடைய, ஆஸ்திரேலியாவில் டாக்டராக பணி புரியும் மணமகனுக்கு டாக்டர், கணக்காளர் (B.sc) மணமகள் தேவை.
*82 இல் பிறந்த, 7 இல் செவ்வாய், 24 ¾ பாவம் உடைய, கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
தொ.பு :கமலக்கண்ணன் திருமணசேவை
இல:435/3 ,கோயில் வீதி ,நல்லூர். 0776070862
(25408)(6-7)

**பணிநிலை வெற்றிடம்**

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தனியார் சட்டக்கல்வி நிறுவனத்திற்கு சிறப்பான தகைமையுடைய விரிவுரையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.
Qualification : LL.B (Attorney at Law)
Experience: 1-2 years experience as Lecturer.
Medium : English
Date : 18.11.2012(10.00am-4.30pm)
Walk in Interview
Please contact for further details
**Human Resource Manager**
**Prince City Campus**
**No.31-1/1, 42nd Lane, Colombo-06**
**T.P.: 077 594 9272**
(சி/4856)(5-6-7) **Email: hrm.prince@gmail.com**

**திருமண அழைப்பு**



நிகழும் மங்களகரமான நந்தன வருடம் கார்த்திகைத்திங்கள் 3-ம் நாள் நாளை (18-11-2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணி தொடக்கம் 12.00 மணி வரையுள்ள உத்தராட நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்



எமது புத்திரன், திருநிறை செல்வன்
**பாலமுருகன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி, திருநிறை செல்வி
**அகலியா**
அவர்களுக்கும்



எம்பெருமான் திருவருள் துணையும் சான்றோர் ஆசியும் பெற்று இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருமண மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதிய விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
**தங்கள் நல்வரவை இனிதே எதிர்பார்க்கும்**



திரு. திருமதி R கணேசன்
(இலகுவீட்டார் அழைப்பு)
இணுவில் மேற்கு, இணுவில். 0213215594, 0773768457

திரு. திருமதி K. நகுலேசன் விஜி குடும்பத்தினர்.
சங்கம் வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.
(25397)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடிவுற்று 3 மாதங்கள் இன்னும் இல்லை கொடுப்பனவு

## கிழக்கில் பணியாற்றியோர் விசனம்

திருகோணமலை,நவ.17

நடந்துமுடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது தேர்தல் கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை என்று அந்தக் கடமைகளில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாகாணசபைத் தேர்தல் முடிந்து மூன்று மாதங்கள் கடந்த நிலையில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் முதலமைச்சராகவும், அமைச்சர்களாகவும் பதவியேற்று அவர்களுக்கான சம்பளங்களும் வழங்கப்பட்டுள்ளன என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் தேர்தல் கடமையில் ஈடுபட்டவர்களுக்கு இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட ஒருசில திணைக்களங்களில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டபோதிலும், கல்வித் திணைக்களங்கள் உள்ளிட்ட பல திணைக்களங்களில் இதுவரை வழங்கப்படவில்லை.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க மாகாணசபையில் தெரிவிக்குமாறு மாகாணசபை உறுப்பினர்களிடம் பல தடவைகள் கூறியும் அதையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை.

இதேவேளை ஒரு சில திணைக்களங்களுக்கு இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போதிலும் அவற்றை உரியவர்களுக்கு வழங்குவதிலும் சில திணைக்கள அதிகாரிகள் அசமந்தப்போக்குடன் செயற்படுகின்றனர் என்று கூறப்பட்டது. (ச)



மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் பெய்துவரும் மழையால் வீதிகள் பலவும் நீரில் மூழ்கியுள்ளன.

## ஆணின் சடலம் மீட்பு

நுவரெலியா,நவ.17

நுவரெலியாவில் சடலமொன்று நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களை அடுத்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 55 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரினது சடலமே மீட்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

இந்தச் சடலம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கிழக்கு வயல்களில் மயில்கள் நடமாட்டம்

### நெற்செய்கை பாதிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்துக்கும், அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளுக்கும் வரும் மயில்கள் அங்குள்ள வயல்வெளிகளில் நடமாடித் திரிகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் சொறிக்கல்முனை, சவளக்கடை பகுதிகளிலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, மண்டூர் பகுதிகளிலுமுள்ள வயல் வெளிகளிலேயே இந்த மயில்கள் நடமாடித் திரிகின்றன.

இவ்வாறுவரும் மயில்களினால் நெற்செய்கை பாதிக்கப்படும் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

## பல்கலையில் நிர்வாகச் சீர்கேடுகள்; மாணவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு,நவ.17

கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழகத்தில் நிலவும் நிர்வாகச் சீர்கேட்டை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

கிழக்கு பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்துக்கு முன்னால் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலான சிங்கள மாணவர்கள் மற்றும் மாணவிகளும் கலந்துகொண்டனர். (ச)

## திடீர் சுகவீனம் 200 மாணவருக்கு

கண்டி - நுகவெல ஆண்கள் பாடசாலையின் 200 மாணவர்கள் திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் 150 மாணவர்கள் சிகிச்சைப் பெற்று வீடு திரும்பியுள்ளனர். 50 மாணவர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று மத்திய சுகாதார சேவை பணிப்பாளர் சாந்தி சமரசிங்க தெரிவித்தார்.

5 தொடக்கம் 12 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

அரிப்பு, வாந்தி, தலைசுற்று என்பன இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். இதேவேளை கம்பளை பன்விலதன்ன வித்தியாலயத்தில் ஒவ்வாமை காரணமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை 40 மாணவர் கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.(ச)

## 'தேசத்துக்கு நிழல்' வேலைத்திட்டம்



மட்டக்களப்பு,நவ.17

'தேசத்துக்கு நிழல்' என்னும் வேலைத் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை ரயில் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு தேசத்துக்கு நிழல் வேலைத் திட்டம் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தநிகழ்வில் வாழைச்சேனை ரயில் நிலைய பொறுப்பதிகாரி எம். பி.அப்துல் கபூர், உதவி ரயில் நிலைய அதிபர் ஏ.யூ. என்.நுபைஸ் மற்றும் ரயில் நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மரங்களை நட்டு வைத்தனர். (ச)

# மலையகத்தில் மண்சரிவு; வீதியில் பாறைகள்!

நுவரெலியா,நவ.17

பலாங்கொடை மற்றும் நுவரெலியாவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மண்சரிவுகளை அடுத்து அந்தப் பிரதேசங்களில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது என்று தேசிய இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

நுவரெலியா, பலக்பூல் பகுதியில் கற்பாறைகள் சரிந்து வீழ்ந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கற்பாறைகள் சரிந்து பாதையில் வீழ்ந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

எனவே ஹற்றன் வழியாக நுவரெலியா நோக்கி பயணிப்பவர்கள், மாற்று பாதையாக பூண்டுலோயா - வெலங்தன்னை பாதையூடாக நுவரெலியா நோக்கி பயணிக்குமாறு பொலிஸார் வேண்டுக்கோள் விடுத்துள்ளனர். மண்சரிவோடு கற்பாறைகளும் சரிந்து வீதியின் நடுவில் வீழ்ந்துள்ளதால் அவற்றை துரிதமாக அப்புறப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை சிவனொளிபாத மலைக்குச் செல்லும் நல்லதண்ணி பாதையிலும், மஸ்கெலியா பகுதியிலும் அதிகளவான பனி மூட்டம் காணப்படுகின்றது.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்ஹேன தொடக்கம் வட்டவளைவரையும் பனி-மூட்டம் காணப்படுகின்றது.

இந்தப் பகுதிகளில் அதிகளவான மரங்கள் காணப்படுவதால், பனிமூட்டத்துடன் சேர்ந்து இருளும் சூழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



இதனால் வாகன சாரதிகள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். வாகனங்களின் மின்விளக்குகளை ஒளிரவிட்டுக்கொண்டு வாகனங்களைச் செலுத்துகின்ற போதிலும், முன்னால் வரும் வாகனங்களை அடையாளம் காண்பதில் சிரமமாக உள்ளது என்று வாகன சாரதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு வாகன சாரதிகளுக்கு நுவரெலிய மாவட்ட செயலாளர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ச)

## மட்டக்களப்பு வைத்தியசாலையில் அவசரசேவைப் பிரிவு

மட்டக்களப்பு,நவ.17

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர மற்றும் விபத்து சேவை பிரிவை ஏற்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்த அமைச்சரவை பத்திரமொன்றுக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.


இதற்கென 760 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆஸ்திரேலிய நிறுவனமொன்று நன்கொடையாக வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம் - 2012
# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் கௌரவிப்பு விழாச் சிறப்பு மலர்

St.John Bosco's Vidyalayam



ஜெ.ஸ். ஹெமியூசன்
188

காலத்தால் புகழ்பூத்த எமது யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் தரம் ஐந்து மாணவர்களையும் அவர்களை உருவாக்கிய ஆசிரியப் பெருந்தகைகளையும் வாழ்த்துகின் றேன். எமது பாடசாலையின் தூர நோக்காக சமூக விழுமிய மேம்பாட்டுக்கு உதவக்கூடிய கல்விசார் புலமைத் துவமும், நல்லொழுக்கமும் கொண்ட மாணவச் செல்வங்களை உருவாக்குதலை கண்ணாகக் கொண்டு செயற்படும் எமது யாழ்/புனித ஜோண்பொஸ்கோவின் ஆசிரியத் திலகங்கள் பாராட்டுதலுக்குரியவர்கள். அவர்களிடம் ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு மாணவனும் சிறந்த மாணவனாக பாடசாலையினதும் நாட்டினதும் அபிவிருத்திக்கு உதவக்கூடிய வகையில் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்த மேம்பாடு கொண்ட மாண வர்களை உருவாக்கும் சிறந்த ஆசிரியர்களை இந்த வித்தியாலயம் உருவாக்கியிருக்கின்றது. எங்கள் வித்தியாலயத்தில் இவ்வாண்டு 118 மாணவர்கள் சித்தி அடைந்து 56.1 வீதாசாரத்தைப் பெற்று யாழ் மாவட்டத்தில் முதல் இடத்தையும், அகில இலங்கையில் தமிழ் மொழிப் பாடசாலைகளில் கூடிய வீதமான மாணவர்களை சித்தியடையச் செய்து எமது வித்தியாலயத்துக்கு பெருமை சேர்த்த ஆசிரியர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். எமது மாணவச் செல்வங்களும் ஆசிரியர்களும் மேலும் சிறந்து விளங்க இறை ஆசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்சகோதரி மரிய ஜீவந்தி - அதிபர்.



சூ. ஆர்த்திகா 187
சி.அஸ்வினி 185
செள.குருஷேன் 185
சி.சிவமதுரன் 184
போ.யூலியானா 184
சு.சாரங்கி 184
யூ.யூடினி 182
அ.அனோசிகா 180
ஸ்ரீ.சஞ்சுதன் 179
தி.தேஜஸ்வினன் 179
வி.கேதாகினி 179
ஜெ.ஜவனிகா 179
ஜெ.ரங்குஜன் 178



அ.அஸ்லின் 177
இ.ஆரணி 176
பி.கிரிதரன் 174
சி.மானசன் 174
ச.ஷலோம் 174
த.கௌதமன் 174
ஜெ.திலக்ஷனா 174
வ.அபிஷன் 173
றொ.கல்கிசன் மாட்டின் 173
த.அபிநயா 173
கு.அஸ்வினி 172
ஜெ.சாரங்கி 172
வ.பிரியங்கா 172



த.ஆருத்திரன் 171
ச.தாணிகா 171
ல.லவன் 170
ச.ஆர்த்திகன் 170
ல.சஞ்சயன் 170
கு.நித்தியஜீவன் 169
ர.சிந்துஜன் 169
அ.கர்ஷன் 168
ச.ஹரபிசன் 168
ஜெ.சங்கீதன் 168
ஆ.விதுஷன் 168
அ.கேசினி 168
வி.சுஸ்மிதா 168



ம.சோபிகா 167
இ.தாரணி 167
இ.ஜனாங்கணன் 167
ச.பானுஜா 167
வி.வினோசாயினி 166
ஜெ.மேரிசினேகா 166
பா.சஜானன் 165
சி.நவப்பிரியா 165
செ.சாருஜன் 164
நி.மேரி டனியேலா 164
நா.சுவஸ்திகா 164
வே.பவிந்திரன் 163
ம.றம்மியா 163



சி.யதுர்சனன் 162
க. அஹிம்ஷானி 162
அ.மதுசனா 162
கே.செந்தூரி 162
வெ.ரெரோன்சியா 162
க.தனுசி 162
உ.சுபிதன் 162
இ.வேணுகானன் 162
இ.கானதி 161
பி.லதுஸ்ரிகா 161
தே.நிருபனா 161
சி.சங்கவி 161
சி.சந்தியா 161



சு.தனுப்பிரியா 161
தே.கீர்த்திகன் 160
பி.நிகேதன் 160
யூ.வளன்பிரசாத் 160
சி.தரங்கினி 160
ந.திவ்வியா 160
பி.கிரிபரன் 159
ஜெ.மிதுலன் 159
கை.தர்மிகன் 159
நி.தரங்கினி 159
த.வைஷாலிகா 159
அ.சுாயத்திரன் 158
கு.மிதுலக்ஷன் 158



கி.சிறிசிவானி 158
சு.விதுக்சனா 158
ச.ரிஷிகேசன் 158
கே.திலக்ஷன் 158
ஜெவெரோணிக்கா சுப்ஸ்லின் 157
ரா.யதுஷன் 157
சி.பவசாயினி 157
ம.வர்ஜினி 157
ஜெ.தீக்ஷலா 156
செ.றோஸ்னி 156
அ.சந்தோஷீ 156
செ.அஜன் 155
ச.கர்ஷனா 155



ச.சிவலக்ஷியா 154
சா.வனோஜ் 154
பா.நிலக்ஷனா 153
பு.பிரசாயினி 153
ர.வித்தியா 153
பா.துவாரகா 152
லோ.தர்ஷிகன் 152
கெ.மதுசங்கர் 151
யோ.தாரணிகா 151
ஜோ.யூடிற் பரோசன் 151
இ.பிரகாஸ் 151
த.மேரி ஜெனிபர் 150
நி.மிஷேல் பிரவீன் 150



அ.துவாரகன் 150
ந.அகிலினி 150
ம.ஜானுஜன் 149
ச.சத்தியபாலன் 149
ர.துவாரகன் 149
சி.அபிநயா 149
[illegible] 149
ம.சினேகா 149
ச.நேசுபல் வினோஜ் 149
வ.அக்சயா 149
இ.சுருதிகன் 148
இ.பிரணவி 148
சி.மருதசகி 148

(C/1830) (10,6;7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை சமூகம்



தேசத்துக்கு நிழல் தேசிய மர நடுகை வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பத்தரமுல்லையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவும் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## பாடசாலைக்குள் அத்துமீறி புகுந்து 5 வயது மாணவியை கடத்த முயற்சி

கொழும்பு,நவ.17

பாடசாலை ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து சிறுமி ஒருவரை கடத்த முயற்சித்த இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீரிகம, முத்தரகம கனிஷ்ட வித்தியாலயத்தில் அத்துமீறி நுழைந்து அங்கு முதலாம் தரத்தில் கல்வி பயிலும் 5 வயதுடைய சிறுமியை கடத்த இருவர் முயற்சித்துள்ளனர்.

இதன்போது சிறுமியை கடத்த பயன்படுத்திய லொறியையும் இரு சந்தேகநபர்களையும் பிரதேச மக்கள் மடக்கிப்பிடித்து மீரிகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மொரட்டுவ மற்றும் பண்டாரகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். (ச)

## உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் மந்தகதியில்

### ஆசிரியர் சேவைகள் ஒன்றிய செயலர் சொல்கிறார்

கொழும்பு,நவ.17

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெற்று வருகின்றன என்று இலங்கை ஆசிரியர் சேவைகள் ஒன்றியத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முடிவடையும் என்று பெருமை பேசிக்கொள்ளாது, பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.



பதுளை, குருணநாகல், கண்டி, கம்பஹா மற்றும் மாத்தறை போன்ற விடைத்தாள் திருத்தும் நிலையங்களில் காத்திரமான முறையில் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என்று அவர் கூறினார்.

விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு போதியளவு கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ச)

## பாடப் புத்தகங்களுக்கு ரூ. 2400 மில். செலவு

### 6 இல் விநியோகம்




கொழும்பு,நவ.17

2013 ஆம் ஆண்டின் பாடப் புத்தகங்களுக்காக அரசு 2400 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது என்று கல்வி வெளியீட்டுத் திணைக் கள ஆணையாளர் திஸ்ஸ ஹேவாவித்தாரண தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

37 மில்லியன் பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

பாடப் புத்தகங்களை வழங்கும் உத்யோகபூர்வ நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி கண்டி தர்மராஜ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த முறை 404 வகையான புதிய புத்தகங்கள் அச்சிடப்பட்டன. 41 லட்சம் மாண வர்களுக்காக 370 லட்சம் புத்தகங்களை விநியோ கிக்க வேண்டியுள்ளது. சகல மாணவர்களுக்கும் புதிய புத்தகம் ஒன்றை வழங்குவது அரசின் கொள்கையாகும்.- என்றார். (ச)

# கல்வித்துறையில் லஞ்ச ஊழல்கள்

### லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.17

கல்வித்துறை தொடர்பாக கடந்த மூன்று மாதங்களில் அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் மாணவர்களை புதிதாக இணைத்துக் கொள்வதற்கு லஞ்சம் பெற்றுக்கொள்ளப்படுகின்றமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ஆணைக் குழுவின் தலைவர் ஜகத் பாலபெட்டபெந்தி கூறினார். இந்த முறைப்பாடுகள் மாணவர்களின் பெற்றோர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகள் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

பாடசாலைகளில் மாணவர்களை புதிதாக இணைத்துக் கொள்வதற்கு லஞ்சம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

## வேறுபடுத்திக் காட்ட இனி பஸ்களுக்கு வர்ணப்பூச்சு

கொழும்பு,நவ.17

பொதுமக்கள் சேவை யில் ஈடுபடும் பஸ்களுக்கு வர்ணங்கள் மூலமாக வேறுபடுத்தி காட்டுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய தனியார் போக்குவரத்து பஸ்கள் இளம் நீல நிற வர்ணத் தையும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள் சிவப்பு நிற வர்ணத்தையும் கொண்டமைய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலை மாணவர்கள் சேவையில் ஈடுபடும் பஸ்கள் மற்றும் வான்களுக்கு மஞ்சள் வர்ண பூச்சை பூச வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## கங்கை பெருக்கெடுப்பு; நீரில் மூழ்கின வீதிகள்

### மாத்தறையில் சேதங்கள்

கொழும்பு,நவ.17

நில்வள கங்கை பெருக்கெடுத்தமையால் மாத்தறை மாவட்டத்தின் தாழ் நிலங்கள் சில நீரில் மூழ்கியுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை பெய்த அடை மழையால் இரண்டு பிரதான வீதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் மேஜர் சமன் பாலசூரிய தெரிவித்தார்.

வீடுகள் சில சேதமடைந்துள்ள போதிலும் அது தொடர்பான உறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வேறு பிரிவினரின் உதவியின்றி சிறைச்சாலைகளில் சோதனை

### அடுத்தவருடம் நடைமுறை என்கிறார் கொடிப்பிலி

கொழும்பு,நவ.17

அடுத்த வருடம் முதல் வேறு பிரிவினரின் உதவிகள் இன்றி சிறைச்சாலைகள் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் பி.டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சோதனை நடவடிக்கைகளுக்காக 100 உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்படும்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவில் தற்போது 60 உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர். அடுத்த வருடம் 160 புலனாய்வு உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

எனினும் தேவைப்படும் பட்சத்தில் மட்டுமே வேறு பிரிவினரின் பாதுகாப்பை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச)

## அதிவேக நெடுஞ்சாலையில் பொழுதுபோக்கு அம்சங்கள்



கொழும்பு,நவ.17

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வழியே வெலிப்பனையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உணவகங்கள், மருத்துவக் குளியலகங்கள் மற்றும் சிறுவர் பூங்காக்கள் என்பன இன்னும் சில வாரங்களில் பொதுமக்கள் பாவனைக்காக திறக்கப்படவுள்ளன.

இவற்றுக்கு மேலாக எரிபொருள் நிலையங்கள், ஆடை விற்பனை நிலையங்கள், வாகன தரிப்பிடங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் என்பவையும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவை இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் உப நிறுவனங்களான ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் றிசோட்ஸ் மற்றும் ஸ்பாஸ் லிமிட்டெட் என்பவற்றால் முகாமைத்துவம் செய்யப்படவுள்ளன.

மாக்கும்புர நகரத்தையும் அபிவிருத்தி செய்யும் திட்டங்களும் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## பல்கலைக்கு மாணவரை இணைப்பது தாமதமாகும்

### உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,நவ.17

2011ஆம் ஆண்டு உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்டவர்களை பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளது என்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் முன்னெடுக்கப்பட்ட பகிஷ்கரிப்பு காரணமாக மூன்று மாதங்கள் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்று அவர் சுட்டிக் காட்டினார்.




இதன் காரணமாக, இறுதியாண்டு மாணவர்களின் பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, இந்தக் காலப் பகுதியில் இறுதியாண்டு மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேற வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** முன்யோசனையுடன் செயற்படப் பாருங்கள். பிற்போட்ட விடயங்கள் நிறைவேறும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். கடனாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**இடபம்:** வேலைச்சுமையால் சோர்வாகக் காணப்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்துக் கொடுத்துப் போவது நல்லது. யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும சேர்த்துப் பார்க்க வேண்டி வரும்.

**மிதுனம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். வயிற்று வலி, மன உளைச்சல் நீங்கும். எதிர்பாராத வகையில் பணம் வரும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள்.

**கடகம்:** வியாபாரத்தில் சுமுகமான இலாபம் உண்டு. முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். தந்தையின் உடல் நிலை சீராகும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**சிங்கம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆடம்பரச்செலவுகளைக் குறைப்பீர்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**கன்னி:** குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். பிள்ளைகளின் உடல் நிலை சீராக இருக்கும். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**நாளை**

கார்த்திகை -03 ஞாயிற்றுக்கிழமை 18.11.2012
திதி: பஞ்சமி மாலை.05.27 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப. 07.56 வரை
சுபநேரம்: 09.09 - 10.39 வரை
ராகுகாலம்: 04.39- 06.09 வரை

**துலாம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். உடல் நலம் சீராகும். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. பிரபலமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்துக் கொள்வார்கள்.

**விருச்சிகம்:** எதிலும் பொறுமையுடன் செயற்படப்பாருங்கள். அழகு, இளமைக் கூடும். விருந்தினர் வருகையால் வீட்டில் உற்சாகம் பிறக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**தனுசு:** மற்றவர்களை நம்பி பெரியளவிலான முடிவுகள் எடுக்க வேண்டாம். முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். நெருங்கியவர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.

**மகரம்:** எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும். சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**கும்பம்:** அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**மீனம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | | | 6 | | 3 | 4 | |
| 8 | 5 | | 2 | | | | 6 | |
| | | 3 | 4 | 1 | | | | |
| | | | | | 3 | 2 | 8 | |
| 3 | | | 8 | | 4 | | | 1 |
| | 8 | 5 | 1 | | | | | |
| | | | | 8 | 9 | 7 | | |
| | 7 | | | | 1 | | 2 | 3 |
| | 1 | 6 | | 7 | | | 5 | 8 |

### சுடோக்கின் நேற்றைய விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 8 | 5 | 7 | 6 | 1 | 2 | 9 |
| 5 | 6 | 1 | 2 | 4 | 9 | 7 | 3 | 8 |
| 9 | 2 | 7 | 3 | 1 | 8 | 5 | 4 | 6 |
| 3 | 8 | 9 | 7 | 2 | 5 | 4 | 6 | 1 |
| 2 | 1 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 | 7 |
| 6 | 7 | 4 | 8 | 9 | 1 | 2 | 5 | 3 |
| 8 | 9 | 3 | 4 | 5 | 7 | 6 | 1 | 2 |
| 7 | 5 | 2 | 1 | 6 | 3 | 8 | 9 | 4 |
| 1 | 4 | 6 | 9 | 8 | 2 | 3 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# பதின்மூன்றாம், எட்டாம் ஆண்டு நினைவலைகள்







செல்வன்
பாலகிருஷ்ணன் பிரதீபன்
தோற்றம் : 17.04.1981

செல்வன்
சிவநாதன் ரவிசங்கர்
தோற்றம் : 02.02.1981

செல்வன்
சுந்தரலிங்கம் சிவோத்தமன்
தோற்றம் : 23.05.1981

செல்வன்
பூரணமூர்த்தி கந்தர்வன்
தோற்றம் : 11.05.1981

செல்வன்
மரியரட்ணம் குணரட்னம்
தோற்றம் : 04.08.1981

**17.11.1999 : மறைவு**

**17.05.2004**

முகங்களைத் தொலைத்து விட்ட எங்களுக்கு முகவரியாகிப் போனவரே..!
உறவுகளைப் பிரிந்து விட்ட எங்களை உணர்வுகளால் ஒன்றாக்கியவரே..!
முக்காலமும் உங்கள் பெயர் சொல்ல முழு வரலாறாய்ப் போனவரே...!
இருளான எம்மவர் வாழ்வில் ஒளியாகிப் போனவரே...!

**இந்நாளில் உங்களை நாங்கள் நினைவு கூருகின்றோம்.**

**இன்று 17.11.2012 சனிக்கிழமை காலை 8.30 மணியளவில்** பருத்தித்துறை கடற்கரையில் நடைபெறும் நினைவு தின நிகழ்விலும் **05-12-2012 புதன்கிழமை** அன்று ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும் நினைவு தின நிகழ்வு மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் இரத்த தான நிகழ்விலும் பெற்றோர் ஆசிரியர், உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்"** ஏற்பாட்டாளர்கள்.

மேலதிக விவரங்களுக்கு : யோ.ஜெயகர - 0094 775 325 165 / சு. கோகுலகுமார் - 0094 773 122 198
அ. செந்தில்குமரன் - 0094 777 449 491 E-mail : hartleyboys@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லா மாவட்டங்களிலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## பிற்போடப்பட்டது கருத்தரங்கு

தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்காக இன்று நடைபெறவிருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (3)


## சங்காபிஷேக மணவாளக்கோலம்

மூளாய் பூர்ணைபுட் கலை கூடனுறை ஹரிகரப் பெருமான் ஆலய சங்காபிஷேக மணவாளக்கோலத் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெற வுள்ளது. காலை 7 மணிக்கு 108 சங்காபிஷேகமும் திருக்கல்யாண நிகழ்வும் நடைபெறும். (3)

## ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் ஒரு தொகை பணத்துடன் கண்டெடுக் கப்பட்ட பேர்ஸ் பஸ் நிலைய நேரக் கணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் உரிய ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு பேருந்து நிலைய இ.போ.ச. நேரக் கணிப்பாளர் அறிவித்துள்ளார். (3-9)

# ரயில் பாதைப் பணிகள் மீண்டும் ஆரம்பம்



வலி. வடக்கு, நவ.17

ரயில் பாதை அமைக்கும் பணிகள் யாழ். குடாநாட்டில் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. இந்தத் திட்டம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு சுமார் பத்துமாத இடைவெளியின் பின்னர் செயற்பாட்டுக்கு வந்துள்ளது.

தற்போது கோண்டாவில் ரயில் நிலையத்துக்கு முன்னால் தண்டவாளங்கள் கொண்டுவரப்பட்டு பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் அதிக எண்ணிக்கையான இயந்திர சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு இந்தப் பணி மேற்கொள்ளப்படுகின்றது. (3-86)

# அதிசய விநாயகர் ஆலயத்தில் திருட்டு

அளவெட்டி, நவ.17

அளவெட்டி மேற்கு அதிசய விநாயகர் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு கூரைபிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் ஆலயப் பாவனையில் இருந்த ஒலிபெருக்கி சாதனங்களை திருடிச் சென்றுள்ளனர். அதேநேரம் அங்கிருந்த செப்பிலான எழுந்தருளி விநாயகர் சிலையையும் திருடும் முயற்சியில் அது பொருத்தப்பட்டிருந்த ஆணிகளை உடைத்துள்ளனர். எனினும் வெளியே கொண்டு செல்லமுடியாத நிலையில் அதனைவிட்டுச் சென்றுள்ளனர்.

அதிகாலையில் ஆலயத்துக்குச் சென்ற பூசகர் கூரை பிரிக்கப்பட்டிருந்ததை அவதானித்ததுடன் இது தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸாருக்கு முறைப்பாடும் செய்துள்ளார்.

மோப்ப நாயுடன் ஆலயத்துக்கு வந்த பொலிஸார் நாயின் உதவியுடன் சுற்றாடல் பகுதி எங்கும் தேடிய போதும் சந்தேகத்தின் பேரில் எவரும் கைது செய்யப்படவில்லை (3-36)

# கவனிப்பாரற்றுக் கிடக்கும் பாதீனியச் செடிகள்

அளவெட்டி, நவ.17

தெல்லிப்பழை கட்டுவன் வீதியில் இருமருங்கும் பாதீனியச் செடிகள் தாராளமாக செழித்து வளர்ந்து காணப்படுகின்றன. இவை பூத்துக்காணப்படுவதால் பெய்துவரும் மழையில் வழிந்தோடும் நீரில் கலந்து இதன் வித்துக்கள் பல இடங்களுக்குப் பரவி பெருகிவிட வாய்ப்புள்ளது. எனவே இதனை சம்பந்தப் பட்டவர்கள் விரைந்து செயற்பட்டு அழிக்காவிட்டால் இதன் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியாது. இதனால் எமது விவசாய நிலம் மற்றும் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகள் பெரிதும் பாதிப்படையும் என இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். குறிப்பாக தெல்லிப்பழையில் இருந்து வைத்தியசாலைவரை செல்லும் வீதியின் இருமருங்கிலும் அருகில் உள்ள பிரதான வாய்க்கால் களிலும் இந்தப் பார்த்தீனியச் செடிகள் நிறைந்து செழித்து வளர்ந்து இருப்பது குறிப்பிடத்தக்கது.(3-36)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

## அண்மையில் பெய்த பெரும் மழையே காரணம்

அளவெட்டி, நவ.17

கடந்த ஒரு வாரத்துக்குள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு வரும் வெளி நோயாளர்கள் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறவரும் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துள்ளது.

விடுதி இலக்கம் ஐந்து, சிறுவர் விடுதியான இலக்கம் மூன்று என்பன நோயாளிகளால் நிரம்பிக்காணப்படுகிறது. இதனால் கட்டில்கள் இன்றி நோயாளிகள் தரையிலும் படுக்க வேண்டியுள்ளது. நோயாளிகளின் திடீர் அதிகரிப்பால் இந்தநிலை ஏற்பட்டுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்குக் காரணம் அண்மையில் பெய்த பெருமழை எனவும் கூறப்படுகிறது. கடந்த நான்கு நாள்களில் மட்டும் 150 க்கும் மேற்பட்ட நோயாளிகள் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரம் மூலம் தெரிய வந்துள்ளது. (3-36)


எங்கள் அன்புத் தெய்வம் இறையடி சேர்ந்த ஓராண்டு நிறைவின் அஞ்சலிகள்



மண்ணின் மடியில்
12.10.1927
ஆண்டவன் அடியில்
29.11.2011
திதி: 17.11.2012

திருமதி
நாகமுத்து கிருஷ்ணர்
(சின்னத்தங்கச்சி)

நேற்றுவரை
காற்றடித்தும், புயலடித்தும்
கனமழையடித்தும் அசையாத
அம்மா என்ற மாளிகையில்
பத்திரமாய் உள்ளே நாம்!

எவருக்கும் தீங்கு எண்ணாத
எளிய மனம் படைத்த தாயே!
சுமைகளாய் எண்ணாமல் - எம்
சுகத்துக்காய் உழைத்த தாயே!

இன்றோ!
புயலின்றி, மழையின்றிப்
பத்திரமாய் அம்மா நீ எம் உள்ளே
நிம்மதியாய் வாழ்கின்றீர்கள்!
உம் வழி நாம் தொடர
என்றென்றும் வழி காட்டுங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றும் அழியாத நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மலைவேம்படி,
அளவெட்டி தெற்கு.

(25342) (10,6,7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



வ/ விபுலானந்தா கல்லூரியில் 2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று இடம்பெறுகின்றது. இந்த நிகழ்வில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி

செல்வி அதீதா கனகசபை

அவர்களை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா விமலேஸ்வரி, அண்ணா ஆங்கிசன், பெரியமாமா தியாகராசா குடும்பம், திருமதி ப.திருநாவுக்கரசு குடும்பம், அன்ரா இராயேஸ்வரி, யோகேஸ்வரி, தனுசன், தக்ஷாயினி (கனடா), ஜேர்மனியைச் சேர்ந்த மாமாமார், தங்கராசா, தருமராசா, சிவநாதன் குடும்பம், அகிலன் குடும்பம்.
சந்தைவீதி, ஆவரங்கால்.

(25406)(2-6-7)

### கட்டடத் தொகுதி வாடகைக்கு

மன்னார், புகையிரத வீதியில் (ரெலிகொம் முன்) அமைந்துள்ள மகாதேவன் கட்டடத் தொகுதியின் முதலாம் மாடி கட்டடத்தொகுதி வாடகைக்கு விடப்படும். 2400 சதுர அடி கொண்டது. வங்கி மற்றும் நிறுவனங்களுக்கு உகந்தது.
உடன் தொடர்புகளுக்கு:
மகாதேவன். 071 6118768, 023 222 2569.

### வீடும் காணியும் விற்பனைக்கு

நல்லூர் முருகன் ஆலயத்துக்கு அண்மையில் பண்டாரக்குள ஒழுங்கையில் 3 ½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0776016357
(25379)(5-7-6)

### வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

சுதுமலை அம்மன் கோயிலுக்கு அண்மையில் வீட்டுடன் கூடிய7 ¾ பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.
(சி/1844)(5-6-7) தொடர்பு:021 223 0178

### வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் வடக்கு, ஆலங்குளாய் முருகன் கோயிலுக்கு அருகில் நான்கு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776146434

### வீடு வாடகைக்கு

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் st.Ann's Lane இல் விசாலமான வரவேற்பறை, 4படுக்கை அறைகள், 2 குளியலறைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் கூடிய 3 ½ பரப்புக்காணியில் அமைந்த வீடு உடன் வாடகைக்கு விடப்படும்.
நிறுவனங்களுக்கு உகந்தது.
(25389)(5-6-7) தொடர்பு:077 452 7671, 021 790 3444

### வகுப்புகள்

தரம் 1-தரம் 5 வரையான ஆங்கில வகுப்புக்களும் ஏனைய பாடங்களும் நடைபெறுகின்றன. 4+, 5+ மாணவர்களுக்கான விசேட ஆங்கில கற்கை நெறியும் இடம்பெறும்.
இடம்: தட்டாதெரு சந்திக்கு அண்மையில்
(25401)(5-6-7) தொடர்பு:077 598 2220

### மணமகள் தேவை

1975 அச்சுவினி,2இல் செவ்வாய் 27 பாவம் உள்ள கனடா மணமகனுக்கு சைவ போசனமுள்ள மணமகள் தேவை
(25357)(5-6-7) தொடர்பு:077 129 1544

### தவறிவிட்டது

ம.நிமலரூபன்,கலைமணி வீதி, கட்டப்பிராய், யாழ்ப்பாணம் என்பவருடைய பெறுமதியான ஆவணங்கள் அடங்கிய அலுவலக கைப்பை ஒன்று கைதடிக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(24244)(5-6-7) தொடர்பு:077 340 5899,077 670 5666

### வேலையாள்கள் தேவை

பேக்கரி வேலையில் அனுபவ முள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்
புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(25402)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**சேவை**

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள..............
ரெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(சி/4418)(3.6.7) தொ.பே - 0212219686

**வான் விற்பனைக்கு**

62-XXXX தொடரிலக்க முடைய (HAIRS) வான் விற்பனைக்கு உண்டு.
(25427)(5-6-7) தொடர்பு: 077 741 9216

**காணியும் வீடும் விற்பனைக்கு**


யாழ்ப்பாணம்,கொழும்புத்துறை, புங்கங்குளம் வீதியில் அமைந்துள்ள நி.ப. 1 குளி 10 ¾ கொண்ட காணியும் அதனுள்ளமைந்துள்ள மாடி வீடும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 669 3471,021 790 1915 (25428)(5-6-7)

## தவறி விட்டது

நவரெட்ணம் உதயன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன (10.11.2012) யாழ் நகரப் பகுதிக்குள் தவறிவிட்டது . கண்டெடுத்தவர் கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன்தொடர்பு கொள்ளவும்.தொ.பே:
(25418) (6-7) 0778065481

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கந்தசாமி (ஆசாரி)



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தசாமி 13.11.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தற்பராசக்தியின் (ராணி) அன்புக் கணவரும், கடம்பநேசன், சிவநேசன், குக நேசன், இராஜேஸ்வரி, அருள்நேசன், மயூரினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலாம்பிகை, பரிமளம், காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனும், முத்துலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவானந்தம், ஆனந்தராசா மற்றும் இரத்தினசாமி, சிறிதரன், சிறிவரதன், கருணேஸ்வரி, சிவசக்தி, லலிதா ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (18.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அந்தோனியார் வீதி, மாதகல். (25423)(3.6)
தகவல்: குடும்பத்தினர்.

### புதுக்குடியிருப்பு பிரதேசசபை — புதுக்குடியிருப்பு

# பொதுச்சந்தை இறைச்சிக்கடைகள் கட்டணம் அறவீட்டுக் கழிப்பறை (திருமுறிகண்டி) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2013

கீழ்குறிப்பிடப்படும் நிலையங்களினை 2013ஆம் ஆண்டிற்கு(01.01.2013 – 31.12.2013) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி - 19.11.2012 – 04.12.2012 முற்பகல் 12.00 மணிவரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 04.12.2012 பிற்பகல் 1.00மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி - 04.12.2012 பிற்பகல் 2.00 மணி

(1) கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *செயலாளர்* புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகம் புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் முல்லைத்தீவு எனும் முகவரிக்கு எதிர்வரும் 04.12.2012 பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராமசேவையாளரின் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாளஅட்டைப் பிரதியுடன் புதுக்குடியிருப்பிலுள்ள அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்

(3) கேள்விப்பத்திரங்கள் மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி பிரதேசசபையின் தலைமைக்காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(4) உள்ளூராட்சிமன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.

(5) கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்..

(6) கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

(7) குத்தகை யாவும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். குத்தகை எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடத்தப்படின் உடனடியாக குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதோடு வைப்புப்பணங்கள் எவையும் மீளளிக்கப்படமாட்டாது.

(8) இறைச்சிக்காக மாடுகள் கொல்லப்பட முன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்துகொள்ள வேண்டும்.

(9) தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர், கேள்வித்தொகையின் மூன்றிலொரு பகுதியை 12.12.2012ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள வேண்டும்.

(C/1854)(2.6.7)

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக்கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| | அ. புதுக்குடியிருப்பு உப அலுவலகம் | | | |
| 1 | புதுக்குடியிருப்பு(கோம்பாவில்)பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் | 500.00 | 15,000.00 | 600,000.00 |
| 2 | புதுக்குடியிருப்பு(கோம்பாவில்)கோழி இறைச்சிக்கடை | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| 3 | உடையார்கட்டு கோழி இறைச்சிக்கடை | 500.00 | 3,000.00 | 15,000.00 |
| 4 | உடையார்கட்டு பொதுச்சந்தை (அதற்குட்பட்ட விற்பனை நிலையம் நீங்கலாக) | 500.00 | 5,000.00 | 200,000.00 |
| 5 | விசுவமடு பொதுச்சந்தையும் அதற்குட்பட்ட விற்பனை நிலையமும் | 500.00 | 15,000.00 | 600,000.00 |
| 6 | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 15,000.00 | 1,000,000.00 |
| 7 | விசுவமடு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 3,000.00 | 20,000.00 |
| 8 | றெட்பானா பொதுச்சந்தை | 500.00 | 1,000.00 | 5,000.00 |
| | ஆ. ஒட்டுசுட்டான் உப அலுவலகம் | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை | 500.00 | 5,000.00 | 50,000.00 |
| 2 | கற்சிலைமடு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 150,000.00 |
| 3 | முத்து ஐயன்கட்டு இடது கரை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10,000.00 | 110,000.00 |
| | இ. ஒலுமடு உப அலுவலகம் | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டண அறவீட்டுக் கழிப்பறை குறிப்பு:-ஒப்பந்தம் பெற்றுக்கொள்பவராலேயே கழிவகற்றல், சுத்திகரிப்பு, நீர் விநியோகம் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். | 500.00 | 5,000.00 | 100,000.00 |
| 2 | மாங்குளம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 15,000.00 | 440,000.00 |

## LL.B ( UK) கற்கை நெறி

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)

புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது



- ★ உலக தரம் வாய்ந்த கற்கை நெறி.
- ★ இலங்கை மற்றும் UK பாட விதானங்களை உள்ளடக்கியது.
- ★ யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- ★ இலகு தவணை கொடுப்பனவு முறை
- ★ இலவசமான ஆங்கிலம் , மற்றும் தகவல் தொழில் நுட்ப கற்கை திட்டங்கள்.

Prince City Campus
இல 275,மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப்பாணம்.
தொ. பே. 021 492 3855 Hotline: 0775 949 272

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில். குத்தகைக்கான மீள்கேள்வி அறிவித்தல்

27.10.2012 ஆம் திகதி செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டுக்கு பின்வரும் சந்தைகள் , இறைச்சிக்கடைகளுக்கு மீள்கேள்வி கோரப்படுகின்றது.

**மீள்கேள்வி அட்டவணை**

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்களுடன்) இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | நல்லூர் உப அலுவலகம் | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 15,825,600.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 210,000.00 |
| | கொக்குவில் உப அலுவலகம் | | | |
| 1. | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1.000.00 | 10.000.00 | 789,810.00 |
| 2. | கொக்குவில் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 830,110.00 |
| 3. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 139,125.00 |
| 4. | கொக்குவில் உப அலுவலக இல. 329, [illegible] வீதி, ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 161.700.00 |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி. 15.11.2012 (23921)(8-14)

ப. வசந்தகுமார்,
தவிசாளர், நல்லூர் பிரதேசசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுருகும் நினைவுகளுடன்

# அஞ்சலிக்கின்றோம்

## வணபிதா கீதபொன்கலன் லக்ஸ்மன்

### நல்லாயனாய்...

அமரர் அருட்பணி லக்ஸ்மன் அடிகள் எமது பேராலய பங்கில் ஏறக்குறைய ஒரு வருடம் உதவிப் பங்குத்தந்தையாக அரும்பணியாற்றியுள்ளார். பொறுமையும், நிதானமும், சாந்தகுணமும், கடமையுணர்வும் தன்னகத்தே கொண்ட இவர் பணி வாழ்வின் சவால்கள் அனைத்தையும் தன்னுடைய புன்னகையினூடாக வெற்றி கொண்டு மக்கள் மனங்களைக் கவர்ந்து அனைவரின் இதயங்களிலும் வாழ்கின்றார்.

எமது பங்கில் பீடப்பணியாளர்களுக்கும், மறையாசிரியர்களுக்கும் இயக்குநராக இருந்து கிறிஸ்துவின் உன்னதமான பண்புகளைத் தாங்கி நல்லாயனுக்குரிய பணிகளின் ஊடாக பங்கு மக்களை இறையரசிற்கு அழைத்து சென்றார்

இவருடைய நித்தியஇளைப்பாற்றிக்காக இறையருள் வேண்டுகின்றோம்.

*பங்குத்தந்தையர்களும், பங்குமக்களும்*
*தூய மரியன்னை பேராலயம்*

### நல்லபணியாளன்

குருத்துவ திருநிலை பெற்ற கையோடு ஓராண்டு யாழ் பேராலய பணிவாழ்வின் அனுபவங்களை சுமந்துகொண்டு போரின் ரணங்கள் இன்னும் ஆறாத முல்லைத்தீவு பணித்தளத்தை வந்தடைந்தார்.

இளமை மிடுக்கும், இயல்பான அமைதி அப்பிய சுபாவமும், மொழிப்பற்றும், துணிவும் கலந்த ஓர் ஆளுமையை இவர் வெளிப்படுத்தியவர்.

முல்லைத்தீவு பணித்தளத்தின் உதவி பணியாளராக இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு பணித்தளங்களின் காலத்தின் தேவை கருதி தன் உதவிக் கரங்களை நீட்டியவர். ஞாயிறு திருப்பலிகள், தின திருப்பலிகள், நவநாள் மறையுரைகள் என்று தன் புதிய மொட்ட குருத்துவத்தின் அனுபவங்களை பகிர்ந்தவர்.

நல்ல பணியாளன், நல்ல நண்பன், கண்ணுக்குள் குளமாகும் கண்ணீர், இவன் ஞாபகங்கள் கருக்கொள்கின்றன. உன் அவலப் பெருவெளி ஏற்படுத்திய வெற்றிடம் ஈடுசெய்யப்பட முடியாதது.

*பங்குத்தந்தை, பங்குமக்கள்,*
*இரணைப்பாலை – புதுக்குடியிருப்பு*

### நீங்காத நினைவுகள்

அருட்தந்தை கீதபொன்கலன் லக்ஸ்மன் முல்லைத்தீவு மண்ணில் பணியாற்றிய ஐந்து மாதங்களும் நெஞ்சை விட்டு அகலாத நினைவு நாட்கள். அமைதியும் அடக்கமும் பணிவும் எளிமையான வாழ்க்கை முறையும் கொண்ட சிறந்த இளம் குரு இவர். சிந்தனைத் திறனும் செயல் ஆற்றலும் கொண்ட ஒரு ஆழுமையை இவர் பெற்றவர். மக்களுடன் அன்புடனும் பண்புடனும் பழகும் இயல்புடையவர். பொறுப்புணர்வு நேரம் தவறாமை என்பன இவரின் சிறந்த குணங்கள்.

வாழ்க்கை வசதியற்ற நிலையிலும் கூட மகிழ்ச்சியாகப் பணி செய்து எமக்கெல்லாம் எடுத்துக்காட்டாக வாழ்ந்த இளம குரு - லக்ஸ்மன். எடுத்துக்கொண்ட பொறுப்பை சளைக்காமல் செய்து முடிக்கும் பொறுமைசாலி. பணியில் தடைகள் வந்தபோது எதிர்நீச்சல் போடும் செயல்வீரன். புன்னகையை பொன்ன கையாய் அணிந்த அமைதியின் வடிவம்.

இவரின் சிறப்பான பணி மூலம் எமது பங்கு பெற்றுக்கொண்ட எல்லாவிதமான நன்மைத்தனங்களுக்கும் இறைவனுக்கு நன்றி சொல்லுகின்றோம்.

*பங்குதந்தையும் பங்கு மக்களும்*
*முல்லைத்தீவு*



மண்ணில் : 12.10.1979
இறைபணியில் : 18.05.2011
விண்ணில் : 14.11.2012

### மன்னாரில் இருந்து...

தனது குருமட பயிற்சியின் ஒரு தொடர் பயிற்சிக்காக அவரை யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை 2010ம் ஆண்டு நான் தூய செபஸ்தியார் பேராலயப் பங்குத்தந்தையாக இருந்த போது, மன்னார் ஆயருடாக அனுப்பி வைத்திருந்தார்.

என்னோடு வாழ்ந்த நாட்களில் அவரிடம் காணப்பட்ட பலநற்பண்புகளாலும் இறை வனுக்குரிய நல்ல ஊழியனாக பணி செய்த காரணத்தினாலும் பங்குமக்கள் அனைவருக்கும் அவரை நன்றாகப்பிடித் திருந்தது. சாந்தமும், எளிமையும், பணி வும் கொண்டு எல்லோரிடமும் பழகிடு வார். கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை கடமையுணர்வுடனும் ஆர்வத்தோடும் செய்திடுவார். உதாரணத்திற்கு "குடும்பத் தரிசிப்புக்கள்' அன்பியவலயங்களிலே தரிசிப்பு செய்யுங்கள் என்று நான் பணித்தபோது அதை கரிசனையோடு செய்துமுடித்து அதைப்பற்றிய குடும்பத் தரவுகளை எனக்கு நான்கு கொப்பிகள் நிறைய எழுதி சமர்ப்பித்தார்.

உண்மையாவே எவருடைய குறைச் சொல்லுக்கும் ஆளாகமால், எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்று நல்ல ஒரு ஊழியன் என்ற பெயருடன் தனது இடைக்காலப்பயிற்சியை முடித்துக் கொண்டு மன்னாரிலிருந்து எம்மடம் விடைபெற்றுச் சென்றார்.

இந்த இளம் குருமணியின் திடீர் மறைவு எனக்கும் மன்னார் பங்கு மக்களுக்கும் பெரும் அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் தந்துள்ளது. எமது கண்ணீர்த்துயரை உங்களோடு பகிர்ந்து கொண்டு, தொடர்ந்தும் விண்ணகத்திலே நித்தியகுருவாம் ஆண்டவர் இயேசுவின் திருமுன் நின்று, புனிதர்களின் பெரும் தோழமையில் அவர் கலந்திட எம் செபத்தில் வேண்டுகின்றோம். எம் கண்ணீர் அஞ்சலிகளுடன் கூடிய செபங்களும்!!

*அருட்பணி. S.K. தேவராஜா*
*மன்னார் மறைமாவட்டம்*

### ஏன் இந்த வேகம்?

அன்பின் அருட்தந்தையே!
நீங்கள்
பெயருக்குத்தான்
முல்லைத்தீவு உதவிக்குரு
ஆனால் உண்மையில்
அயல் பங்குகள் அனைத்திற்கும்
அன்புக்குரு
விரைவாக இறையடி சேரத்தானா
இந்த வேகம்?
ஓடி ஓடிப் பணி செய்தீர்கள்
பயன்பெற்ற எங்கள் கண்ணீரும்
உங்கள் பாதங்களில்
அஞ்சலிக்கிறோம்.

*பங்குத்தந்தை, பங்குமக்கள்*
*முள்ளியவளை, மாமூலை,*
*கூழாமுறிப்பு, ஒட்டிசுட்டான்,*
*முத்தையன்கட்டு*

### உம் வழியில் இன்னும் பலர்...

எமது பங்கின் முதற்குருமணி அருட்பணி கீதபொன்கலன் லக்ஸ்மனின் திடீர் மறைவு அறிந்து பங்குமக்களாகிய நாம் ஏங்கி நிற்கின்றோம்.

சிறுப்பம் முதலே பாடசாலையிலும், ஆலயத்திலும், ஊரிலும் வெளிப்பட்ட உங்களது எளிமை, தாழ்ச்சி, கீழ்ப்படிவு, இறைபக்தி, பணிஆர்வம் என்பனவற்றை எண்ணிப் பார்க்கிறோம். அவசரமாகவும் அகாலமாகவும் நீங்கள் எம்மை விட்டுப் பிரிய நேர்ந்தன் காரணத்தை எம்மால் புரியவே முடியவில்லை.

எமது சனசமுக நிலைய வளர்ச்சியிலும், இளையோரின் கழகத்தின் முன்னோற்றத்திலும், கடற்றொழிலாளர் சங்கத்தின் நலனிலும் நீங்கள் காட்டிய ஆர்வத்தையும் உங்கள் பங்களிப்பையும் நன்றியோடு நினைக்கிறோம்.

எமது கிராமத்தின் முதற் குருமணியாகிய நீர் நீடு வாழ்த்து அருட்பணிகள் பல ஆற்றி எங்களுக்கு மிகுந்த பெருமை சேர்ப்பீர் எனக் கனவு கண்டோம். அனைத்துமே கானல் என்ற ஏக்கம்.

இருப்பினும் இறைசித்தத்தை உறுதியோடு ஏற்றுக்கொள்கிறோம். நீர் காட்டிய வழியில் இன்னும் பலர் எம்மத்தியிலிருந்து நிட்சயம் பயணிப்பர்.

விடைபெறுகிறோம் விண்வீட்டில் சந்திக்கும் வரை

*பங்குத்தந்தையும், பங்குமக்களும்*
*எழுவைதீவு*

### அன்பின் அண்ணா!

லக்ஸ்மன் அண்ணா!
குருமட சோலையிலே - நாம்
நட்பின் குயிற்கூட்டங்களாய்
பயிற்சியில் ஒன்றானோம்
பரமனுக்குப் பண்ணிசைக்க...

உதவிகேட்டு வந்தால்
உடனடியாய்ப் புரிவாய்...
கள்ளமில்லா உன் சிரிப்பில் - எம்
கவலைகளை நீ களைவாய் ...
ஆற்றல்கள் பல கொண்டே
அழைத்தவன் பதம் தொடர - உன்
தடைகளை நீ தகர்த்தாய் ...

உன் அன்பு வார்த்தைகள் - இன்றும்
அதிர்கின்றன எம் செவியறைகளில்
உன் குறும்புகளும் செல்லச் சண்டைகளும்
கண்முன்னே தோன்றி
கலங்கச் செய்கின்றன இதயத்தை

தம்பிமார் எம்மைத் தவிக்க விட்டு - நீ
சென்றாயோ!
கண்ணீர்ப் பூக்களை உனக்கு
காணிக்கையாக்கி
அஞ்சலி செய்கிறோம்...

*மாணவர்கள் சவேரியார் குருத்துவக்கல்லூரி*

### வாழ்க்கைச் சுவடுகள்

| | |
|---|---|
| பெயர்: | கீதபொன்கலன் லக்ஸ்மன் |
| தந்தை: | குருசுமுத்து கீதபொன்கலன் (ரத்தினசிங்கம்) |
| தாய்: | தொம்மைப்பிள்ளை மேரி ஜசிந்தா (ஜெயமணி) |
| பிறப்பிடம்: | எழுவைதீவு |
| பிறப்பு: | 12.10.1979 |
| கல்வி: | எழுவைதீவு றோ.க.த.க.பாடசாலை, எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம், கொழும்புத்துறை சென் ஜோசேப், நெடுந்தீவு மகா வித்தியாலயம், புனித பத்திரிசியார் கல்லூரி |
| குருத்துவ உருவாக்கம்: | தூய மாட்டீனார் குருமடம் 1998 -2002 |
| | தூய சவேரியார் குருத்துவக் கல்லூர் 2002 - 2010 |
| இடைக்காலப் பணிப்பயிற்சி: | புனித கென்றியரசர் கல்லூரி, Don Bosco - நீர்கொழும்பு |
| | மன்னார் 2009 ஆகஸ்ட் - 2010 ஏப்பிரல் |
| கல்வித்தகைமை: | B. Ph (Rome) B. Th (Rome) |
| திருத்தொண்டர்: | 17.11.2010 |
| பணித்தளங்கள்: | குருநகர், பாசையூர் |
| குருத்துவம்: | 18.05.2011 |
| பணித்தளங்கள்: | பேராலயம், முல்லைத்திவு, இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு |

### வானகம் திறந்துள்ளது...

வானத்தவர்களால்
வாகை சூடப்பட் புறப்பட்டவனே
ஏன் இந்த அவசரம்?
முள்முடி கூட
முப்பத்து மூன்றில் தானே சூடப்பட்டது
நிமிர்ந்த வெள்ளைக் கொக்கென – நீ
அட,
உன் நினைவுகளும் நீண்டு கொண்டே
வருகின்றன எமக்கு
சூரியன் கூட நமக்கு
காலை முதல் மாலை வரை தான்
எமக்கும் ஏழைகளுக்கும் தெரியும்
உன் வேலைகள் எத்தனை விரிந்ததென்று
ஆன்மீகத்தால் அனைவரையும் ஈர்த்தவனே
அருட்பணி லக்ஸ்மன்
வானகம் திறந்துள்ளது.
நீ வாசல்வழி உள்ளே சென்று கொள்
நீ தட்டாத வாசல்களை
நண்பர்கள்
நாங்கள் இங்கே தட்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையினால் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நடத்தப்பட்டது. இந்தத் தொடரின் இறுதிப் போட்டி யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் அண்மையில் நடைபெற்றது. இதில் யாழ்.இந்து அணி 53 : 45 என்ற புள்ளிகளடிப்படையில் யாழ். மத்திய கல்லூரி அணியை தோற்கடித்து வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. (ந-23)

# சர்வதேச மெய்வன்மையில் சாதித்த செந்தூரனுக்கு அமோக வரவேற்பு





யாழ்ப்பாணம்,நவ.17

ஆஸ்திரேலியாவில் அண்மையில் நடைபெற்ற சர்வதேசப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் இலங்கை சார்பில் கலந்து கொண்டு 16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தினை பெற்று சாதனை புரிந்த யாழ். இந்துக் கல்லூரி மாணவன் இ.செந்தூரனுக்கு கல்லூரிச் சமூகத்தினரால் நேற்றுக் காலை சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை பண்ணை சிவன் கோவில் முன்றிலிலிருந்து சாதனை வீரன் செந்தூரன்,கல்லூரி 'பாண்ட்' வாத்திய இசையுடன் யாழ்.இந்துவுக்கு கல்லூரி சமூகத்தினரால் வரவேற்று, அழைத்து வரப்பட்டார். கல்லூரியில் உள்ள ஞான வைரவர் ஆலயத்தில் சிறப்பு பூசை இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து கல்லூரி அதிபர் கே.கணேசராஜா தலைமையில் குமாரசுவாமி மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

சாதனை வீரன் இ.செந்தூரன், விளையாட்டுப் பொறுப்பாசிரியர் சுவாமிநாதன், பயிற்றுநர் செ.ரமணன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் ஓய்வறையில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் வருகை தந்த யாழ்.மத்திய கல்லூரியில்ஆசிரியர் குழுவினரால் சாதனை வீரன் செந்தூரன் நினைவு பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ங- 23)

# கனகரத்தினம் ம.ம.வி. அணியை பணிய வைத்தது மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம்,நவ.17

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான பிரிவு iii இற்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

கடந்த புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியினர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத்தீர்மானித்தனர். இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணியினர் 56:4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் மதுஷன் 31 ஓட்டங்களையும், தேனுஷன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சார்பில் சஞ்சீவன் 15 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், சுலோக்ஸ்சன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், பிரஷன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியால அணி 35 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 21 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் சுலோக்ஸ்சன் 6 ஓட்டங்களையும், தர்சன் 3 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணிசார்பில் மதுஷன் 11 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும் ,ஜெனேசன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 5 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், அண்டர்சன் 11 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

மிகச்சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்ததால்கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி தொடர்ந்து துடுப்பெடுத்தாடும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி 27 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்ட நேரம் முடிவுற்றது . கனகரத்தினம் மத்திய மகாவித்தியால அணி சார்பில் அதிகபட்சமாக சங்கீதன் 3 ஓட்டங்களை பெற்றார்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் அண்டர்சன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 5 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், கனிஸ்ரன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், மதுஷன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் வீழ்த்தினர்.

போதிய நேரமின்மையால், போட்டி முழுமையுறாத போதிலும் முதல் இன்னிங்ஸின் முடிவில் பெற்றிருந்த யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ( ங-23)

## கோப்பாய் பிரதேச கரப்பந்து இன்று



யாழ்ப்பாணம், நவ.17

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜனாதிபதி வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் கோப்பாய் பிரிவுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை புத்தூர் கலைமதி கரப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ங-23)

## உதைபந்து பயிற்சி நிலைய திறப்பு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ.17

ஜேர்மன் அரசு மற்றும் சர்வதேச உதை பந்தாட்ட சம்மேளனம் ஆகியவற்றின் நிதிப்பங்களிப்புடன் அரியாலை பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் யாழ். உதைபந்தாட்ட லீக்குக்கான உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் குறித்த திறப்பு விழா நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.அத்துடன் இந்த உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா தொடர்பான புதிய திகதி பின்னர் அறியத்தரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ங- 23)

## கூடைப்பந்துத் திடல்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.17

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் நிதிப் பங்களிப்புடன் முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரியில் 15 இலட்சம் ரூபா செலவில் கூடைப்பந்தாட்டத்திடலும் 4 இலட்சம் ரூபா செலவில் கரப்பந்தாட்டத் திடலும் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி என்பவற்றிலும் தலா 15 இலட்சம் ரூபா செலவில் கூடைப்பந்தாட்ட திடல் புனரமைப்புப் பணிகள் இடம் பெற்று வருகின்றன என்று வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். (ங- 23)



அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட கராத்தே போட்டியில் 13 வயதுப் பிரிவினருக்கான மண் நிறப் பட்டிக்கான கராத்தே போட்டியில் தங்கம் வென்ற சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் அனுஷன் பயிற்றுநனர் சென்சேய் விஜயராஜுடன். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத்தம் எதுவும் இல்லை




அண்மைக்காலமாக பெருமளவு ஓட்டங்களைக் குவித்திருக்காத போதிலும் தான் அழுத்தங்களுக்குள்ளாகியிருக்கவில்லை என்று ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் டேவிட் வோணர் தெரிவித்துள்ளார். அத்தோடு மிக விரைவில் தன்னால் சிறப்பாக ஆட முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் டேவிட் வோணர் ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்த போதிலும் சக ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான எட் கோவன், 6 ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசி ஆகியோர் சதங்களையும், 5 ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரரான மைக்கல் கிளார்க் 250 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள டேவிட் வோணர், இரண்டாவது ஆட்டத்துக்குச் செல்வதற்கு முன்னர் தான் அழுத்தங்கள் எவற்றையும் எதிர்கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். அத்தோடு போட்டியைத் தொடர்ந்து வெல்லும் வரை, உலகின் முதல்நிலை அணிக்கான பயணம் சிறப்பாகத் தொடரும் வரை அவையே முக்கியமானது எனத் தெரிவித்துள்ளார்.

தான் சிறப்பாக உணர்வதாகத் தெரிவித்த டேவிட் வோணர், தான் புத்துணர்வுடன் காணப்படுவதாகவும், மீண்டும் சிறப்பாகச் செயற்படத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். முதலாவது ஆட்டத்தில் சக வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்கும் போது அவற்றை மைதானத்திற்கு வெளியேயிருந்து பார்த்துக் கொண்டிருந்ததாகவும், தற்போது தனது வாய்ப்புக்காகக் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இரண்டாவது ஆட்டத்துக்கு முன்னதாக மீண்டும் சிறப்பாகத் தயாராவதாகத் தெரிவித்த அவர், தன்னால் முடிந்தளவு மிகச்சிறப்பாகத் தயாராவதாகத் தெரிவதாகத் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (5)

## வீடியோ பார்த்தேன்; சதம் அடித்தேன்



இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரரான வீரேந்திர சேவாக் 2 ஆண்டுகளுக்குப் பின்பு டெஸ்ட் ஆட்டத்தில் சதம் அடித்துள்ளார்.


இங்கிலாந்து அணிக்கெதிராக இடம்பெற்று வருகின்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்திலேயே சேவாக் 117 ஓட்டங்களை விளாசியிருந்தார். இது தொடர்பில் சேவாக் தெரிவிக்கையில், எனது வீடியோ ஆய்வாளருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது கடந்த கால இன்னிங்ஸ் ஆட்டங்களை இரவு 11 மணி வரை பார்த்தேன்.

முதல் 10 பந்துப் பரிமாற்றங்கள் எச்சரிக்கையுடன் ஆடிய ஆட்டங்களில் நான் சதம் அடித்து இருப்பதை வீடியோவைப் பார்த்து புரிந்து கொண்டேன். அதேபோல் செயல்பட்டு சதம் அடித்தேன்.

2 ஆண்டுகளுக்குப் பின்பு சதம் அடித்தது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ரசிகர்களுக்கு என் திறமை மீது சந்தேகம் இருந்து இருக்கலாம். எனக்கு எனது திறமை மீது எந்தச் சந்தேகமும் கிடையாது.

கம்பீர் சிறப்பாக ஆடினார். இதனால் எங்களால் சிறப்பான தொடக்கம் கொடுக்க முடிந்தது. இதேவேளை கடந்த போட்டியில் புஜாராவும் நன்றாக ஆடினார் எனவும் கூறியுள்ளார். (5)

## உள்ளூர் தொடரிலிருந்து உமர் அக்மல் நீக்கம்



பாகிஸ்தான் அணியின் மத்திய தர வரிசைத் துடுப்பாட்ட வீரர் உமர் அக்மல் அவரது உள்ளூர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். மோசமான திறன் காரணமாகவே அவர் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் சுய் டெக்கு 'டைப் லைன்ஸ்' நிறுவனத்தின் அணியிலிருந்தே உமர் அக்மல் நீக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தானின் முதற்தரப் போட்டித் தொடரொன்றிலிருந்தே உமர் அக்மல் நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட அணியின் பிரதான வீரராகக் காணப்படும் உமர் அக்மல், பாகிஸ்தானின் டெஸ்ட் அணியில் இன்னமும் நிரந்தரமான இடத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையிலேயே அவர் உள்ளூர் அணியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் பசித் அலி, உமர் அக்மலின் மோசமான திறன் காரணமாகவே அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அத்தோடு முதற்தர போட்டியில் எவ்வாறு விளையாடுவது என்பதை உமர் அக்மல் கற்றுக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்த பயிற்றுவிப்பாளர், முதற்தரப் போட்டியில் விளையாட வேண்டுமானால் உமர் அக்மல் தனது துடுப்பாட்ட நுட்பங்களைச் சீர்செய்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை வருத்தமளிப்பதாகத் தெரிவித்த உமர் அக்மல், இந்தத் தொடரில் பங்குபற்றுவதற்கு அற்பமாகக் காணப்பட்டதாகவும், இந்த நிலையில் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை வருத்தமளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (5)



## பாகிஸ்தான் பந்து வீச்சாளர் ஆஸி.யில் தஞ்சம்

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் பவத் அகமதுவுக்கு, ஆஸ்திரேலியா அரசியல் தஞ்சம் அளித்துள்ளது.

பாகிஸ்தானின் எல்லைப்புற பகுதியைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் பவத் அகமதுவுக்கு கிரிக்கெட் விளையாடுவதால் பயங்கரவாதிகளிடம் இருந்து தொடர்ந்து கொலை மிரட்டல் வந்து கொண்டே இருந்தது.

இதனிடையே, கடந்த 2010 இல் குறுகிய கால விசாவில் கிரிக்கெட் விளையாட ஆஸ்திரேலியா சென்ற பவத் அகமது, அரசியல் தஞ்சம் கோரியிருந்தார்.


இவரும், தற்போதைய தென்னாபிரிக்க அணியில் இடம் பெற்றுள்ள இம்ரான் தாகிரும், பாகிஸ்தான் உள்ளூர் போட்டியில் பங்கேற்றுள்ளனர்.

தவிர, இருவரது பந்துவீச்சும் சம அளவில் ஒத்திருந்தது. இதனால், ஆஸ்திரேலிய வீரர்கள் துடுப்பாட்ட பயிற்சிக்கு பவத் அகமதுவை பயன்படுத்திக் கொண்டனர்.

தற்போது 30 வயதான பவத் அகமதுவுக்கு ஆஸ்திரேலியா அரசியல் தஞ்சம் [illegible] ஆஸ்திரேலிய அமைச்சர் கிறிஸ் போவன், பவத் அகமதுவின் [illegible] தனிப்பட்ட முறையில் பரிசீலித்து நிரந்தரமாக தங்க அனுமதி வழங்கியுள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸி. அணியில் வொட்சன் இடம்பிடிப்பு




ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2 ஆவது ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய அணியின் 13 வீரர்கள் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள 13 பேர் கொண்ட அணியில் ஷேன் வொட்சன் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் உபாதை காரணமாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காத ஷேன் வொட்சன், இரண்டாவது ஆட்டத்துக்கான 13 பேர் கொண்ட குழாமில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், அவரது உடற்தகுதியை அவர் நிரூபித்தால் மாத்திரமே அவர் விளையாடும் பதினொருவர் அணியில் சேர்க்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஷேன் வொட்சனுக்கு ஏற்பட்ட கால் உபாதையிலிருந்து அவர் தொடர்ந்தும் முன்னேறி வருகிறார் எனத் தெரிவித்த பிரதம தேர்வாளர் ஜோன் இன்வெராரிற்றி, ஆனால் விளையாடும் பதினொருவர் அணிக்கான தேர்வில் கருத்திற்கொள்ளப்படுமளவிற்கு அவர் முழுமையான உடற்தகுதியை அடைந்து விடுவாரா என்பதை உறுதி செய்ய முடியாதுள்ளதாகத் தெரிவித்தார்.

முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெளிப்படுத்திய திறமையான வெளிப்பாடு குறித்து தேசிய தேர்வாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித்த அவர், முதலாவது நாளில் போதியளவு திறமைகளை வெளிப்படுத்தாத போதிலும் அதிலிருந்து மீண்டு வந்தமை மகிழ்ச்சிக்குரியது எனத் தெரிவித்தார். (5)


# இந்தியா ஆதிக்கம்; இங்கிலாந்து திணறல்

புஜாராவின் இரட்டைச் சதமும், இந்திய அணியின் சுழல் பந்து வீச்சும் ஒருங்கிணைந்து இங்கிலாந்து அணியை நேற்றுப் புரட்டியெடுத்தது. இந்திய அணி 521 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட அதே வேளை பதிலளித்து ஆடிவருகின்ற இங்கிலாந்து அணி நேற்றைய நாள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் அஹமதாபாத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

சேவாக்கின் அசத்தலான 117 ஓட்டங்களுடன் நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவில் இந்திய அணி 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் புஜாரா 98, யுவராஜ் சிங் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டம்



தொடர்ந்தது. சிறப்பாக ஆடிய புஜாரா தனது சதத்தைப் பூர்த்தி செய்தார். மறுமுனையில் கலக்கிய யுவராஜ் மிகச் சிறப் பாக இணைப்பாட்டத்தை வழங்க இந்திய அணி வலுவான நிலைக்குச் சென்றது. புற்று நோய்ப் பாதிப்பிலிருந்து மீண்ட யுவராஜ் தனது 11 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். இவர்களிடையே ஐந்தாவது இலக்குக்காக 130 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் யுவராஜ் 74 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார்.

தொடர்ந்து நுழைந்த அணித்தலைவர் டோனி வழமைபோன்று 5 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அதன் பின்னர் அஸ்வின் ஓரளவு சிறப்பாக ஆடி 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் நிதானமாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய புஜாரா தனது முதலாவது இரட்டைச் சதத்தை அடித்தார்.

இந்திய அணி 160 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 521 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. புஜாரா ஆட்டமிழக்காமல் 206 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுவான் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பம் சுமாராகவே அமைந்தது. குக், கொம்ரொன் ஜோடி களமிறங்கியது. அறிமுக வீரர் கொம்ரொன் இரட்டை இலக்கத்தை எட்டுவதற்குள் இந் திய அணியின் சுழலில் வீழ்ந்தார். அணி 26 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது இலக்கு அஸ்வினால் சரிக்கப்பட்டது. தொடர்ந்து 'நைற் வோர்ச்சமனாக' அண்டர்சன் களமிறங் கினார். அவர் 2 ஓட்டங்களுடன் ஓஜாவின் சுழ லில் சிக்கினார். அதன் பின்னர் களமிறங்கிய ரொரட் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் அஸ்வினின் சுழலில் ஆட்டமிழந்தார். நேற்றைய ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து அணி 3 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. களத்தில் குக் 22, பீற்றர்ஸன் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். (5)

## கண்ணீர் அஞ்சலி



எமது அருமை நண்பரும் கஜன் கொன்ஸ்ரக்ஷன் உரிமையாளருமான

நடராஜா மோகனராஜ்

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நகுலாம்பிகை நடராஜா**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளரும் ஊழியர்களும்
AXSHAYA CONSTRUCTION JAFFNA. (25439)(3.14)

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு நண்பன் ரெரன்சனின் பாசமிகு தந்தையார்

**ஜோசப் ஜேசுதாசன்**

*(ஓய்வு பெற்ற கணித ஆசான், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)*

தந்தையெனும் வாழ்விற்கு முழு அர்த்தமாய்
வாழ்ந்த எம் தோழனின் தந்தையே!
உங்கள் பிள்ளைகள் பிறந்தது முதற்கொண்டு பிரியும் வரை
அவர் தம் சுவாசமாய் வாழ்ந்தவரே!
உங்களுக்காய் எங்கள் கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.
பள்ளிக்கு சிறந்த ஆசானாய்
இல்லறத்துக்கு உதாரண புருசனாய்
அவர் தம் மழலைகட்கு பாசத்தின் உறைவிடமாய் நமக்கெல்லாம்
புன்னகையின் உருவமாய்
காற்றிலே கலந்துவிட்ட உங்களின்
ஆத்மா சாந்தியடைய உங்கள் பாதங்களில்
மலர்தூவி பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பதினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பொறியியல் பீட நண்பர்கள் (2008)
மொறட்டுவ பல்கலைக்கழகம். (சி/1867)(9.14)


## கம்ப்யூட்டர் ருடே

"கம்ப்யூட்டர் ருடே" டிசெம்பர் மாத இதழுக்கான ஆக்கங்கள், விளம்பரங்கள் கோரப்படுகின்றன. கிடைக்கவேண்டிய கடைசிநாள் இம்மாதம் 28 ஆம் திகதி.

தொடர்புகளுக்கு: "கம்ப்யூட்டர் ருடே"
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : comtoday @ uthayan.com
Phone: 0215676700 (சி/1861)(3.14)


## மரண அறிவித்தல்

### திருமதி நகுலாம்பிகை நடராசா



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவை வாழ்விடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலாம்பிகை நடராசா நேற்று முன்தினம் (15.11.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் நடராசாவின் அன்புமனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், மோகனராஜ் (அஞ்சல் அதிபர் - அஞ்சல் அலுவலகம் - மானிப்பாய்), கந்தலீலா (ஆசிரியர் - யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) ஆகியோரின் பாசமிகு தாயும், பிறேமா (முகாமைத்துவ பங்காளர் - கஜன் கொன்ஸ்ரக்ஷன்) அவர்களின் அன்பு மாமியும், தருண்ராஜ், பிரதிஷ்கா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேய பிள்ளை, பாக்கியலட்சுமி, அன்னலட்சுமி, பராசக்தியம்மா, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2012) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கஜன் கொன்ஸ்ரக்ஷன்,
205, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (25416)(6.7.8)

தகவல்:
ந. மோகனராஜ்
(மகன்)


## இசுசு றக் விற்பனைக்கு

இசுசு ELF 250 Single wheel , Single Battory, 10½ அடி, 68-xxxx 4.JB1 எஞ்சின்,(டீசல் வேலை செய்யக் கூடியது)மிக நல்ல நிலையிலுள்ள றக் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0776306733, 0212250186 (25387)(6-7)



## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா சட்ட ஆலோசனையின் இறுதி நாள் 15.12.2012

### ஏன் இந்தக் காலக்கெடுவினுள் நாம் திசைகாட்டியில் ஆலோசனை பெற்றாக வேண்டும்?

**தனித்துவமானவர்கள்:**

ஆம் வடபுலத்தில் மேற்படி ஆலோசனைத்துறையில் பலவித வெற்றிகளை ஈட்டி சாதனைபடைத்துவரும் ஒரேயொரு நிறுவனம் திசைகாட்டி மட்டுமே.

**முதலுக்கு மோசமில்லை**

முற்பணமோ பிற்பணமோ கொடுத்தவர் கேட்ட கணத்தில் மீளளிப்பு என்பதற்கிணங்க ஊரரறிய பல லட்சங்களை திருப்பிக் கொடுத்ததன் மூலம் தாம் முன்மாதிரியானவர்கள் என்பதை நிரூபித்தவர்கள். எனவே உங்கள் முதலுக்கு மோசமில்லைத்தானே.

**மீள எப்போ ஆரம்பிக்கப்படுமோ தெரியவில்லை.?**

கௌரவ இயக்குநர் சபைத்தீர்மானத்தின் பிரகாரம் இதுவரை கிடைக்கப்பெற்ற விசேட ஆலோசனை செயற்திட்டத்திற்குரிய பல நூற்றுக்காணக்கான விண்ணப்பங்களிற்கு பரிகாரம் கண்ட பின்பே மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதால் மீளவும் ஆலோசனை வழங்கல் எப்போது ஆரம்பிக்கப்படுமோ தெரியவில்லை.

இன்னும் என்ன தாமதம் கறைபடியாத வரலாற்றைக் கொண்ட பகிரங்கத்தன்மையான முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான உங்கள் திசைகாட்டியிடம் விரைந்து வாருங்கள்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல 0212219016



(25414)(3.6)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிறபகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

புதிய வகுப்புக்கள் Batch I - 12-11-2012 | Batch II - 14-11-2012 | Batch III - 17-11-2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுப்பு எனும் கறுப்பை துடைத்தெறிவோம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**செயலில் இறங்குங்கள் :**

வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெறும் ஆதரவு மட்டுமே அளிப்பது போதாது. வெறுப்புணர்வுடன் அலைபவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிரசாரம் செய்ய வேண்டும். வெறுப்புணர்வு எங்கு உள்ளது. எப்படி, எதனால் உருவாகிறது என்பதைக் கண்டறிய வேண்டும். வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்ட மக்களையும் இச்செயலில் ஈடுபடுத்தினால், அவர்களின் அனுபவ வார்த்தைகள் நிச்சயம் வெறுப்புணர்வுடன் இருப்பவர்களுடைய மனதையும் மாற்ற உதவி புரியும்.

**மாற்றுவழிகளைக் கண்டுபிடியுங்கள் :**

வெறுப்புணர்வை பரப்பும் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் ஒதுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு எதிரான கூட்டம் என்று தெரிந்தால் அதில் கலந்து கொள்ளாதீர்கள். அவர்களுக்கு எதிரான ஊர்வலத்தை புறக்கணியுங்கள். தனிப்பட்ட ஒருவருக்கு எதிரானதாக இருந்தாலும் அதைக்கூட தவிர்த்து விடுங்கள். உங்கள் அருகில் வெறுப்புணர்வை வளர்க்கும் விதத்தில் யாரேனும் பேசினாலோ அல்லது நடந்து கொண்டாலோ அவர்களிடம் வெறுப்புணர்வைக் குறைக்கும் வழிகளைக் கூறுங்கள். அன்பையும், ஒற்றுமையையும், மனித உரிமையின் அவசியத்தையும் அவர்களிடம் வலியுறுத்துங்கள். மனிதாபிமானத்துடன் மற்றவர்களுடன் பழக வேண்டும். மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறுங்கள். வெறுப்புணர்ச்சியை மறக்க முயற்சிக்க வேண்டும். அதற்கு மாற்றுவழிகளைத் தேட வேண்டும்.

**போராட்டம் :**

மனம் முழுவதும் வெறுப்புணர்வை நிரப்பியவர்களைக் கண்டுபிடியுங்கள். அவர்களுடைய மனதிலிருந்து வெறுப்புணர்வை ஒழிக்கப் போராட வேண்டும். அவர்களுடைய ஒவ்வொரு செயலிலும் ஒளிந்திருக்கும் வெறுப்புணர்வை எடுத்துக் காட்ட வேண்டும். அதற்கு, நடுநிலையுடன் செயல்படும் நபர்கள், நிறுவனங்கள், நாளேடுகள் ஆகியவற்றை துணையாகக் கொள்ளுங்கள். ஆனால், எவ்விதத்திலும் வெறுப்பை ஒழிக்க வெறுப்புணர்வு உள்ளவர்களிடம் நேரடியாக மோதாதீர்கள். அவர்களை நேரடியாக கண்டிக்காதீர்கள். இப்படிச் செய்தால் அவர்களுடைய வெறுப்புணர்வை நாம் ஈட்ட வேண்டியது வரும். மறைமுகமான வழிகள் மூலமாகவே போராட வேண்டும். வெறுப்புணர்வுடன் உள்ளவர்கள் கூடும் இடங்களை தேடிப்பிடியுங்கள். பொறுமையின் அவசியத்தையும், அன்பின் முக்கியத்துவத்தையும் அங்கு பரப்புங்கள். வீடுகள் தோறும் பிரசாரம் செய்யுங்கள். இணையத்தளங்கள், உள்ளூர் கேபிள் தொலைக்காட்சிகள், நாளேடுகள் வாயிலாகப் பரப்புங்கள்.

**புகழ்பெற்றவர்கள் மூலம் பிரசாரம் :**

வெறுப்புணர்வை ஒழிக்க நாம் கூறும் கருத்துகளையும், ஆலோசனையைக் காட்டிலும், தெரிந்த ஒரு முக்கிய நபர் மூலமாக வெறுப்புணர்வுக்கு எதிரானக் கருத்துகளைப் பரப்பலாம். கட்சித் தலைவர்கள், ஊர்ப் பெரியோர்கள், மதத்தலைவர்கள், அரச அதிகாரிகள், தொழிலதிபர்கள், காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் மூலமாக வெறுப்புணர்வை ஒழிக்கும் வழிகளை எடுத்துக் கூறுவதன் மூலமாக கருத்துகள் 100 மடங்கு விரைவாக அனைவரையும் சென்றடையும். இத்தகைய புகழ் பெற்றவர்கள் மூலமாக, கூட்டங்கள் நடத்துவது, ஊர்வலம் நடத்துவது பிரசாரம் செய்வது போன்றவற்றின் மூலம் வெறுப்புணர்வு உள்ளவர்களையும் இணைத்து அவர்கள் மனதில் உள்ள குணத்தை ஒழிக்கச் செய்யலாம். அதற்கான பாதிப்பும் நிச்சயம் இருக்கும்.

**தொலைநோக்கு :**

வெறுப்புணர்வைத் தற்சமயத்திற்கு மட்டும் ஒழிக்காமல், எதிர்காலத்தில் அத்தகைய குணம் மனதில் தோன்றாத நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு நம் எண்ணங்களையும், செயல்களையும், சிந்தனைகளையும் அகலப்படுத்திக் கொள்வது முக்கியம். வெறுப்புணர்வு என்பது முதலில் நம்முடைய வீட்டில் இருந்துதான் தொடங்குகிறது. நம் மனதிலிருந்துதான் தொடங்குகிறது. அதை எவ்வாறு வேரறுப்பது என்பதை சிந்திக்க வேண்டும். வெறுப்புணர்வை ஒழிக்க மிகச்சிறந்த வழி பொறுமை என்று மனோவியல் வல்லுநர்கள் அனுபவத்தினூடாக உணர்ந்து கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆதலால் பொறுமையை கடைப்பிடிப்பது மிகவும் அவசியம். எப்போதும் ஒருவரைப் பற்றியோ அல்லது ஒரு பிரிவினரைப் பற்றியோ முழுமையாக அறிந்து கொள்ளாமல் மனதில் அவர்கள் குறித்த தவறான எண்ணங்களை வளர்க்கும் பழக்கத்தை அழிக்க வேண்டும். இந்த எண்ணமாற்றம் மனதில் உதித்துவிட்டால் செயல்பாடுகளில் நிச்சயம் மாற்றம் வரும். தவறான, முழுவிவரம் தெரிந்து கொள்ளாமல் வரும் எண்ணங்களே வெறுப்புணர்வுக்கு அடிப்படை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

**பொறுமையைக் கற்றுக்கொடுங்கள் :**

விதை நன்றாக இருந்தால் விளையும் பொருளும் நன்றாக இருக்கும். ஆதலால், வெறுப்புணர்வை ஒழிக்கும் நடவடிக்கையை குழந்தைகளிடமிருந்து தொடங்குவது சிறந்தது. அவர்களுக்குப் பொறுமையின் முக்கியத்துவத்தையும், சக மாணவர்களிடம், தோழிகளிடம் காட்டும் அன்பின் அவசியத்தையும் எடுத்துக் கூற வேண்டும். இன, மத, பொருளாதார உணர்வுகளில் உண்டாகும் வெறுப்புகளால் விளையும் தீமைகளை எடுத்துக்கூற வேண்டும். நல்ல கதைகள், நாடகங்கள், பாடங்கள், பாடல்கள், ஓவியங்கள் மூலமாகவும் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறி அவர்களையும் பங்கேற்கச் செய்யலாம். யோகா, இசை, உள்ளிட்டவற்றில் குழந்தைகளை ஈடுபடுத்தி, அதன் மூலமாக பிறரிடம் வெறுப்புணர்வை காட்டாமல் இருப்பது குறித்து உணர்த்தலாம்.

**உங்களைச் சோதித்துக் கொள்ளுங்கள்:**

உங்கள் மனதில் பிறரைப்பற்றிய தவறான எண்ணங்கள், முழுமையாக அறியாமல் வளர்த்துக் கொண்டுள்ள தவறிய கணிப்புகள் ஆகியவற்றை வெளிக்கொணருங்கள். அவை எவ்வாறு உருவானது என்பதற்குக் காரணத்தைத் தேடுங்கள்.

(முற்றும்)



- இணையம்


> “
> வெறுப்புணர்வை ஒழிப்பதற்கு நம் எண்ணங்களையும், செயல்களையும், சிந்தனைகளையும் அகலப்படுத்திக் கொள்வது முக்கியம். வெறுப்புணர்வு என்பது முதலில் நம்முடைய வீட்டில் இருந்துதான் தொடங்குகிறது. நம் மனதிலிருந்து தான் தொடங்குகிறது. அதை எவ்வாறு வேரறுப்பது என்பதை சிந்திக்க வேண்டும். வெறுப்புணர்வை ஒழிக்க மிகச்சிறந்த வழி பொறுமை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் தூக்கம் இதில் எந்தவகையானது?

கடைசி நிலைதான் துரீயம் என்ற சமாதி நிலை. இதனை 'உறை உணர்வு கடந்த நிலை' என்றும் சொல்வர். இதில் விழிப்பு, கனவு, தூக்க நிலைகள் மூன்றும் அடங்கி விடுகின்றன. ஆகவே, விழிப்பாலும் துரீய நிலையில் இருந்து கொண்டு இயங்கமுடியும். கனவிலும் கூட இதனை உணரமுடியும். இயல்பான நல்ல தூக்கத்தின் சுகமும் இதில் உண்டு. அதாவது உடலின் தொடர்பின்றி துரீயத்தில் இருக்க முடியும். தியானத்தின் ஆழ்ந்த நிலையில் இருப்பவர்கள் இந்த துரீய நிலையை எளிதாக உண்டாக்கிக் கொள்ள முடியும். அதாவது, ஒரு சில மனநல மருத்துவர்கள் எந்த மருந்துகளும் இல்லாமல் ஒருவரின் ஆழ்மனதில் பதிந்திருக்கும் எண்ணங்களைக் கேட்டறிய அவர்களை ஆழ்துயிலில் ஆழ்த்துவதுண்டு. அது போன்ற ஒரு நிலை தான் இதுவும்.

இது போன்ற ஒரு நிலையை தியானத்தின் மூலம் வரவழைத்துக் கொள்ளும் நிலை என்பது வேறு. துரீய நிலையை எய்தியவரின் உடலைச் சுற்றி இருக்கும் அதிர்வலைகள் என்பது மிகுந்த சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்கிறார்கள் ஞானிகள். அதாவது துரீயத்தில் இருப்பவரின் உடலை அதற்கான நுண்ணோக்கியால் நோக்கினால் அதில் உடலை சுற்றிக் காணப்படும் வண்ணங்கள் வித்தியாசமாக இருக்கும். உடல் முழுவதையும் ஒரு நீல நிறப்பிழம்பு போர்த்தியது போல் காணப்பட்டு அந்த பிழம்பின் நுனியானது தங்கநிறத்தில் தகதகப்பாக தோன்றும் என்கிறார்கள். இந்த நான்கு நிலைகளின் கலப்பான தூக்கத்திற்கு 16 வகையான நிலைகள் இருப்பதாக எழுதுகிறார் பதஞ்சலி யோகசூத்திரம் நூலை எழுதிய சுவாமி.



ஆனந்தமயன்

### விழிப்பில் விழிப்பு:

நமது மனமானது மறதி, மனக்கோளாறுகள் எதுவுமின்றி முழு நினைவுடன் இருப்பது.

### விழிப்பில் கனவு

சூழ்நிலையை மறந்து இன்பமான கற்பனை மனக்கோட்டைகளில் ஆழ்ந்திருத்தல், உருவெளித் தோற்றங்களை காணுதல்.

### விழிப்பில் தூக்கம்

தன் நினைவு சூழ்நிலைகளில், ஒன்றையோ இரண்டையோ அறியாமல் பிரமை பிடித்தது போல் இருப்பது. இந்த நிலையில் எதையும் மனது கவனிப்பதோ, புரிந்து கொள்வதோ இல்லாமல் இருத்தல். தூக்கத்தில் நடப்பது போல் தினசரி வேலைகளும் இருக்கும்.

### விழிப்பில் துரீயம்

ஆன்மிக செய்திகளில் தொடர்பு இருக்கும். கடவுள் பக்தி, ஆன்மிக நூல் படிப்பது, உபந்நியாசம் கேட்பது, திருவிழாக்களில் பங்கெடுத்துக் கொள்வது, பக்தி யாத்திரைகளை மேற்கொள்வது, யோகாசனங்களை செய்வதில் ஆர்வம் போன்றவை இருக்கும்.

### கனவில் விழிப்பு

கனவு காணும் போது, அது கனவு என்ற அறிவு ஏற்படும். விழிப்பு நிலையில் செய்ய வேண்டியவற்றின் நினைவு கனவிலும் உண்டாகும். விழிப்பில் இயங்குவது போல கனவிலும் மனது வேகமாக இயங்கும்.

### கனவில் கனவு

கனவு காண்பதில் கனவு வருதல் என்று சொல்வார்கள். அதாவது கதைக்குள் கதை வருவது போல். கனவில் தோன்றும் ஒருவர் முகம் பாதியில் வேறொருவர் முகமாகி விடும். எதைப்பற்றியோ யாரிடமாவது பேசிக் கொண்டிருப்பது போலத் தோன்றும். சில நேரங்களில் கண்ட கனவின் தொடர்ச்சி வரும். ஏற்கனவே கனவில் கண்டவர் மீண்டும் தோன்றுவார். கனவில் கண்டதையே அடிப்படையாக வைத்து ஒரு தொடர்கதை போல் இன்னொரு கனவு வரும்.

### கனவில் தூக்கம்

தெய்வக்காட்சிகள் உண்டாவது, மகான்களின் தரிசனம் கிடைப்பது, கோவில் திருவிழாக்களை பார்த்தல், தத்துவக்கருத்துக்கள் தோன்றுதல் முதலியவை. இது போன்ற கனவுகள் ஏறக்குறைய துரீய நிலையின் ஒரு பகுதி. இந்த மாதிரியான கனவுகள் ஒரு வகையான புல்லரிப்பை உண்டாக்கும்.

### தூக்கத்தில் விழிப்பு

தூங்கும் போது தூக்கத்தில் நடப்பது, சாப்பிடுவது போன்றது. கனவுகளின் போது இப்படி நடக்கும் சம்பவங்கள் உடலின் ஜீவன் கனவின் போது பருவுடலையும் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு நிகழ்வாகும். அதாவது, ஆசாபாசங்கள் தேவையின் அளவு அதிகமாவதால் மேல் மனம் உறங்கும் போது, உள்மனம் எப்போதும் விழித்துக் கொண்டே இருக்கிறது. அந்த உள் மனம் சில நேரங்களில் கனவு காணும் நிலையில் உடலையும் சில செயல்களைச் செய்ய ஏவிவிடும். ஹிஸ்டிரியா போன்ற சில நோய்கள் இந்த நிலையில் தான் உண்டாகின்றன. தூக்கத்தில் எழுந்து எல்லா வேலைகளையும் சரியாகச் செய்வர். ஆனால் விழித்து எழுந்ததும் தாம் என்ன செய்தோம் என்ற நினைவு இவர்களுக்கு இருக்காது.

சிலர் மனதில் ஆழமாக பதிந்து விட்ட எண்ணத்தால், தூக்க நிலையை மேல் மனம் அடையும் போது, தங்களை ஆவிகளாகவும், குட்டி தேவதைகளாகவும் எண்ணிக் கொண்டு அருள் சொல்வதும் ஆடி, ஓடி, ரகளை செய்வதும் உண்டு. இவர்களுக்கு அசுர சக்தி உண்டாகும். சில நேரங்களில் போதைப் பொருள்களை பயன்படுத்துபவர்களுக்கும் இப்படி ஒரு சக்தி உண்டாகும். இவர்கள் விழித்திருக்கும் நபர்களுடன் பேசுவர். ஆனால் சாதாரண நிலைக்கு வந்த பின் யாரிடம் பேசினோம், என்ன பேசினோம் என்பதை இவர்கள் உணர மாட்டார்கள்.

### தூக்கத்தில் கனவு நிலை

மேல் மனம் உறங்கும் போது உள்மனம் கனவு காண்கிறது. எப்போதும் விழித்திருக்கக் கூடிய உள்மனம் எப்போதாவது அதிசயமாக கனவில் ஆழ்ந்து விடும். அப்போது அது எதையும் நம்பிவிடும். அதற்கு கனவும் உண்மையான தோற்றமாகத் தோன்றும். ஆகவே, தான் காணும் கனவை பிறரையும் காணவைக்கிறது. உள்மனம் மிகவும் விசாலமானது. எனவே, அது உடலுக்கு வெளியிலும் இயங்குகிறது. இதனால் தான், இந்த நிலையில் உள்ளவர் பிறரையும் பாதிக்கின்றனர். இவர்கள் தம் தூக்க கனவில் காண்பதை பிறரும் காணும்படி சிலநேரம் செய்கிறார்கள். ஆவியுடலில் இருந்து பருவுடலுடன் தொடர்பு கொள்வர்.

பயங்கர கனவுகளைக் காணும்போது தங்கள் உடலில் மாறுதலை அடைவார்கள். சில நேரங்களில் தாங்கள் சண்டையிடுவது போல் கனவு காணும் போது உடலில் காயங்களை ஏற்படுத்திக் கொள்வார்கள். உள்மனது வெளியில் சஞ்சரிப்பதால் அவர்களது உடலில் இருக்கும் கட்டுப்பாட்டுக் கேந்திரம் கட்டுப்பாட்டை இழந்து விடும். அப்போது இவர்கள் நிகழ்த்தும் காரியங்கள் விழிப்பு நிலையில் இருப்பவர்களுக்கு ஆச்சரியமாகத் தோன்றும். இப்படிச் செயல்களை நிகழ்த்துபவர்களைப் பார்த்து அவர்களுக்கு பேய் பிடித்து விட்டதாக, அல்லது சாமி இறங்கிவிட்டதாகச் சொல்வதுண்டு. அதாவது, மேல் மனம் உறக்கத்தில் அழும் போது உண்டாகும் மனநிலைகள் இவ்வாறு ஒருவரை நடந்து கொள்ளத் தூண்டுகின்றன.

# ஞாபக மறதியும் நினைவாற்றலும்

இன்றைய அவசர யுகத்தில் ஞாபக மறதி என்பது பெரும் பிரச்சினையாகவே உள்ளது. சிலருக்கு ஞாபக மறதி அதிகமாக இருக்கும். இன்னும் சிலருக்கு ஓரளவு ஞாபக மறதி இருக்கும். ஞாபக மறதியை நோய் என்றும் சிலர் கூறுவர். அது போல் நினைவாற்றலை ஒரு கலை என்றும் கூறுவர். ஞாபக மறதி காரணமாக இழப்புக்களும் பின்னடைவுகளும், அசௌகரியங்களும், எதிர்மறையான விடயங்களும் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. இருந்த போதிலும் ஞாபக மறதி காரணமாகவே மனிதன் மகிழ்ச்சியாக இருக்கிறான். கவலை பின்தொடர்ந்து இம்சைப்படுத்துவதில்லை.

ஞாபக மறதி இல்லையேல் ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த பந்தங்களின் மரணம், வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகள், இழப்புகள், சோகங்கள், உளவியல் ரீதியான தாக்கங்கள் தொடர்பில் கவலையடைந்தபடியே இருப்பான். உலகமே சோகமயமாக காட்சி தரும் எனலாம். நினைவாற்றல் என்பது எல்லோருக்கும் பொதுவானதே. எல்லோருடைய மூளைக்குள்ளும் ஒரு வாசிகசாலை போன்ற நினைவு அடுக்குகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் தகவல்களை நீங்கள் சேமிக்கும் முறையை வைத்து உங்கள் நினைவாற்றல் அமைகின்றது என்று விஞ்ஞானம் கூறுகிறது.



ஷாஜஹான்

ஞாபக மறதி
இல்லையேல்
ஒவ்வொரு மனிதனும்
தனது சொந்த
பந்தங்களின் மரணம்,
வாழ்க்கையில் ஏற்பட்ட
தோல்விகள்,
இழப்புகள், சோகங்கள்,
உளவியல் ரீதியான
தாக்கங்கள் தொடர்பில்
கவலையடைந்தபடியே
இருப்பான்.

நூலகங்களில் புத்தகங்களை அகர வரிசைப்படி தொகுக்காவிட்டால் தனியொரு புத்தகத்தை தேடிக் கண்டு பிடிப்பது கடினம். அது போன்று தான் நினைவு அடுக்குகளில் நாம் படிக்கும் தகவல்களை முறைப்படி தொகுக்காவிட்டால் தேவையானபோது வெளியே எடுப்பதும் கடினம். மனிதர்களுக்கு நினைவாற்றல் குறைந்து வருவதற்கு மிக முக்கிய காரணம் கவலைகளே. இரத்த ஓட்டம் குறையும் நோயால் நேரடியாகவோ மறைமுகமாகவோ மூளைக்குச் சரியானபடி இரத்தம் கிடைக்காததும் ஏனைய முக்கிய காரணங்களாகும். மூளை சோர்ந்து விடாமல் கவனித்துக் கொண்டால் நினைவாற்றல் நன்றாக இருக்கும். எமது மனதை எந்தளவுக்கு ஒருமுகப்படுத்த முடியுமோ அந்தளவுக்கு எமது ஞாபகசக்தியையும் அதிகரிக்கமுடியும்.

### நினைவாற்றலின் வகைகள்

### 01. குறுகிய கால நினைவாற்றல்

எமது மூளையில் அத்தனை தகவல்களும் தொடர்ந்து சேமித்துவைக்கப் படுவதில்லை. அவசியமான காலத்துக்கு மட்டுமே அந்த தகவல்கள் மூளையில் சேமித்து வைக்கப்படுகின்றன. பணி முடிந்ததும் அந்த தகவல்கள் மறக்கப் பட்டுவிடுகின்றன. இது குறுகிய கால நினைவாற்றல் எனப்படும்.

### 02. நீண்ட கால நினைவாற்றல்

எம்முடைய மனதை மிகவும் கவர்ந்தவை, அல்லது பாதித்தவை, மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்தவை, நாம் செய்யும் தொழிலுக்கு தேவையானவை எமது மூளையில் நீண்ட கால நினைவுகளாக பதிந்து விடுகின்றன. எமது மூளை பல விடயங்களையும் தகவல்களையும் சேமித்து வைத்துள்ளது. அவற்றுடன் புதிய தகவல்களையும் சேர்த்து பாதுகாக்கிறது. பல ஆண்டுகளாக அந்தத் தகவல்கள் வெளிக்கொணரப்படாமல் போனால் சேமிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கிடையில் அவை புதைந்து போகின்றன.

நீண்ட கால நினைவுகளில் இருந்து தகவல்களை மீட்டெடுப்பதற்கு மூளை சிலவேளை சிரமப்படுவது அதனாலேயாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அம்மா சொல் கேள்!



செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக்கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்தான்.

புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.

வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஓர் ஆட்டுக்குட்டி, ''உனக்கு என்னவேண்டும்?'' என்று கேட்டது.

ஓநாயும் ''நண்பா, நண்பா...இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன்! இளம்புல் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை.....'' என்று வருத்தத்துடன் கூறியது.

''அப்படியா! நீ புல்லா சாப்பிடுவாய்? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.


''சேச்சே...அதெலாம் சுத்தப் பொய்!'' என்றது ஓநாய்.

''அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய், அதைச் சாப்பிட்டுவிட்டு, நண்பர்களாகச் சுற்றலாம்!'' என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து, ஓநாயின் பக்கம் போயிற்று.

''உடனே ஓநாய் அதன்மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

அந்த ஆட்டுக் குட்டிக்குத் தானாக சிந்திக்கத்தான் தெரியவில்லை. அது போகட்டும், பரவாயில்லை...அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால், மதிப்பு வாய்ந்த, தன் உயிரை இழந்திருக்காது அல்லவா?

# நிலவு



தி.ரினிதா.

இரவு வானில் தோன்றும் - நிலாவே
சிறுவர்களின் மனங்களில் நுழைந்து
அம்புலி மாமா கதையாக வந்து
முற்றத்தில் விளக்கேற்றும் நிலாவே!

தங்கத்தாலே செய்து வைத்த
உடலைக் கொண்டு
ஜரிகை நெய்ய கொஞ்சம் தங்கம் தா
பெண்களின் முகங்களை எல்லாம்
உனது வடிவில் காண்போமே!

ஔவை இருந்து கதைகள் சொல்லும்
அம்புலிமாமாவே - இரவு வானில்
நீந்தி ஓடி விளையாடி
மனதில் இன்பத்தைத் தருவாயே!

மழலையின் மனதில்
மகிழ்வை ஊட்டி
வாழ்வில் ஒளியை
அள்ளித் தருவாயே
சிந்திக்க வைக்கின்ற
எண்ணங்களை உடைய
வாழ்வில் இன்பத்தை
அள்ளித் தருவாயே!




## சீனப்பெருஞ்சுவர்

உலகப் பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாகத் திகழும் சீனப் பெருஞ்சுவரின் நீளம் குறித்து எழுந்துள்ள புதிய தகவல்களின் படி கிறிஸ்து பிறப்புக்கு 7 நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டத் தொடங்கப்பட்ட சிறப்புமிக்க சீனப்பெருஞ்சுவரின் நீளம் 8 ஆயிரத்து 851 கிலோ மீற்றர் ஆகும்.

தற்போது உள்ள அளவின் படி சீனப் பெஞ்சுவரின் நீளம் ஏற்கனவே இருந்ததை விட இரண்டரை மடங்கு அதிகமாகும். தற்போது நீளம் 21 ஆயிரத்து 196 கிலோ மீற்றர் ஆகும். இது பல்வேறு பேரரசர்களின் காலத்தில் கட்டப்பட்ட சுவர்களாகும். சீனப்பெருஞ்சுவரை முதன் முதலில் கட்டியவர் ஒயின் ஷி குவாங் என்ற வம்சத்தினர். அந்த வம்சத்தில் அவர் முதலாவது பேரரசர் என்பதும் குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

சா. ஜிந்துஜா
கோண்டாவில்.

# ஒரு கல்லின் மன வருத்தம்



ஒரு கல் இருந்தது. அது எல்லோரும் பார்க்கும் இடத்தில் இருந்தது. சிலர் அதைக் கவனிக்காமல் போனார்கள். மற்றவர்கள் தங்கள் கால் விரல்களால் இடறிக் கொண்டு போனார்கள்.

ஒருநாள் அப்பாதை வழியே போய் கொண்டிருந்த ஒருவன் அக்கல்லை எடுத்து வீட்டுக்கு கொண்டு வந்தான். அந்த கல்லைச் செதுக்கி ஓர் இளம் பெண்ணின் தலையை உருவாக்கினான். முன்பு கல்லாக இருந்த அது இப்போது அழகான பெண்ணின் முகமாக மாறியது.

ஆயினும் அந்தக் கல் மகிழ்ச்சி அடையவில்லை.

கல் தனக்குள் எண்ணிக் கொண்டது ''இப்போ மக்கள் என்மீது ஏன் இவ்வளவு அக்கறை கொள்கிறார்கள்? எல்லோரும் வந்து என்னை பார்த்து விட்டு போகிறார்கள்?

நான் எப்பொழுதும் ஒரே மாதிரிதான் இருக்கிறேன் ஒரே ஒரு வித்தியாசம். அப்போ நான் கனமாக இருந்தேன். இப்போ சற்று எடை குறைந்து விட்டது அவ்வளவுதான்'' என்று எண்ணிக் கொண்டது. ஆனால் பாவம் அந்தக் கல்லுக்குத் தெரியாது தான் ஓர் அழகான பெண்ணின் உருவமாக [illegible]

[illegible]
யாழ்/ இந்து ஆரம்ப பாடசாலை

# உலக நாடுகளும் அவற்றின் சிறப்புப் பெயர்களும்



ஆ. சிவப்பிரியன், 8 D
யாழ்/ இந்து கல்லூரி

★ உலகத்தின் கூரை - திபெத்
★ தெற்கேயுள்ள பிரித்தானியா- நியூசிலாந்து
★ நைல் நதியின் கொடை- எகிப்து
★ உலகின் சர்க்கரைக் கிண்ணம்- கியூபா
★ ஐரோப்பாவின் நோயாளி- துருக்கி
★ மரகதத்தீவு- அயர்லாந்து
★ புனித நாடு- பலஸ்தீனம்
★ இருண்ட கண்டம்- ஆபிரிக்கா
★ பற்றைவீடு- ஆஸ்திரேலியா
★ ரொட்டிநாடு- ஸ்கொட்லாந்து
★ முத்துத் தீவு- பஹ்ரைன்
★ தங்கப்போர்வை நாடு- ஆஸ்திரேலியா
★ ஐரோப்பாவின் காப்பகம்- பெல்ஜியம்
★ அதிகாலை அமைதி நாடு- கொரியா
★ ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு- பின்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டுக்குருவி



## சேதி கேளுங்கள்....

உலக சிட்டுக்குருவிகள் நாள் மார்ச் 20 அன்று சந்தடியின்றி கடந்து சென்று விட்டது. ஏன் இந்தச் சிறிய பறவைக்கு உலகம் முழுவதும் இந்த நாள் சர்வ தேச அளவில் கடைபிடிக்கப்படுகிறது? காரணம் இருக்கிறது. உலகெங்கிலும் பரவி வாழும் சிட்டுக்குருவிகள் இன்று அழிவின் விளிம்பில் உள்ளன. கடந்த 25 ஆண்டுகளில்தான் 60 சதவீத சிட்டுக்குருவிகள் இனம் அழிந்து விட்டது என அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது.

சிட்டுக்குருவிகள் நாள்தோறும் எதிர்கொள்ளும் வாழ்க்கைப் போராட்டம் மற்றும் அதன் பிரச்சினைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும், அதன் மூலம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவைகளை அழிவில் இருந்து பாதுகாக்கவும் தான் இந்த நாள் உலக சிட்டுக்குருவிகள் நாளாக 2010 ஆம் ஆண்டிலிருந்து மார்ச் 20 ஆம் திகதி நினைவுறுத்தப்படுகிறது.

மனிதன் வாழும் வாழ்விடத்தையே தன் வாழ்விடமாக மாற்றி, நம் குடும்பத்தோடு தன் குடும்பத்தையும் இணைத்து, மனிதனின் வாழ்வோடு பின்னிப்பிணைந்து, நம் வீட்டில் ஒருவராக வாழ்ந்த ஒரு பறவை இனம் என்றால் அது அடைக்கலத்தான் குருவி எனும் சிட்டுக்குருவிதான்.

உலகம் போற்றும் பறவையியலார் டாக்டர் சலீம் அலி சிறுவனாக இருந்தபோது தன் வீட்டில் சிட்டுக்குருவிக் கூட்டில் இருந்து கீழே விழுந்த சிட்டுக்குருவிக் குஞ்சுகளின் அழகில் மயங்கி, பின்னாளில் தன் வாழ்நாளையே பறவைகள் ஆராய்ச்சிக்காக அர்ப்பணித்தார். அந்தப் பறவையியல் மாமேதையை இந்தியாவுக்குத் தந்ததும், உலகுக்கு அறிமுகப்படுத்தியதும் இந்தச் சிட்டுக்குருவிகள்தான். உலகம் முழுவதும் பரவி வாழும் இந்தச் சிட்டுக்குருவிகள் மெடிட்டரேனியன் பகுதியில் தோன்றியதாக அறியப்படுகிறது.

முதன்முதலில் வட அமெரிக்காவில் இவை அறிமுகப்படுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து பிரிட்டனிலிருந்து அமெரிக்காவின் புரூக்ளின் மற்றும் நியூயார்க் நகரங்களில் 1851, 52 ஆம் ஆண்டுகளில் இவைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அதற்கு முக்கிய காரணம், அவைகள் பூச்சியினங்களைப் பிடித்துச் சாப்பிட்டு, உணவுத் தாவரங்களை பூச்சிகளிடம் இருந்து காப்பாற்றும் என்ற நம்பிக்கையில்தான். இதில் ஓரளவு உண்மை இருந்தாலும், உண்மையில் இளம் குஞ்சுகளுக்கு உணவூட்ட மட்டுமே அவைகள் பூச்சிகளைப் பிடித்து வருகின்றன.

பொதுவாக ஏனைய பறவைகளைப்போல் சிட்டுக்குருவிகளை அடர்ந்த காட்டுப் பகுதியிலோ அல்லது பாலைவனத்திலோ காண முடியாது. அவைகள் மனிதனின் வாழ்விடங்கள், குறிப்பாக வீடுகள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள வயல்வெளிகளில்தான் பொதுவாக தன் இருப்பிடத்தை அமைத்துக் கொள்ளும்.

கிராமங்களில் உள்ள ஓட்டு வீடுகளின் இடுக்குகளில், வீட்டில் உள்ள போட்டோக்களின் பின்புறம் வைக்கோல் மற்றும் காய்ந்த புற்களைக்கொண்டு ஓர் ஒழுங்கற்ற முறையில் தன் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு வாழும். ஆனால், தூக்கணாங்குருவியின் கூடு கட்டும் திறனோ, அழகோ அதன் வடிவமைப்பில் உள்ள நேர்த்தியோ இவை கட்டும் கூடுகளில் இருக்காது.

பெரும்பாலும் கூடுகட்டும் பணியை ஆண் பறவைகள்தான் மேற்கொள்கின்றன. குளிர்காலங்களில், வீதியோரம் உள்ள மின் விளக்குகளில் கூடுகட்டி இருப்பதைக் கிராமங்களில் காணலாம். ஏனெனில், கடும் குளிரிலும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தங்கள் கூடுகளை மின்விளக்குகளில் கட்டும். இந்தக்குருவிகள் 3 - 5 முட்டைகள் வரை இடும். சிட்டுக்குருவிகளின் பிரதான உணவு தானியங்களின் விதைகள் மற்றும் புற்கள் ஆகும்.

மனிதனோடு நெருங்கிப் பழகுபவை என்று அறியப்பட்ட சிட்டுக்குருவிகள், கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து புழுதியில் அரை வட்டவடிவில் பள்ளம் அமைத்து அதில் மண்குளியல் நடத்தும். மழைக்காலங்களில் வீதியில் தேங்கும் தண்ணீரில் அல்லது தண்ணீர் கிடைக்கும்போதெல்லாம் அவை கூட்டம் கூட்டமாக நீராடுவது வழக்கம். அதன் பிறகு இறகுகளைக் கோதிக் கொள்வதும், அதை உலர்த்திக் கொள்வதும் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும். இதற்கு முக்கிய காரணம், அதன் இறகுகளில் ஏதாவது ஒட்டுண்ணிகள் இருந்தால் அதை வெளியேற்றவும் தன் இறகைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும்தான் அவைகள் இவ்வாறு செய்கின்றன.

சிதறும் தானியங்கள்தான் இந்தச் சிங்கார சிட்டுக்குருவிகளின் பிரதான உணவு. இன்று நவீனமயமானதன் விளைவு, எல்லா தானியங்களும் ஆலைகளிலேயே கல், மண் நீக்கிய பிறகு உடனே சமையல் செய்யும் விதமாக பொலித்தீன் பைகளில் வந்துவிட்டன.

முன்பு உணவு சமைக்கும் முன் அரிசியை முறத்தில் வைத்து வீட்டு வாசற்படியின் முன் அமர்ந்து கல் குறுநொய் நீக்கி , புடைத்து உணவு சமைக்க உதவுவாள் அன்றைய பாட்டி. இன்றைய பாட்டி கருணை இல்லங்களில் அடைக்கலமானதால் இன்று பாட்டியும் இல்லை. முறமும் இல்லை. தானியங்களும் அதிகம் சிந்துவதில்லை. சிட்டுக்குருவிகளுக்கு உணவும் இல்லை.

இரண்டாவதாக, தானியங்கள், விதைகள்தான் இவைகளின் முக்கிய உணவாக இருந்தாலும் சிட்டுக்குருவிகளின் குஞ்சுகளுக்கு உணவுக்கு அவைகள் தோட்டத்துச் சிறு பூச்சிகள், புழுக்களையே முழுவதும் நம்பியுள்ளன.

முட்டையில் இருந்து வெளிவந்த குஞ்சுகளுக்கு முதல் உணவு இந்தத் தோட்டத்துப் புழுக்களும், பூச்சிகளும்தான். எமது கிராமத்து வீடுகளில் தாய்ப்பறவை அடிக்கடி வெளியில் பறந்துபோய் குஞ்சுகளுக்குப் பூச்சிகளைப் பிடித்து உணவாகக் கொடுத்துக் கொண்டிருக்கும். எமது வீட்டுக் கொல்லைப்புறத்தில் உள்ள செடிகளையெல்லாம் அழித்து சிமெந்துச் சுவர்களாக மாறிவிட்ட நகரச்சூழலில் எங்கே புதர்ச் செடிகளையும், உயிர் வேலிகளையும் காண முடிகிறது? அதையும் மீறி இப்போது நகரங்களில் காணப்படும் தோட்டங்களில் அழகுச்செடிகள் என்ற போர்வையில் வேற்றிடத்துத் தாவர இனங்கள் அதிகம் ஆக்கிரமித்திருக்கின்றன. இதனால், நமது நாட்டுத் தாவரங்களும், புற்களும் இல்லாததால் அந்த நம்பி வாழும் புழுக்கள், பூச்சிகள் அரிதாகிவிட்டன. (தொடரும்)



மனிதன் வாழும் வாழ்விடத்தையே தன் வாழ்விடமாக மாற்றி, நம் குடும்பத்தோடு தன் குடும்பத்தையும் இணைத்து, மனிதனின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து, நம் வீட்டில் ஒருவராக வாழ்ந்த ஒரு பறவை இனம் என்றால் சிட்டுக்குருவிதான்.

■வலையவன்

---

இயற்கையின் முரண்களும் அதனால் ஏற்படும் இன்ப, துன் களும் மனிதரைப் பெரியளவில் பாதித்ததால், மகான்கள் காட்டிய வழி விரதங்கள். விரதங்கள் என்பது இன்பங்களை ஒறுத்தால் துன் களிலிருந்து விடுபட முடியும் என்று சிந்தனையின் வெளிப்பா உதித்தாலும் விரதங்களால் பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்றன என் வாழ்வியல் அனுபவங்கள். தவிர விரதங்கள் ஆன்மிக வழிபாடு இணைந்து பல்வேறு இறையருளைத் தரும் என்பதும் புரா இதிகாசங்கள் வெளிப்படுத்தும் நம்பிக்கைகள். விரதம் என்றால் பிடிவா என்றும் பொருள் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் உணவுச் சங்கிலி என்பது கொடுமை. ஒன் யொன்று பிடித்து உண்பது பாவம். அதிலும் பசிக்காக உண்பதை மனிதன் சுவைக்கு அடிமையாகி விலங்குகளை வேட்டையாடுவ விடுத்து தாவர உண்ணியாக மாறவேண்டும் என்ற அகிம்சை நோ டன் காமத்தில் கூட விலங்குகள் கால உந்துதலால் கூடுவதும் அ மறந்து விடுவது போலல்லாது மனிதன் பெண்களைப் போதைப் பொ ளாக அடிமைப்படுத்திக் கொடுமைப்படுத்தியது மட்டுமல்லாது இச் சுகங்களிலும் அடிமைப்பட்டுக் கிடந்தான். எனவே இவற்றிலிரு உண்மையான விடுதலை துறவறமே என்ற உன்னத தத்துவத்தை உலகு உணர்த்துவன விரதங்கள். தவிர இயற்கை வளங்கள் எல்லா மனி களுக்கு சரிசமனாய் கிடைக்க வாய்ப்புக்கள் இல்லாத சந்தர்ப்பங்கள் எவ்வாறு மனிதன் இவற்றுடன் போராடி வெற்றி கொள்வது என்பத விரதங்கள் பயிற்சிகளைத் தருகின்றன.

அதாவது விரதங்கள் துன்பங்கள் ஏற்படும் போது தற்காத் கொள்ளும் பயிற்சி மட்டுமல்ல, மனோரீதியாக பற்றுப் பாசங்கள் இருந்து விடுபட உதவுகின்றன என்ற அடிப்படைச் சிந்தனைகளு மேலதிகமாக பல்வேறு பயன்களைத் தருகின்றது என்கிறது. புரா இதிகாசங்கள், உதாரணமாக விஸ்வாமித்திர முனிவர். இவர் க்ஷத்தி [அரச] குலத்தைச் சேர்ந்தவர். தானும் பிரம்ம மகரிஷிப் பட்டத்தை பெற வேண்டும் எனக் கடும் தவம் செய்தவர். இவரின் யாகத்தைக் கண் அஞ்சிய தேவர்கள், மேனகையை ஏகி அவரின் கடும் தவத்தை கலைத்தனர். ஆனாலும் இவர் பல தடைகளைத் தாண்டி பல வலிமைகளைப் பெற்றார். அத்துடன் திரிசங்குவுக்குத் தானே சுவர்க் அருள்வதற்கும் முயன்றார். தேவர்கள் அதைத் தடுக்க தானே சுவர்க்க லோகத்தைப் படைக்கப் போவதாகவும் மிரட்டினர். எவ்வா யினும் விஸ்வாமித்திரர் பிரம்ம மகரிஷிப் பட்டத்தைப் பெற்றதோ அல்லாமல் அறுபத்து நான்கு அந்தணர் கோத்திரங்களில் விஸ்வாமித் முனிவர் கோத்திரமும் இடம்பெறச் சாதனைகள் செய்தார். இவ்வா



## வாழப் நிலை ப

அண்மைக் காலமாக அந்தத் திரைப்படத்தைப் பார்க்க வேண்டுமென்று மனது அலைபாய்ந்து கொண்டிருந்தது. முன்பு அந்தத் திரைப்படத்தை பல வருடங்களுக்கு இணுவில் காலிங்கன் தியேட்டரில் பார்த்தது இப்போதும் நினைவில் உள்ளது. காட்சிகளும், பாடல்களும் இப்போதும் காதில் ஒலிக்கும் கறுப்பு வெள்ளை திரைப்படமானாலும் இப்போது பல வர்ண ஜாலங்களைச் சொல்கின்றன. இத்தனைக்கும் அந்தப் படம் பழைய மன்னனின் வாழ்க்கையினை சொல்லிக் கொள்ளும் புராண கதைதான். பல பாடங்கள், தத்துவங்கள் அதில் பொதிந்துள்ளன.

இந்தப் படத்தின் மன்னனின் கதையை ஆதாரமாக வைத்து ஒரு சிறு கதை எழுத வேண்டுமென்று ஆவல் எனக்கு இருந்தது. மன்னனின் வாழ்க்கை வரலாறு எம் மக்களோடு ஒத்துப் போனதே காரணம். இருந்தும் அந்த எண்ணம் இப்போது இந்த வடிவத்தில் வருவது, குறித்து திருப்தியடைய வேண்டியுள்ளது. பொதுவாக பழைய மன்னர்களது கதைகளைப் படிக்கும்போதும் படமாகப் பார்க்கும்போது விறுவிறுப்பாகவும், பல திருப்பங்களுடன் சாகசங்களைக் கொண்டும் நன்றாகத்தான் இருக்கும். நடிப்பு, வசனங்கள், பாடல்கள், இசை எல்லாம் இனிதாக அனுபவிக்க முடியும்.

மகாபாரதம், இராமாயணம் போன்றன தொலைக்காட்சியில் தொடராக வந்தபோது பலர் பார்த்து அனுபவித்தனர். அவை ஏதோ ஒன்றை எமக்குச் சொல்லிக் கொள்ளத் தவறுவதே இல்லை. இருந்தும் பல கதைகளை படித்து கேட்ட பிறகுதான் எமக்குள் யோசனையுடன் வினாக்கள் எழுகின்றன." அட இதென்ன நடக்கிற காரியமா? "இப்படியெல்லாம் ஒருவர் வாழ்க்கையில் நடந்து காட்டுவாரா? "நல்லாத்தான் கற்பனை பண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்களும் மகிமைகளும்

இராமஜெயபாலன்



விரதங்கள் யாகங்களினூடாக பல அசுரர்களும் தோன்றினார்கள் என்கிறது புராணங்கள்.

ஆனாலும் ஈற்றில் அசுரர்களும் உயிரிழந்து அந்தந்த சமயக் கடவுளுடன் சங்கமமாகியமையே அறுவகைச் சமயமும் கூறும் தத்துவம். இவை எல்லாவற்றையும் உள்ளடக்கியதே இந்து சமயம். மற்றும் இந்து சமய வரலாறுகள் போல் அல்லாது விட்டாலும் பிற சமயங்களும் அவைகளும் பல்வேறு உள்ளார்ந்த தத்துவத்தைச் சொன்னாலும் சில எமது இந்து மதத்துடன் ஒத்துப் போகின்றன, முக்கியமானது விரதங்கள்.

மேலே சொல்லப்பட்ட விரதங்கள் கற்பனைகளால் நிலைப்படுத்தப்பட்டிருந்தாலும் எமது அன்றாட வாழ்வில் விரதங்கள் பல்வேறு பயன்களைத் தருகின்றன. இவற்றில் விஞ்ஞானபூர்வமாக நிறுவிவிட முடியாத பயன்கள் பல இருக்கின்றபோதும் விஞ்ஞானபூர்வமான நிறுவிடக் கூடிய பயன்களும் கூட இல்லாமலில்லை. மேலும் விரதங்கள் எனப்படும்போது வெறும் உணவுகளை விடுத்தல் மட்டுமல்லாது மது, போதைப் பொருள் உட்படப் புணர்வு இன்பத்தையும் விடுத்து புலன்கள் ஐந்தையும் அடக்கி மௌனமாகக் கூட இருத்தலே விரதமாகும்.

> “
> விரதங்கள் என்பது
> இன்பங்களை
> ஒறுத்தால் துன்பங்
> களிலிருந்து
> விடுபட முடியும்
> என்று சிந்தனையின்
> வெளிப்பாட்டால்
> உதித்தாலும்
> விரதங்களால்
> பல்வேறு நன்மைகள்
> ஏற்படுகின்றன

(தொடரும்)

# மழையைப் பிடிக்குமா?

மனதுக்குள் வேர்க்கும்
ஆனாலும் உடல் நடுங்கும்
கார்த்திகை மாதத்தில் தான்
உன் இஸ்டப்படி வந்து
போகிறாய்.

எமக்கு பிடிக்கிறதோ
பிடிக்க வில்லையோ
அதையெல்லாம்
நினைக்கும்
மன நிலை
உனக்கு இருக்கப்
போவதில்லை.

அழிவுகளைத் தந்தாலும்
நீ வர வேண்டும்
என்று நாம் நினைக்கிறோம்.
அழிவுகளைக் கொடுக்கிறோம்
என்று நீ நினைப்பாயா?

எதுவித வசதியும் இன்றி
மீளக்குடியமர்ந்த மக்களின்
கூடாரத்துக்குள்ளும்
நீ ஒதுங்குகிறாய்.

நாம் வழி விடவா
அல்லது நீ எமக்கு
வழிவிடுவாயா?

இரண்டும் இல்லாத சூழலில்
செயற்பாடுகள் .
நாம் கூப்பிடுகின்ற போது
நீ வரவில்லை
நாம் கூப்பிடாத போது
நீ வருகின்றாய்.

உனக்கும் எமக்கும்
என்ன வித்தியாசம் .

கார்த்திகையில் ஒவ்வொரு நாள்
மழையில் நனையும் போதும்
எத்தனை கார்த்திகைகள்
நினைவில் வரும்
வந்து பாடாய்ப் படுத்தும்

ஒவ்வொரு மழைத் துளியும்
உடலில் விழுந்து
முள்ளாய் குத்தி இரத்தத்தை
வெளியே எடுக்கப் பார்க்கிறாய்

இரத்தத்தில் நனைந்த மண்ணில்
மழைத்துளிகள் விழுவதற்கு
தயக்கம் காட்டுகிறது.
அதனால் தான் என்னவோ
புயலாய் அடிக்கிறாய்.

வலிகளால் மேயப்பட்ட
நரம்பில்
உணர்வுகள் சாகிறது.
வரிகளால் ஆளப்பட்ட இடத்தில்
எவரும் சாகவில்லை .

- பிறைவாணன்

(வளரும்)

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

# ...ப்பிறந்ததோர்
# ...ல பாருமையா...

...எழுதுகிறார்கள் எனப் பலர் சிந்தித்தும் கொள்வார்கள். வரலாற்றை நம்புவது கஷ்டமானதாக இந்தக் காலத்தில் தெரியும். எமக்கும் பல ஐயங்கள் தோன்றாமல் இல்லை.

குசேலர் கண்ணனோடு கொண்டிருந்த நட்புக் கதை தொடங்கி, பொற்கைப்பாண்டியன், முல்லைக்குத் தேர்கொடுத்த பாரிமன்னன், அபிராமிப்பட்டர், தனது மகனை தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீதி கண்ட சோழன் வரையிலான வரலாற்றுக் கதைகள் எல்லாம் பல விடயங்களை எமக்கு சொல்லுகின்றன. ஆனால் கதையில் வரும் சம்பவங்கள் எல்லாம் எமக்குச் சந்தேகத்தை எழுப்புகின்றன. இதெல்லாம் உண்மையாக நடந்திருக்குமா? அல்லது எல்லாம் மக்களை நல்வழிப்படுத்த எழுதப்பட்ட கற்பனைக் கதைகளா?

இந்த விதமான “சந்தேகங்களுக்கு விடை தேடுவது கஸ்டமான விடயம். நான் சொல்லும் திரைப்படமும் இதைத்தான் சொல்லுகின்றது. வாழ்க்கையில் உண்மையே பேசி உண்மைக்காகவே வாழ நினைத்து இறுதி வரை பல துன்பங்களை அனுபவித்த மன்னனின் கதை இது. இப்போது நீங்களும் என்ன படம் என்று ஊகித்து இருப்பீர்கள். விடை “அரிச்சந்திரா” எமக்கு விளக்கம் தெரிந்த நாளிலிருந்தே இம் மன்னனின் வரலாற்றை தெரிந்தே வைத்திருக்கிறோம்.


உண்மைக்கு, சத்தியத்துக்கு முதலிடம் கொடுத்து, பொய்யை தன்பக்கம் நெருங்கவிடாமல் வாழ்ந்த மன்னன். இந்தக் காலத்தில் இக்கதையை கேட்டால் பலர் நகைச்சுவை கேட்டுச் சிரிப்பது போல் பலமாக சிரிப்பார்கள். என்னமாய் கதைவிடுகிறார்கள், அவர் பெரிய மன்னனாம், உண்மைதான் பேசுவாராம், பொய்யே பேச மாட்டாராம், இந்த உண்மைக்காக நாடு, பதவி, மனைவி, பிள்ளை அனைத்தையும் துறந்தாராம். என்ன செய்வது நம்புவதும், நம்ப வைப்பதும் கஸ்டமான காரியமே. பத்துத்தலை நாகம் இருப்பதையும், பிள்ளையார் சிலையிலிருந்து பால் ஒழுகுவதையும் நம்புகின்ற மக்கள் இதை நம்புவது கஸ்டமான காரியமே. அந்த மன்னனைப்போல் இறுதிவரை பொய் பேசாமல் உண்மை பேசி வாழ முடியுமா? காலையிலிருந்து மாலை வரை நாம் பேசும் பேச்சை அவதானித்துப் பார்த்தால் தெரியும் ஒரு நாளில் எவ்வளவு உண்மை, எவ்வளவு பொய் பேசி இருக்கிறோம் என்று.

வரலாற்றுக்கான காலப்பகுதி மிகத் தொலைவிலுள்ளது. பல வருடங்கள் கடந்தோடிவிட்டன. உண்மைக்காக அந்த மன்னன் இழந்த இழப்புக்களை சம்பவங்களை உடனே எம்மால் ஏற்றுக் கொள்ளாமல் யோசிக்க வைக்கின்றன?

நாட்டை, பதவியை, மனைவியை, மகனை இழந்தது, முல்லைக்கு பாரி தேர் கொடுத்தது, மகனை தேர்க்காலில் இட்டுக் கொன்றது, இவை எல்லாம் சாதாரண செயல்கள் அல்ல. இலகுவில் எல்லோராலும் இதனை செய்து விட முடியாது.

இவையெல்லாம் மனித நிலையிலிருந்து, விலகி சற்று மேலே போகும் ஞானி நிலை வேண்டும். ஊழலும் கள்ளத்தனமும், நயவஞ்சமும், படித்த ஆணவமும், பதவி ஆசையும், ஆள்மாறாட்டமும் நடக்கின்ற இந்தக் காலகட்டத்தில் “உண்மையும் விசுவாசமும் எங்கே எடுபடப்போகின்றது என்ற சந்தேகம் எழுகின்றது. தான் பெற்ற மகனை அப்போது அந்த அன்னை போருக்கு அனுப்பவில்லையா? இது எமது வரலாற்றில் நடக்கவில்லையா? எந்த காலத்திலும் போர்கள் நடந்து, கொண்டு தானே இருந்திருக்கின்றன. நீங்கள் அரிசந்திர மன்னனைக் காணாமல் இருந்திருக்கலாம். வடகிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் கந்தசாமி, என்ற மனிதனின் பெயரை, அரிச்சந்திர மன்னனின் பெயரை நீக்கி விட்டு பொருத்தி பாருங்கள். சந்திரமதிக்கு பதிலாக புனிதாவையோ, சரோஜாவையோ போட்டு பாருங்கள். வீடிழந்து, நாடிழந்து, மனைவியை இழந்து, மகனை இழந்து, இப்போதும் அலைந்து கொண்டிருக்கும் வரலாற்று நாயகர்கள், நாயகிகள் தெரிவார்கள். வறுமைக்காக மகனை விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். போராளியாக இருந்த பெண் இப்போது என்ன தொழில் செய்து கொண்டு இருக்கிறாள். இவையெல்லாம் இன்னும் பல வருடங்கள் போனால், அடுத்த வருபவர்கள் இதனை நம்புவார்களா? முள்ளிவாய்க்காலே வெறும் கற்பனையா? உலகம் அறியாத புதுமை... பாடல்தான் மீண்டும் காதில் ஒலிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடுவு நிலைமை

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**பொ**ருள் பொன்னா, இரும்பா அதைப் பற்றிக் கவலை இல்லை,அதன் எடைதான் முக்கியம். நபர் முக்கியம் அல்ல, அவரது செயல் அல்லது பண்புதான் முக்கியம். அதன் அடிப்படையில்தான் நீதி வழங்கப் படும். இல்வாழ்க்கையிலும் இத்தகைய நடுவுநிலைமை என்ற கொள்கை பின்பற்றப் படுமானால், குடும்பமும், குடும்பத்தோடு தொடர்பு உடைய பிறரும் நன்மை பெறுவர் என்கிறார் வள்ளுவர்.

நடுவு நிலைமையும் வழித்தோன்றலும் மேலும், நடுவு நிலைமை பிறழ்ந்து நடப் பவர்களுக்கு வள்ளுவர் ஓர் எச்சரிக்கையும் செய்கிறார். ''முன்னோர் செய்த புண்ணி யம் சிலரைப் பார்த்து ''உன் தாத்தா செய்த புண்ணியம், இன்றைக்கு நீ நன்றாக இருக் கிறாய்'' என்று சொல்கிறார்கள், சிலரைப் பார்த்து, ''இவன் தந்தை செய்த பாவம் சும்மா விடுமா? ஊரை அல்லவா கொள்ளை அடித்தான்? மக்கள் வயிற்று எரிச்சல் சும்மா விடாது. அதனால்தான் அவன் பிள்ளைகள் இப்படி நடுத்தெருவில் நிற் கிறார்கள்'' என்று சொல்கிறார்கள். கிறிஸ்தவர்களின் விவிலியத்திலும் ''ஒருவன் செய்யும் பாவத்தை மூன்றாம் நான்காம் தலைமுறை வரையிலும் விசாரிக்கிற வனாக இருக்கிறேன்'' என்று இயேசு கூறுகிறார். வள்ளுவரும் நீங்கள் செய்யும் பாவம் உங்களோடு முடிந்து விடாது, உங்கள் மக்களையும் அதாவது வழித்தோன் றல்களையும் பாதிக்கும் என்று எச்சரிக்கை செய்கிறார்.

நீங்கள் செய்யும் பாவத்துக்கு அவர்கள் தண்டனை அனுபவிக்காமல் இருக்க வேண்டுமானால், உங்கள் வழித்தோன்றல் களிடம் உங்களுக்கு அன்பு இருக்குமா னால், நீங்கள் எந்தப் பாவத்தையும் செய்யாதீர்கள்; நடுவுநிலைமை பிறழ்ந்த எந்தச் செயலையும் செய்யாதீர்கள் என்று வேண்டுகிறார் : எனவே, ஒருவன் செய்யும் தீமைகள்,அவன் வாழ்வோடு , அவன் காலத்தோடு முடிந்து விடாது. அவன் வழித்தோன்றுகின்றவர்களையும் அது பாதிக்கும் என்கிறார் வள்ளுவர்.

இதனைத் தக்கார் தகவு இலர் என்பது அவர் அவர் எச்சத்தால் காணப்படும்.

(குறள்: 114)

(தக்கார் = நடுவுநிலைமை உடையவர், (நேர்மையானவர்

தகவுஇலர் = நடுவு நிலைமை இல் லாதவர், எச்சம் = பிள்ளைகள், எஞ்சி நிற்பது) என்று குறளில் குறிப்பிடுகிறார் வள்ளுவர்.

ஒருவர் நேர்மை (நடுவுநிலைமை) உடையவர், நேர்மை இல்லாதவர் என்னும் உண்மை, ஒருவரது வழித்தோன்றல்களால் அதாவது மக்களால் அறியப்படும். இது பெரும்பான்மையான உரையாசிரியர்களின் கருத்து. வழித்தோன்றல்களைப் பார்த் தாலே தெரியும்; ஒருவரது நேர்மைக்கு வேறு சான்று தேவையில்லை என்று கூறுகின்றனர். ஆனால், பேராசிரியர். மு.வரதராசனார் போன்றோர், ''ஒருவர்க் குப்பின் எஞ்சிநிற்கும் புகழாலும் பழி யாலும் காணப்படும்'' என்கின்றனர். வள் ளுவர் எந்த ஒரு கருத்தைச் சொன்னாலும், அதை ஒரு குறுகிய கண்ணோட்டத்தோடோ, குறுகிய எல்லைக்குள் அடக்கியோ கூறுவதில்லை. பொதுவாகவே கூறுவார். அது அவரது தனிச்சிறப்பு.

எனவே, இங்கு, ''எச்சம்'' என்பது தன்பின் எஞ்சி வாழும் வழித்தோன்றல்களுக்கும் பொருந்தும்; எஞ்சி நிற்கும் புகழுக்கும் பழிக்கும் பொருந்தும், மேலும் விளக்கம் தேடினால் இன்னும் பல கருத்துகளுக்கும் பொருந்தும். இல்வாழ்வான் நேர்மையாகச் செயல்பட வேண்டும், அதனால் அவன் குடும் பம் மட்டுமல்ல, அவன் சார்ந்த சமுதாய மும் பயன்பெறும் என்பது வள்ளுவர் எண்ணம்.

### பயில்முறைப் பயிற்சி

''எச்சம்'என்ற சொல்லை இருவகை யில் பொருள் கொண்டு ''தக்கார்' என்ற சொற்களுக்கு விளக்கம் தருவதைப் படித் தீர்கள். ''நடுவுநிலைமை'' என்ற அதிகாரத் தின் கீழ் வருவதால் ''தக்கார்'' ''தகவிலர்'' என்ற சொற்களை நடுவு நிலை பேணுபவர், நடுவு நிலை தவறியவர் என்று பொருள் கொள்ள வேண்டும். நடுவு நிலை பேணுவ தும் தவறுவதும் எப்போது தெரியவரும்.

குறிப்பிட்ட சூழலின் எல்லாத் தகவல் களையும் ஒருவர் உள்வாங்கி, அவற்றின் தன்மைகளை ஆய்ந்து, அதன் முடிவாக உண்மை நிலை அறிந்து, அறிந்த முடி வைப் பிறழாது வெளிப்படுத்தும் நிலை யில் தான் ஒருவர் நடுவு நிலையாளர் ஆகிறார். உள்வாங்குதல், ஆய்தல் போன்ற மனத்தளவு நிகழ்வுகளின் ''எச்சமாக'' வெளிவரும் தீர்ப்பு தான் ஒருவர் நடுவு நிலையாளர் அல்லது நடுவு நிலையற்றவர் என்ற முடிவுக்கு அடிகோலுகிறது என்றும் பொருள் கொள்ளலாமா? சிந்தியுங்கள். அல்லது ''எச்சம்'' என்ற சொல்லுக்கு வேறு வகையிலும் பொருள் கொள்ள முடியுமா?

மேற்சொன்ன மூவகைப் பொருள் களில் எது மிகவும் ஏற்ற பொருள் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? ★

# மிருதங்கக் கலையில் முத்திரை பதித்த கணக்கியல் வல்லுநர் கணேசசர்மா



பிரம்மஸ்ரீ அ. கணேசசர்மா வட்டுக் கோட்டையில் புகழ் பெற்ற அந்தணர் மரபிலே நாவன்னா ஐயா குடும்பத்தில் தோன்றியவர். 12.11.1932ல் பிறந்த இவர் தனது ஒன்பதாவது வயது முதல் கலைத் துறையில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தார். நல்லை ஆதீன சுவாமிநாத பரமாச்சாரியாரை குருவாகக் கொண்டு மிருதங்கம்,இ கஞ்சிரா மற்றும் பரதநாட்டியத்தையும் கற்றுக்கொண்டார். மேற்படிப்புக்காக இந்தியா சென்று விஞ்ஞானமாணிப்பட்டம் பெற்றுக்கொண்டார்.

அங்கிருக்கும் காலத்தில் திருச்சியில் மிருதங்க வித்துவான் பழனி சுப்பிரமணியபிள்ளையிடம் குருகுலமாக மிருதங்கக் கலையினை நன்கு வளர்த்துக் கொண்டார். 1948ம் ஆண்டு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற சுதந்திர தின விழாவில் தனது சகோதரியுடன் சேர்ந்து நாட்டிய நாடகத்தில் நடித்து பாராட்டைப் பெற்றவர்.

புகழ் பெற்ற இந்தியக் கலைஞர்களான திருப்பாம்புரம் சுவாமிநாதபிள்ளை, வீணை பாலச்சந்திரன், பாலமுரளி கிருஷ்ணா, மணிக்கிருஷ்ணசுவாமி, எம்.எஸ் வசந்தகுமாரி, கே.பி சுந்தராம்பாள், மகாராஜபுரம் சந்தானம், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை மற்றும் பல புகழ் பெற்ற இந்தியக் கலைஞர்களுக்கு மிருதங்க பக்கவாத்திய கலைஞராக இருந்து புகழ் பெற்றவர். இலங்கையில் தேசிய வானொலி மற்றும் ரூபவாஹினி ஆகியவற்றில் ஈழத்து கலைஞர்களாகிய எஸ்.சண்முகரட்ணம், ஏ.கே.கருணாகரன், எஸ்.சண்முகராகவன், மூளாய் கணபதிப்பிள்ளை, ஸ்ரீமதி சத்தியபாமா ராஜலிங்கம், ஸ்ரீமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் மற்றும் பல கலைஞர்களுக்கும் மிருதங்கப் பக்கவாத்தியக் கலைஞராக இருந்து புகழ் பெற்றவர். 1995 ம் ஆண்டு கலைத் துறையில் 50 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்.

மதுரை ஆதீனத்தால் மிருதங்க பூபதி, இலங்கை அரசாங்கத்தினால் லயஞானமணி, கலாபூஷணம், என்னும் பட்டங்கள் வழங்கப்பட்டன. தனது 50 வது பொன் விழாவை 1995 ம் ஆண்டு கொழும்பு வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடினார். இந்நிகழ்ச்சிக்கு இந்தியாவில் இருந்து புகழ் பெற்ற மிருதங்க சக்கரவர்த்தி கலைமாமணி உமையாள்புரம் சிவராமன், வயலின் மேதை சந்திரசேகர் ஆகியோர் வந்து கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இந்தியக் கலைஞர்களான சந்தானகோபாலன், புல்லாங்குழல் மேதை ஷேஷான், வயலின் மேதை ரி.என்.கிருஷ்னன் போன்ற பலரை இலங்கைக்கு அழைத்து வந்து இங்கும் அவர்களின் கலையை ஊக்குவித்தார். இவர் பல மாணவர்களுக்கு குருவாக இருந்து மிருதங்கக் கலையை கற்றுக்கொடுத்து அவர்களை ஊக்குவித்தார்.

இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, கனடா ஆகிய நாடுகளில் பல கச்சேரிகளில் மிருதங்கக் கலைஞராக பங்கு பற்றி பலரது பாராட்டையும் பெற்றவர் அமரர் கணேசசர்மா.

இப்போது இவரின் பிள்ளைகள் உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் மிருதங்கம் வாசிப்பதில் ஈடுபட்டுள்ளனர். பேரப்பிள்ளை களும் கூட மிருதங்க கலையில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இலங்கையில் கணக்கியல் துறையில் பயிற்சி பெற்று A.G.SARMA & CO, Chartered Accountants என்னும் பெயரில் ஒரு பட்டயக்கணக்காளர் ஸ்தாபனத்தை ஆரம்பித்து கணக்காய்வாளராக இருந்து வந்தார்.

தனது ஊரான வட்டுக்கோட்டையில் உள்ள மங்களாம்பிகா சமேத மகாலிங்க சுவாமி ஆலயத்தை (பரம்பரை ஆலயம்) குலதெய்வமாக வழிபட்டு வந்தார். அந்த ஆலயத்தை குடும்பத்தவர் தற்போது சிறப்பாக பராமரித்து வருகின்றனர். இது தவிர ஊரிலுள்ள பல ஆலயங்கள் சிறப்புப் பெற பல உதவிகளை செய்து வந்துள்ளார்.

இவரது மூத்த ஆண் சகோதரர் அ. நாகராஜா சர்மா வட்டுக்கோட்டையில் ஆயுள் வேத வைத்தியராகவும், சைவ ஆகமசிவாச்சாரியராகவும் புகழ் பெற்று விளங்கியவர். மற்றொரு சகோதரர் எ.கே.சர்மா கொழும்பு றோயல் கல்லூரியில் இரசாயனவியல் தமிழ் பிரிவு அதிபராகக் கடமையாற்றியவர். மற்றைய சகோதரர் ஆர்.எ.சர்மா அவர்களும் றோயல் கல்லூரியில் கடமை புரிந்தவர்.

அவருடைய மகன்களில் ஒருவரான க.சுவாமிநாதன் சர்மா அவரின் பட்டயக்கணக்காளர் ஸ்தாபனத்தை கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தற்போது திறம்பட நடத்தி வருகிறார்.

**போ. ரமேஸ்வரன்**





பிரிந்து செல்ல முடியா
வகுப்பறையாக
தனிப்பட்ட இருப்பிடமில்லா
அமர்வுகளாக
காதல் கதை பேசி
என்னை நீயும்
உன்னை நானும்
ஏமாற்றிச் செல்கிறோம்.

பருவத்தின் காலம் இது
பரிணாமம்
வெவ்வேறுபட்ட அனுபவம்
இன்பத்தின் வேராக பரவி
கிளைகளில்
வெளிப்படும் பூ போல
உறவாகிறோம்.

தனிமைப்பட்டு
எவரையும் அறிமுகப்படுத்தாமல்
ஒருமித்து
எல்லோரையும் தெரியப்படுத்தியும்
நீயும் நானும்
விலகிச் செல்கிறோம்.

வகுப்பறையில்
கோடு போட முடிந்த
கரும்பலகையில்
அழிக்க முடியாத சொற்கள்
நிறைய இருக்கின்றன.
இதற்குள்
உனதும், எனதும்
பெயர்கள்
எத்தனையாம் இடத்தில்...

என்னை
உனக்குப் பிடிக்கும் என்று
எனக்குள்ளே
நினைத்துக் கொள்கிறேன்.
உன்னை
எனக்குப் பிடிக்கும் என்று
உனக்குள்ளே
நினைத்துக் கொள்வாயா

காதலில்
வேண்டப்படாதவன் போலவும்
பழகும் நட்பில்
வேண்டப்படுபவன் போலவும்

வெளிப்படையாக
இருக்கிற போதும்
உள்ளளவில்
யாரும் வந்து போகலாம்.

தூரம் இருந்தாலும்
என்னருகில்
அவள் இருப்பதாக
நினைத்துக் கொண்டு
எங்கும் பயணிக்கிறேன்.
பக்கத்தில் இருந்தால்
எங்கும் பயணிக்க
முடியாமல் இருக்கிறது.

நண்பர்கள்
சண்டை பிடித்தால்
மறுகணமே
சேர்ந்து விடுவார்கள்.
காதலர்கள்
சண்டை பிடித்தால்
மறு ஜென்மமும்
சேர முடியாது



# ஊசல்

செல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைக்கோர் அளவில்லை

ஓர் ஊரிலே ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள் கோயிலுக்குப் போனான். கடவுளிடம் அவன் "எனக்கு ஒரு இலட்சம் ரூபாய் நீ கொடுத்தால் உன் சந்நிதியிலே ஒரு தேங்காய் உடைக்கிறேன்" என்று வேண்டினான். கடவுள் பார்த்தார். உடனே அவன் கண் முன்னே தோன்றினார்.

"இந்தா நீ கேட்ட ஒரு இலட்சம் ரூபாய்!" என்று சொல்லி அவன் கையிலே பணத்தைக் கொடுத்துவிட்டு போய்விட்டார்.

இவனாலே நம்ப முடியவில்லை. இவ்வளவு சுலபமாகக் கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் அநாவசியமாக ஒரு தேங்காய் உடைக்கின்றேன் என்று வேண்டியிருக்க வேண்டியதில்லை என்று நினைத்தான். இருந்தாலும் வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியது கடமை. அதற்காக என்ன செய்தான் என்றால், அருகில் உள்ள ஒரு கடைக்குப் போனான். ஒரு தேங்காயை கையிலே எடுத்தான். "இது என்ன விலை என்று கேட்டான்.

"ஐந்து ரூபாய்" என்றார் கடையிலே இருந்தவர்.

"அதிகமான விலை? என்றான்.

"அப்படி என்றால் ஒன்று செய்யுங்கள். அடுத்த ஊருக்குப் போங்கள்.. அங்கே தென்னந்தோப்பு அதிகம் இருக்கிறது. அதனால் அங்கே இதைவிட குறைந்த விலைக்கு தேங்காய் கிடைக்கும் என்றார்.

"சரி என்று அடுத்த ஊருக்குப் போனான்.

அங்கே போய் விசாரித்தான்.

'ஒரு தேங்காய் மூன்று ரூபாய் ' என்றார்கள்.

"இதுவும் அதிகமாகத் தெரியுதே! என்றான்.

"அப்படி என்றால் ஒன்று செய்... அதோ அந்த ஆற்று ஓரமாக ஒரு தென்னை மரம் இருக்கிறது பார்... அதில் நீயே ஏறி பறித்துக்கொள்... ஒரு தேங்காய்க்கு ஒரு ரூபாய் கொடுத்தால் போதும்! என்றார் அந்த தோப்புக்குச் சொந்தக்காரர்.

அவனுக்கு மரம் ஏறத் தெரியாது. இருந்தாலும் ஆசை யாரை விட்டது? விலை குறைவாக இருக்கின்றதே! என்று ஆற்று ஓரம் போனான். அந்த மரத்திலே ஏறினான். அந்தத் தென்னை மரம் வளைந்து ஆற்றுப் பக்கம் போய் பின்பு நிமிர்ந்திருக்கிறது. அதாவது மரத்தின் உச்சி சரியாக ஆற்றுக்கு மத்தியிலே இருந்தது. ஆற்றிலே வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டு இருக்கின்றது!

அவன், கடவுள் கொடுத்த ஒரு இலட்சம் ரூபாயை மடியிலே வைத்து இறுக்கிக் கட்டினான். உச்சிக்குப் போய் காய் பறிக்கிற சமயத்திலே காற்றும், மழையும் பலமாக அடிக்க ஆரம்பித்து விட்டது. கால் வழுக்கிவிட்டது. இவன் திடீரென்று ஒரு தென்னை மட்டையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான்.

கீழே பயங்கர வெள்ளம். மடியிலே பணம், என்ன செய்வது என்று தவிக்கிறான்.

இந்த சமயம் கரையிலே ஒரு யானைப் பாகன் யானையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது, அவன் கண்ணிலே தென்பட்டது.

"ஐயா.. ஓர் உதவி! என்று கத்தினான்.

என்ன செய்ய வேண்டும் என்று அவன் கேட்டான்.

"உன் யானையை மெதுவாக அழைத்துக் கொண்டு இங்கே வா எனக்கு நேரா கீழே நிறுத்து... என் காலைப் பிடித்து கீழே இறக்கி விடு.. என் மடியிலே இருக்கிற பணத்திலே உனக்கு 10 ஆயிரம் ரூபாய் தருகின்றேன்! என்றான்.

அவன் பார்த்தான். கால், கையைப் பிடித்து கேட்டால் கூட இந்தக் காலத்தில் பத்து ரூபாய்க்கு மேலே தரமாட்டார்கள். இவன் காலைப் பிடித்தால், பத்தாயிரம் தருகிறேன் என்று சொல்கிறானே என்று யோசித்தான்.உடனே யானையைக் கொண்டு போனான். அவனுக்கு கீழே நிறுத்தினான். அவன் காலைப் பிடித்தான். அவ்வளவுதான். அந்த நேரம் பார்த்து யானை மெதுவாக நடந்து அப்பாலே போய்விட்டது. இப்போது யானைப்பாகன் அவன் காலை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு தொங்குகிறான். பரிதாபமாக மேலே பார்த்தான். அவன் மட்டையைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறான்.

இப்போது யானைப் பாகன் சொல்லுகிறான், "தம்பி....! மட்டையை விட்டு விடாதே! இறுக்கமாகப் பிடித்துக் கொள். நான் உனக்கு பத்தாயிரம் தருகிறேன்... இதோ மடியிலே வைத்திருக்கிறேன்" என்றான்.

மேலே தொங்கிறவனுக்கு இந்த நிலைமையிலும் ஒரு சந்தோஷம்... மேற்கொண்டு ஒரு பத்தாயிரம் எனக்குக் கிடைக்கும் போல இருக்கிறதே.. என்று நினைத்தான். இந்த சமயத்தில் ஒருவன் ஒட்டகத்தைச் செலுத்திக் கொண்டு வந்தான் குளிப்பாட்டுவதற்கு! இதை யானைப் பாகன் பார்த்து விட்டான்.

"ஐயா! ஒட்டகக்காரரே... அதை இங்கே கொண்டு வா! எங்கள் காலைப் பிடித்து பத்திரமாக இறக்கி விடு.. நாங்கள் பணம் கொடுக்கிறோம்! என்றான்.

அவனும் பணத்துக்கு ஆசைப்பட்டு வந்தான். அவன் காலைப் பிடிக்கிற நேரம்... ஒட்டகமும் நழுவிப் போய்விட்டது.

இப்போது மூன்று பேரும் வரிசையாகத் தொங்குகிறார்கள். ஒட்டகக்காரன் கத்தினான்.. "தம்பி... மட்டையை விட்டுவிடாதே...! நான் என் மடியிலே இருக்கிற 5 ஆயிரம் ரூபா பணத்தை உனக்குத் தருகிறேன்! என்றான்.

மேலே தொங்குகிறவனுக்கு இன்னமும் சந்தோஷம்.

இவனும் பணம் தருகிறேன் என்கிறான். அப்படி என்றால் இன்றைக்கு எனக்கு மொத்த பணவரவு எவ்வளவு.... என்று ஒவ்வொன்றாக கூட்டிப் பார்த்தான். மனக்கணக்கு சரியாக வரவில்லை... அதனால் விரலால் எண்ண ஆரம்பித்தான். அவ்வளவுதான். மட்டையை விட்டு கை நழுவி விட்டது.



மூன்றுபேரும் பொத்தென்று ஆற்றிலே விழுந்து விட்டார்கள். படாத பாடு பட்டு.. தட்டுத் தடுமாறி கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

மூன்று பேர் மடியில் இருந்த பணமும் ஆற்றோடு போய்விட்டது!

"பேராசை பெரும் நஷ்டம்! அப்படி என்று ஒரு பழமொழி இருக்குது.

அதை விளக்குவதற்காக சொல்லப்பட்ட கதை தான் இது!

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## வீதி அதிகார சபை கவனத்தில் எடுக்கவும்

பருத்தித்துறை வீதிப் புனரமைப்பு நடவடிக்கையில் ஈடுபடும் நிறுவனத்தினர் வல்லை ஆற்றின் உவர் நீரைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இந்த வீதியூடாக செல்லும் வாகனங்களில் உவர் நீர்பட்டு பழுதடைய வாய்ப்புள்ளது.

மழை காலமாகையால் வீதி புனரமைப்புக்கு தேவையான நீரைப் பெற முடியும். அதாவது குளங்கள் நிரம்பியுள்ளதால் குளத்தில் இருந்து நீரைப் பெற்று வீதி புனரமைப்பு வேலைகளுக்கு பயன்படுத்த முடியும்.

வீதி புனரமைப்பில் ஈடுபடுபவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு செயற்பட்டால் அந்த வீதியில் போக்குவரத்தை மேற்கொள்ளும் வாகனங்கள் பழுதடையாமல் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

இல்லாது போயின் உவர் நீரில் கழுவப்படும் வாகனங்கள் விரைவில் பழுதடையும் நிலைக்குச் சென்று விடும்.

இதனைக் கருத்தில் கொண்டு வீதிப் புனரமைப்பில் ஈடுபடும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதி புனரமைப்பை மேற்கொள்ளுமா?

**க.தனிநாயகம், கரவெட்டி.**

## ஆளுநர் மாநாடு தேவை தானா?

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக ஆளுநர் மாநாடு இடம்பெற்றுள்ளது. இந்த மாநாடு தமிழ் மக்களுக்கு எந்த வகையில் நன்மையளிக்கப் போகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஊடகங்களில் ஆளுநர் மாநாடு நிகழ்வு சம்பந்தமாக வெளிவரும் செய்திகளை பார்க்கின்ற போது, தமிழ் மக்களுக்கு இந்த மாநாடு ஒரு விமோசனத்தையும் ஏற்படுத்தித் தராது என்பது உண்மை.

மூன்று தசாப்தப் போரில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தில் முன்னேற்றத்தைக் காண முடியாதுள்ளனர். அந்த மக்களின் வாழ்வாதாரத்தில் சிறு துளியளவு கூட சிந்திக்காமல் அரசு இருக்கிறது. இந்த வேளையில் யாழ். மண்ணில் இந்த மாநாடு அவசியமான ஒன்றா?

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பிவிட்டு பின்னர் இப்படிப்பட்ட நிகழ்வுகளை நடத்தலாம். அதைவிட்டு விட்டு தமிழ் மக்கள் கஷ்டப்படும் வேளையில் மில்லியன் கணக்கில் இந்த நிகழ்வுகளுக்கு பணத்தைக் கொட்டிச் செலவிடுவது முறையா?

**இளையதம்பி, கரவெட்டி**

## சேறும் சகதியுமாகவுள்ள வீதியை புனரமைப்பார்களா?

யாழ்.வரணி குடமியன் அ.த.க. பாடசாலையின் முன்னால் உள்ள வீதி சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் அந்த வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மழை காலங்களில் இந்த வீதியில் வெள்ளம் தேங்குவது வழமை. இதனால் இந்த வீதியில் மழை வெள்ளம் தேங்காமல் செய்வதற்காக ஊரி மண் போட்டு திருத்தம் செய்தனர். ஆனாலும் இந்த வீதியால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத அளவுக்கு சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது.

இந்த வீதியில் வெள்ளம் நிற்காமல் செய்வதற்கு இரு புறமும் வாய்க்கால் வெட்டி வெள்ளத்தை வெளியேற்றி இருக்கலாம். அதை விட்டு விட்டு ஊரி மண்ணைக் கொண்டு வீதியைப் புனரமைப்புச் செய்ததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் உள்ள குடமியன் அ.த.க. பாடசாலைக்கு வரும் மாணவர்கள் அழுக்குடன் வந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அதாவது இந்த வீதியில் செல்லும் வாகனங்களால் பறக்கும் ஊரி மண், சேறு மாணவர்களை நனைப்பதால், வெள்ளை சட்டையில் அழுக்குப் பட்டு அழுக்குடனே மாணவர்கள் பாடசாலை வந்து செல்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து செயற்படுவார்கள் ஆயின் உரிய முறையில் இந்த வீதியை புனரமைப்புச் செய்து இலகுவான போக்குவரத்துக்கு ஆவன செய்ய முடியும்.

**வரணி குடமியன் மக்கள்.**

## சில்லறைக்காசு தட்டுப்பாடு தீருமா?

யாழ்ப்பாணத்தில் சில்லறைக்காசுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறதா அல்லது ஏற்படுத்துகிறார்களா என்பது தான் புரியாத புதிராக உள்ளது.

அதாவது கடைகளில் ஏதாவது ஒரு பொருள் வாங்கச் சென்றால் சில்லறைக் காசு இல்லை என்று 'ரொபி'யைக் கொடுத்து விடுகிறார்கள். பஸ்களில் பயணம் செய்யும் போதும் மீதிச் சில்லறை இல்லை என்று நடத்துநர்கள் கை விரிக்கிறார்கள்.

இதனால் பாதிக்கப்படுவது பொது மக்களே. சில்லறைக்காசு எங்கு சென்று முடங்கியதோ தெரியவில்லை. ஆலய உண்டியல்கள், வீட்டு உண்டியல்களில் நிரம்பிக் கிடக்கும் சில்லறைக் காசுகளை புழக்கத்துக்கு கொண்டு வருவார்கள் ஆயின் ஓரளவு சில்லறைக் காசு தட்டுப்பாட்டுப் பிரச்சினை தீரும்.

கடந்தவாரம் தனியார் பஸ்லில் பிரயாணம் செய்த வேளை சில்லறைக் காசு தட்டுப்பாட்டால் பயணி ஒருவர் சிரமங்களை எதிர்கொண்டார்.

மீதிச் சில்லறைக் காசினை வாங்க முடியாது அவதிப்பட்டார். இந்த அவல நிலையைப் பார்த்து மிகவும் வேதனையும் கவலையும் அடைந்தேன்.

சிறு தொகை காசென்றாலும் மீதிப் பணம் இல்லை என்று சொல்லாமல் வழங்குவார்களா?

உரியவர்கள் கவனம் எடுத்து சில்லறைத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய வேண்டும். சமூக அக்கறை கொண்டவர்கள் மீதிச் சில்லறை இல்லை என்று 'ரொபி'யினை வியாபாரம் செய்யாதீர்கள்.

நாளடைவில் சில்லறைக்காசு தொடர்பில் எவருக்கும் அக்கறை இல்லாமல் போய்விடும். இதனால் சில்லறைக்காசு இல்லாமல் போனாலும் போய்விடும்.

**சந்திரன், வரணி, வடக்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான உடல் அழகான முகம்



அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற பழமொழிக்கேற்ப, ஒருவரின் உடல் நிலையின் தன்மையும், மன நிலையின் தன்மையும் முகத்தில் தான் தெரியவரும். சில அழகு சாதனப் பொருள்கள் உடல் ஒவ்வாமை அதாவது அலர்ஜியை உண்டாக்கி தோலில் மாறுதல் ஏற்படச் செய்கின்றன. எனவே இயற்கை மூலிகைகளைக் கொண்டு எளிய முறையில் முகத்தின் அழகை மெருகூட்டச் செய்யலாம்.

நெல்லி வற்றலை இரவு முழுவதும் தண்ணீரில் ஊறவைத்து காலை எழுந்தவுடன் அந்த நீரில் முகம் கழுவி வரவேண்டும். அப்போது முகத்தில் உள்ள வெப்பக் கட்டிகள், பருக்கள், தழும்புகள் வடுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பிக்கும். நாளடைவில் உங்கள் முகம் அழகான தோற்றத்தைப் பெறும்.

உடலும் முகமும் வசீகரம் அடைய சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

மலச்சிக்கல் இருந்தால் முகத்தின் பொலிவு கெட்டுவிடும். எனவே மலச்சிக்கல் இருப்பவர்கள் தினமும் கீரையை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். எளிதில் ஜீரணம் ஆகக்கூடிய உணவுகள் நல்லது.

நீர் அருந்த வேண்டும். சீரகம் கலந்து நன்கு காய்ச்சிய கொதிநீரை ஆறவைத்து குடிக்க வேண்டும்.

இரவு உணவுக்குப்பின் வாழைப்பழம், பழுத்த கொய்யா மற்றும் அந்த அந்த சீசனில் அதிகளவு விளையும் பழங்களைச் சாப்பிடுவது நல்லது. பழங்களில்தான் நார்ச்சத்து மிகுந்துள்ளது. கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளை தவிர்க்க வேண்டும்.

எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. அதிகம் குளிர்ந்த நீரிலோ அல்லது அதிக சூடான நீரிலோ முகத்தைக் கழுவக் கூடாது.

முகத்தைத் துடைக்க மென்மையான பருத்தித் துணியை உபயோகப்படுத்த வேண்டும்.

வெள்ளரிப் பிஞ்சை வாங்கி தோல் சீவி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி காய்ச்சாத பசும்பாலில் ஊறவைக்க வேண்டும். அரைமணி நேரம் கழித்து அதை எடுத்து முகத்தின் மீது தடவினால் முகம் பொலிவுறும். முகத்தில் பருக்கள் தோன்றினால் அதைக் கிள்ளக் கூடாது.

இரவு படுக்கைக்கு முன் முகத்தைக் கழுவி துடைக்க வேண்டும். பின் சுத்தமான சந்தனத்தோடு எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகத்தில் தடவி வந்தால் முகம் பளபளக்கும்.

# அழகூட்டும் பொன்னாங்கண்ணி





தினமும் உணவில் கீரையை சேர்த்து வந்தால் நோயில்லா பெரு வாழ்வு வாழலாம் என்று ஆன்றோர்களும் சான்றோர்களும் கூறியுள்ளனர்.

எளிய விலையில் கிடைத்த கீரைகளை கௌரவம் பார்த்து வாங்கிச் சாப்பிடாமல் விட்டவர்கள் இன்று கீரைகளைத் தேடி கடைகளில் அலைகின்றனர்.

கீரைகளைத் தவிர்த்து மேற்கத்திய உணவுகளை நாடுபவர்களின் இன்றைய நிலை, ஒருபுறம் நீரிழிவு, மறுபுறம் இரத்த அழுத்தம் என பலவாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலை ஏற்படக் காரணம் அவர்களின் அறியாமையே.

பொன்னாங்கண்ணி கீரையை பொன்+ஆம்+ காண்+நீ என சித்தர்கள் கூறியுள்ளனர். உடலை தங்கம் போல் பொலிவாக்க இதுவே சிறந்த கீரையாகும்.

அகத்தியர் கீரை, பொன்னாங்காணி, சீமை பொன்னாங்கண்ணி என பல பெயர்கள் உண்டு. சீமை பொன்னாங்கண்ணிதான் சிவப்பு பொன்னாங் கண்ணி என்று அழைக்கப்படுகிறது. வீட்டின் தோட்டத்தில் இதை வளர்க்கலாம். பூந்தொட்டியில் கூட வளர்க்கலாம். இக்கீரையில் சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து, தேகத்தை தங்க நிறமாக்கும் தங்கச்சத்து ஆகிய சத்துக்கள் நிறைய உள்ளன. விட்டமின் சி அடங்கியுள்ளது. இரத்தத்தை சுத்தப்படுத்த உதவும்

பொன்னாங்கண்ணிக் கீரையை நன்றாக அலசி சிறிதாக நறுக்கி, அதனுடன் பாசிப்பருப்பு, சின்ன வெங்காயம், சீரகம், பூண்டு மிளகுத்தூள் சேர்த்து வேகவைத்து மசியல் செய்து சாப்பிட்டு வந்தால் அசுத்த இரத்தம் சுத்தமாகும். உடலுக்கு புத்துணர்ச்சியைத் தரும். பித்த மாறுபாட்டால் உடலில் பல நோய்கள் தாக்குகின்றன. தலைவலி, மஞ்சள் காமாலை, ஈரல் பாதிப்பு, கண் பார்வைக் கோளாறு உருவாகிறது. இதற்கு சிவப்பு பொன்னாங்கண்ணி சிறந்த மருந்தாகும். இந்த கீரையுடன் பூண்டு, மிளகு, சின்ன வெங்காயம் சேர்த்து சூப் செய்து உணவுக்குப் பின் அருந்தி வந்தால் பித்தம் குறையும்.

அதிக வெயிலில் அலைந்து வேலை செய்பவர்களுக்கும், கணினி முன் அதிக நேரம் அமர்ந்து வேலை செய்பவர்களுக்கும், சரியான தூக்கம் இல்லாதவர்களுக்கும் கண்கள் சிவந்து காணப்படும். கண்களில் எரிச்சல் இருந்துகொண்டே இருக்கும். இவர்கள் பொன்னாங்கண்ணிக் கீரையை பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும். சிலர் ஞாபக மறதி காரணமாக நிறைய இழப்பை சந்தித்திருப்பார்கள். ஞாபக மறதியை மனிதனை அழிக்கும் கொடிய வியாதிக்கு ஒப்பிடலாம். இவர்கள் நினைவாற்றல் அதிகரிக்க பொன்னாங்கண்ணி சூப் சிறந்த

# செம்பருத்தி தங்க புஷ்பம்



செம்பருத்திப் பூவை சீனாவும் இந்தியாவும் தங்கள் நாட்டு பூ என வருணிக்கின்றன. ஆசியாவே இதன் பிறப்பிடம். மலேசியாவின் தேசிய மலர் செம்பருத்திதான். இந்தப்பூக்களின் நிறத்தையும், அடுக்கையும் வைத்து பலவகைகளாக பிரித்துள்ளனர். சித்தர்கள் செம்பருத்தியை தங்க பஸ்பத்திற்கு ஈடாக கூறுகின்றன. இதனால் இதை தங்க புஷ்பம் என்று அழைக்கின்றனர்.

இதனை செம்பரத்தை, சப்பாத்து எனவும் அழைக்கின்றனர்.

செம்பருத்திப் பூ அதிக மருத்துவக் குணங்களைக் கொண்டது. இவற்றின் இலை, பூ, வேர் என அனைத்தும் மருத்துவத் தன்மையுள்ளவை. அஜீரணக் கோளாறால் வயிற்றில் வாய்வுக்கள் சீற்றமடைந்து வயிற்றின் உட்புறச் சுவர்களைத் தாக்குகின்றன. இதனால் வாயிலும் புண்கள் உருவாகின்றன. இப்படி வயிற்றுப்புண், வாய்ப்புண்ணால் பாதிக்கப்பட்டவர்கள் தினசரி 5 அல்லது 10 பூக்களின் இதழ்களை சாப்பிட்டு வந்தால் புண்கள் குணமாகும்.

கருப்பை பாதிப்பினால் கருவுறாமல் இருப்பவர்களுக்கும், வயது அதிகம் ஆகியும் ருதுவாகாமல் இருக்கும் பெண்களுக்கும் செம்பருத்திப் பூ சிறந்த மருந்து.

10 செம்பருத்திப் பூவின் இதழ்களை அரைத்து மோரில் கலந்து தினமும் கொடுத்துவந்தால் வெகுவிரைவில் கருப்பையில் உள்ள நோய்கள் குணமாகும். பூப்பெய்தாத பெண்களும் பூப்பெய்துவார்கள்.

இருதய நோயாளிகள் செம்பருத்திப் பூ இதழ், வெள்ளைத் தாமரையின் இதழ் எடுத்து கஷாயம் செய்து பாலில் கலந்து அருந்தி வந்தால் இரத்தக் குழாயில் உள்ள அடைப்பு நீங்கி இருதய நோய் குணமாகும். சிலருடைய தலையில் பொடுகு, பேன், ஈர் தொல் லைகள் அதிகமாக இருக்கும். இவர்கள் எவ்வளவுதான் மருந்துகள், ஷாம்புகள் உபயோகித்துப் பார்த்தாலும் அவர்கள் முழுமையாக இந்த தொல்லையிலிருந்து விடுபட முடிவதில்லை.

இதற்கு அருமையான மருந்து செம்பருத்திதான். செம்பருத்தி பூவின் இதழ்களை அரைத்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் பேன், பொடுகு நீங்கும். செம்பருத்தி இதழ்களை நிழலில் உலர்த்தி எடுத்து வெந்தயப்பொடி, கறிவேப்பிலைபொடி கலந்து எண்ணெயில் கொதிக்க வைத்து எடுத்து போத்தலில் அடைத்து வைத்து தினமும் தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் தலைமுடி உதிர்தல் நீங்கி, முடி நன்கு வளரும்.

செம்பருத்திப் பூவை காயவைத்துப் பொடி செய்து காலை மாலை கசாயம் செய்து அருந்தி வந்தால் இரத்தம் தூய்மையடையும், உடல் பளபளப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org